திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

ஸ்ரீ மஹா விஷ்ணுவும், தேவியும்

மாலை 7] குரோதி கார்த்திகை—டிசம்பர் 1964 [மணி 3

சென்னை அரசாங்க அறநிலையப்



திருச்செந்தூர் ஷண்முக விலாசம் - கோபுரத்தோற்றம்

பொருள் அடக்கம்

1. சேக்கிழார் செய்யுளின் தெய்வமங்கலம்.
2. "பக்தி வெள்ளம்".
3. தவத்திரு தண்டபாணி சுவாமிகள்.
4. தொண்டை நாட்டுத் திருப்பதியனுபவம்.
5. சிவமூர்த்தங்கள்.
6. சேர்வராயன் மலைக்கோயில்.
7. சிவஞானபோதம்.
8. வைகுந்த ஏகாதசி.
9. பழுவேட்டரையர்.
10. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை.
11. அகிலம் புகழும் அஷ்டபுஜப் பெருமாள்.

ஆண்டுச் சந்தா ரூ. 10/- **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல். இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 7] குரோதி கார்த்திகை-டிசம். 1964 [மணி 3

சேக்கிழார் செய்யுளின் தெய்வநலம்

முன்னுரை:

மக்களாகப் பிறந்தார் பெற்றுத் துய்த்தற்குரிய இன்பங்கள் பல! அவற்றுள், சிறந்த இலக்கியம் அல்லது கவிதையினைப் படித்து உணர்ந்து மகிழும் இன்பமும் ஒன்றாகும். உலகியல் வாழ்வில் நம்மனோர் எய்தும் இன்பங்களுள், நலம் மிக்கதாய்த் தீமைக் கலப்பின்றித் தூய்மையுற்றுச் சிறந்து திகழ்வது, அழகிய இனிய கவிதையொன்றினைப் படித்துச் சுவைத்து, நாம் அடையும் இன்பமே எனலாம். "**செஞ்சொற் கவி இன்பம்**" (1:10:38) என இதனைக் **கம்பநாடர்** புகழ்ந்து கூறுகின்றார்.

கவிதையானது, நம் இளமைக்கு வலிவும் அறிவும் ஊட்டுகின்றது; முதுமையில் மகிழ்ச்சி விளைவிக்கின்றது; செல்வச் செழிப்பில் நம்மை அணிபுறுத்துகின்றது; நாம் வீட்டில் இருப்பின், நல்ல பொழுது போக்கின்பம் நல்குகின்றது; வெளியிடங்களுக்குச் செல்லின், நமக்கு உறுதுணையாக உதவி புரிகின்றது (1).

சிறந்த இனிய கவிதையினை அறிந்து சுவைக்குந் திறம், எல்லோர்க்குமே அமைந்து விடுவதில்லை. 'கண் இல்லாத குருடரும், காதில்லாத செவிடரும், வாயில்லாத ஊமையரும் உலகிற் பலர் உளராதல் போல, எத்துணையோ பலர் கவிதைச் சுவை யறிந்து களிக்குந்திறம் இல்லாதவர்களாக உலகிற் காணப்படுகின்றனர்' எனப் பேராசிரியர் **வில்லியம் ஹென்றி ஹட்ஸன்** என்பவர் குறிப்பிடுகின்றார்.

வடமொழிச் சுலோகம்:

இவ்வுண்மையினையே, பின்வரும் கருத்து அமையும்படி, ஒரு வடமொழிச் **சுலோகம்** அழகுற உணர்த்துகின்றது. "**கவிதை** என்னும் அழகிய பெண்ணானவள், இலக்கணம் கற்று வல்லவனைத்

(1) "Poetry nourisheth and instructeth our youth; delights our age; adorns our prosperity; comforts our adversity; entertains us at home; keeps us company abroad.

—Ben Jonson.

தந்தை என மதித்து அவனை அணுகுவதில்லை; தருக்கநூற் புலமையில் தேர்ந்தவனைச் **சகோதரன்** என்று கருதி, அவன்பால் நெருங்குவதில்லை. வேத அத்தியயனம் செய்தவனையும், சந்தம் ஒன்றைமட்டுமே கவனிப்பவனையும் **சண்டாளன்** போலக் கண்டு அஞ்சி வெருவி அகன்று ஓடி விடுகின்றாள்; மீமாஞ்சைப் பனுவல்களின் ஆராய்ச்சியாளனை **நபும்ஸகன்** என்று நினைத்து, அவமதித்துப் புறக்கணிக்கின்றாள்; ஆனால், காவிய அலங்கார சாத்திரம் அறிந்த நல்ல சுவைஞனைக் கண்ட மாத்திரத்திற் களிதுளும்பி மகிழ்ந்து, அவனையே தன் **கொழுநன்** எனக் கொண்டு மணந்து இன்புறுகின்றாள்'' என்பது அதன் பொருள்.

இலக்கணத்தில் வல்லவனைத் தந்தை எனக்
கொண்டனுகாள்; தருக்கம் என்னும்
உலப்பிலியல் உணர்ந்தவனை உடன்பிறந்தான்
எனக்கலவாள்; உயர்ந்த சந்த
கலத்திறமே கணிப்பவனை நனிவெருள்வாள்;
மீமாஞ்சன் நபும்ஸன் என்பாள்;
கலைத்திறஞ்சேர் கவிதைநல்லாள், காப்பியச்சீர்ச்
சுவைஞனையே காத லிப்பாள்!

—ஆசிரியர் மொழிபெயர்ப்பு (2)

கவிதையின் மாண்பு :

சிறந்த இனிய கவிதைகளைத் தேர்ந்துணர்வதும், அவற்றைத் திறம் தெரிந்து சுவைத்து மகிழ்ந்து இன்புறுவதும், நம் மனித வாழ்க்கையைப் புனிதமாக்கிக் கொள்ளும் வழிகளுள் ஒன்றாகும். ஆசிரியர் திருவள்ளுவர் அறிவுறுத்தியது போலப் 'பயில்தொறும் இனிக்கும் பண்புடையார் தொடர்பு போல, நவில்தொறும் நயம்பயக்கும் இயல்புடையன' நல்ல கவிதைகள்! 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்றது போல, நினைத்தொறும் புதிய புதிய உணர்வும், சுவையும் கருத்தும் தோற்றுவித்துக் கற்பாரைக் களிப்பூட்டுதல், கவிதையின் மாண்பாகும்.

நலஞ்சிறந்த ஓர் இனிய கவிதையானது, வாழ்வியற் கவலைகளால் வருந்தி நிற்கும் மனங்களுக்கு நோய்தணிக்கும் மருந்தாகப் பயன்படுகின்றது; உலகியற் கொடுமைகளை யுணர்ந்து சில்லிட்டுப் போன உள்ளங்களுக்குத் தென்பூட்டி உணர்வளிக்கும் காலைக் கதிரவனின் ஒளிமிகுந்த கதிர்களாக விளங்குகின்றது; கொடிய பழிநெறிகளிலேயே பழகி, இழிதகவான நடத்தையே பயின்று கறைபடிந்து போன இதயங்களுக்கு, அழுக்ககற்றும் அழகிய தெளிநீர் ஓடையாகத் திகழ்கின்றது; அறிவும் ஆற்றலும் மிக்குப் பண்பட்ட தூய அகங்களுக்கு அரும்பெறல் இன்ப விருந்தாக மிளிர்கின்றது!

மனக்கவலை தீர்க்கும் மருந்தாகும்; எல்லா
நினைப்பரிய தீக்குணமும் நீக்கும்;—தனக்கிணையில்
ஞாயிறாய்த் தெள்ளமிழ்த வான்யாறாய்த் தேனூற்றாய்
மாவிருந்தாம் நற்கவிதை மாண்பு!

—ஆசிரியர் மொழிபெயர்ப்பு (3)

சிறந்ததொரு செய்யுள்மணி:

இத்தகைய நல்ல இனிய கவிதைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் தெய்வநலம் செறிந்த சேக்கிழார் சுவாமிகள் அருளிய செய்யுள் ஒன்றை மட்டும், ஈண்டு இயன்ற பெற்றி கண்டு அமைவோம் :-

---

(2) "நைவ வ்யாகரணஜ்ஞ மேதி பிதரம்,
ந ப்ஹ்ராதரம் தார்க்கிகம்,
தூராத் ஸங்குசிதேவ கச்ச்ஹதி புநச்
சண்டாலவத் ச்ஹாந்தஸாத்;
மீமாம்ஸா நிபுணம் நபும்ஸக மிதி
ஜ்ஞாத்வா நிரஸ்தாதரா
காவ்யாலங் கரணஜ்ஞ மேத்ய கவிதா
காந்தா வ்ரீணீதே ஸ்வயம்."

—*Quoted by*
Sri V. V. S. Aiyer

(3) "The soothing power of poetry is great and its influence on our mind is vivid and sweet. To hearts eaten away by sorrow and worldly cares the reading of poetry comes as a healing **balm;** to hearts chilled by the icy hand of cruelty it appears like the warming rays of the morning **sun;** and to hearts stained with the blackest crime and the basest vice it comes as the washing water of a crystal **rill.** Ah! How lovely are the changes wrought by poetry in the mind of

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்"

எனவரும் பெரியபுராணத் திருப்பாடலைச் சிவநேயச் செல்வர்கள் அனைவரும் பெரும்பாலும் அறிந்திருப்பர். பெரிய புராணத்தின்கண் பேரொளி வீசிச் சுடர்ந்து திகழும் சிறந்துயர்ந்த செய்யுள் மணிகள் பலவற்றுள் இஃதொன்றாகும்!

செய்யுள் விளக்கும் செய்தி :

ஆளுடைய பிள்ளையார் ஆகிய திருஞானசம்பந்தர், மூன்றாண்டுச் சிறு குழந்தையாக இருந்தபொழுது, நீராடவரப் புறப்பட்ட தம் தந்தையாருடன் தாமும் சென்று, சீர்காழித் தலத்தில் பிரமதீர்த்தக் கரையில் திருத்தோணிச் சிகரம் பார்த்து, 'அம்மே அப்பா' என அழைத்துத் தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும் பிள்ளைமையினாலோ அழுத சமயத்தில், யாவருக்கும் தந்தை தாய் என இலங்கும் சிவபெருமானும் தேவியாரும் எழுந்தருளி, எண்ணரிய சிவஞானத்து இன்னமுதம் குழைத்து ஊட்டியருளிய நிலையில், அவர் அகில தேவருக்கும் முனிவருக்கும் தெரிவரிய பொருளாகும் தாவில் தனிச் சிவஞான சம்பந்தர் ஆயினார் என்னும் செய்தியினை விளக்குவது, இச் சிறந்த பெரிய புராணச் செய்யுள்!

செய்யுளின் பொருள் :

'சிவபெருமானின் திருவடிகளையே சிந்திக்கின்ற அருட்செல்வம் பெறுதற்குக் காரணம் ஆகிய நல்ல ஞானத்தையும், பிறவிக்குக் காரணம் ஆகிய மலமாயா கன்மங்களை அறவே ஒழிக்கின்ற பணி நிற்றலால் எய்தும் உயர்ந்த ஞானத்தையும், ஒப்பு இல்லாத முழுநிறைவான கலைஞானத்தையும், தேவரும் முனிவரும் கூட உணர்தற்கரிய உண்மை ஞானத்தையும், முதன்மையான தவப் பேற்றினை யுடைய ஆளுடைய பிள்ளையார், தமக்கு அம்மையப்பர் ஞானப்பால் ஊட்டியருளிய அந்நிலையிலேயே உணரப் பெற்றார்'

என்பது, மேற்குறித்த பெரியபுராணச் செய்யுளின் திரண்ட பொருள். 'நவில்தொறும் நூல் நயம் போலும்' என ஆசிரியர் திருவள்ளுவர் குறிப்பிட்டதற்கேற்ப, இச் செய்யுளை நுணுகி யுணருந்தொறும் இனிய பல சிறந்த கருத்துக்கள் தோன்றுதல் காணலாம்.

நாற்சீர் நலம் :

இச்செய்யுள் நாற்சீர்களான் இயன்ற கலிவிருத்தம். **'நாடிய சத்திநிபாதம் நாலு பாதம்'** என்றபடி, மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் என நால்வகைப்படும் சத்திநிபாதத்துள், ஆளுடைய பிள்ளையார் மேலான ஞானநிலையினை எய்துதற்குரியவராக நாலாம் சத்திநிபாதம் முற்றிய நிலையிற் சிறந்து திகழ்ந்தார் என்பதனைக் குறிப்பிக்க, ஆசிரியர் **சேக்கிழார்** பெருமான் இச் செய்யுளை நாற்சீர்களான் அமைத்தருளிய அருமைப்பாடு அறிந்து மகிழ்தற்குரியது.

சிவனடியே சிந்திக்கும் ஞானம் (1)

வீடு பேற்றின்பம் எய்துதற்குரிய தவநலம் மிக்குடையவராய்ப் பிறந்த மெய்யடியார்கட்கு, அப்பிறப்பில் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டாதலும், அத்தெய்வமும் ஏனையோர் அல்லர் சிவபெருமானே எனத் தெளிதலும் ஆகிய ஞானம் ஒருதலையாக நிகழும். ஆளுடைய பிள்ளையாருக்கு அத்தகைய ஞானம் நிகழ்ந்ததனால் விளைந்த சிந்தனையைச் **'சிவனடியே சிந்திக்கும்'** எனவும்; அச்சிந்தனையால் தொட்டனைத் தூறும் மணற்கேணி போல மேன்மேலும் சிறந்த பல நலங்கள் வளர்ந்து பெருகுதலின் **'திருப்பெருகு'** எனவும்; தான் என்னும் முனைப்புச் சற்றும் இன்றிச் சிவனருளே துணையாகக் கொண்டு ஒன்றி நின்று சிந்தித்தலின், அவ்வுணர்வினைச் **'சிவஞானம்'** எனவும் ஆசிரியர் சேக்கிழார் கூறியருளினர்.

---

man; and how profound and permanent are the moral effects it brings into his inward nature."

—Swami Vedachalam.

'சிவனடியே' என்பதில் ஏகாரம் பிரிநிலை. நம்மனோர் போல, அஞ்ஞானம் விளைக்கும் பிறபொருள்களைச் சிந்திக்காமல், ஞானம் விளைக்கும் சிவபிரான் திருவடியினையே ஆளுடைய பிள்ளையார் சிந்திக்கப் பெற்றார் என்பது கருத்து.

நற்பொருள்களைச் சிந்திக்கும் வாய்ப்பும் வசதியும் பெறுதலே ஒரு சிறந்த நற்பேறு ஆதலின், சிந்தித்தலையே **'திரு'** என்றார்.

இறைவன் சிந்திப்பரியவன், சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிபவன், சிவஞான சித்தியார் "சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க வந்திடும் அவ் ஒளிபோல மருவி, **அரன்** உளத்தே வரவர வந்திடுவன்" எனக் கூறுதற்கேற்ப, தன்னை இனிது சிந்தித்திருப்பார் உணர்வின்கண் சிவபரம்பொருள் படிப்படியே வந்து அமர்ந்து நிலைபெற்று விளங்கித் திகழ்தலின், அச்சிந்தனையுணர்வு **'சிவஞானம்'** எனப்பட்டது.

பிற்கூறப்பெறும் ஞானங்களும் சிவஞானமே யாதலின், ஈண்டுச் 'சிவஞானம்' என்றதனை **'நல்ல ஞானம்'** என்னும் பொருளுடையதாகக் கொள்ளுதலும் அமையும். 'சிவம்' நன்மை எனப் பொருள்படும்.

பாங்கினில் ஓங்கிய ஞானம் (2):

மேற்குறித்த சிவனடியே சிந்திக்கும் சிந்தனைக்குப் பின்னே நிகழ்வதாகலானும், பவத்தினை ஒழித்தற்கு இன்றியமையாததாகலானும், இறைபணியின் நிற்றலை யுணர்த்தும் ஞானத்தைப் **'பவமதனை அற மாற்றும் ஞானம்'** எனவும்; அஃது யாகம் முதலிய கன்மப் பயன்கள் போல அனுபவ மாத்திரத்தால் அழிந்தொழியும் இன்பங்கள் போலாமல், அழியாத வீடுபேற்றின்பத்தைத் தவறாது அளிக்கவல்ல தன்மையது ஆதலின் **'பாங்கினில் ஓங்கிய ஞானம்'** எனவும் கூறினார்.

தானம் யாகம் முதலிய கன்மப் பயன்கள் விரைவில் அழிந்தொழியும் தன்மையன என்பதும், சரியை கிரியை யோகம் முதலிய இறைபணி நிற்றலினாலேயே அழியாத வீடுபேற்றின்பம் அடையலாம் என்பதும், "தானம் யாகம் தீர்த்தம் ஆச்சிரமம் தவங்கள் சாந்திவிரத கன்ம யோகங்கள் சரித்தோர், ஈனமிலாச் சுவர்க்கம் பெற்று இமைப்பளவின் மீள்வர்; ஈசன் யோகக் கிரியா சரியையினில் நின்றோர், ஊனம் இலா முத்திபதம் பெறுவர்" (276) எனவரும் **சிவஞான சித்தியார்** செய்யுளால் உணரப்படும்.

பவம் - பிறவி. அஃது ஈண்டுப் பிறவிக்குக் காரணமான ஆணவம் மாயை கன்மம் என்னும் மலங்களை யுணர்த்தியது. **அறமாற்றல்** - வேர் அறுத்தல். 'மதனுடை நோன்றாள்' என்புழி, 'மதன்' என்பது அறியாமையைக் குறிக்குமாகலின், **'பவமதனை'** என்பதற்குப் 'பிறவிக்குக் காரணமான அறியாமையை' எனவும் பொருள் கூறுவர். (பவம் + அதனை; பவம் + மதனை).

பாங்கு - முறைமை, உரிமை, பணி செய்தல், சிந்தனைக்குப் பின் நிகழும் முறைமையதாதலின் பணிசெய்தலைப் **'பாங்கு'** என்றார்.

சிந்தித்தலால் நிகழும் தொடர்பினும், பணி செய்தலாற் பெறும் தொடர்பு உரிமை மிக்கதாதல் பற்றி, அதனைப் **பாங்கு** என்றார் எனினும் அமையும்.

'பாங்கு' என்பது உரிமையும் பணி செய்தலும் குறித்தலை "ஆங்கவர்க்கே **பாங்காவோம்**. அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்" எனவரும் திருவெம்பாவைத் திருப்பாடலால் தெளியலாம்.

'பாங்கினில்' என்புழி **இல்** உருபு ஏதுப் பொருண்மை குறித்து நின்றது; 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்புழிப் போல, ஞானமானது ஓங்கிய ஞானம் ஆதற்குப் பணி ஏதுவாயிற்று.

இனி, இதனை வேறு வகையிலும் பொருள் கொள்ளலாம். 'காக்கையிற் கரிது களம்பழம்' என்புழிப்போல, **'இல்'** என்பது ஈண்டு உறழ்பொருளில் வந்த ஐந்தனுருபு எனக்கொண்டு, பிறவிப் பிணியை அறவே மாற்றுதலில் சிந்தனையைக் காட்டிலும், பணி செய்தல் ஓங்கிச் சிறந்தது எனவும் கொள்ளலாம்.

பணி செய்தலினுற் பவம் அகலும் என்னும் உண்மை, **'இறைபணி** நிற்க மல மாயை தன்னொடு வல்வினை இன்றே' எனவரும் சிவஞான போதச் சூத்திரம் (10) கொண்டு தெளியப்படும்.

தலங்கள் தோறும் சென்று இறைவனைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடுதல், ஆளுடைய பிள்ளையார் செய்த அரும் பணியாகும். திருப்பதிகம் பாடுதல் ஆகிய திருத்தொண்டின் தெளிவே, ஈண்டுப் **'பாங்கினில் ஓங்கிய ஞானம்'** என ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகளால் அழகுற விதந்து சிறப்பித்துக் குறிப்பிடப் பெற்றது.

உவமையிலாக் கலை ஞானம் (3)

எண்ணிறந்தனவாக உள்ள வேதாகமங்களையும், ஏனைய பல கலைகளையும் ஓதியுணர்தல்தானே, எத்தகையோர்க்கும் அரிதாக இருப்ப, ஓதாமலே எல்லாக் கலைகளையும் ஒருங்கே முற்றிலும் உணர்ந்ததுடன்,

> "பன்மறையோர் செய்தொழிலும்
> பரம சிவா கமவிதியும்
>
> நன்மறையின் விதி முழுதும்
> ஒழிவின்றி நவின்றனையே"

என **நம்பியாண்டார் நம்பிகள்** பாடுதற்கேற்ப, வேதாகமங்களின் வியன்பெரும் பிழிவான கருத்தின் சாரங்களை யெல்லாம் ஒருங்கே நிரந்தினிது தொகுத்துத் தம்முடைய திருப்பதிகங்களில் எல்லாம் அமைத்துப் பாடும் அரும்பெறல் ஆற்றலும் ஆளுடைய பிள்ளையார்க்கு வாய்த்தமையின், **'உவமையிலாக் கலைஞானம்'** என வியந்தோதினர் ஆசிரியர்.

'உவமையிலா' என்ற அடைமொழித் தொடர், கலைஞானத்தை மட்டுமே விசேடித்து நில்லாமல், அதனை ஓதாதே யுணர்ந்து கைவந்த ஆளுடைய பிள்ளையாரின் ஈடும் எடுப்பும் அற்ற இயல்பினையும் இனிது உணர்த்தி நின்றது.

ஏனைய உலகியற் கலைஞானங்களுக்கெல்லாம் மேம்பட்டு உயர்ந்த தத்துவ ஞானத்தினை **'உவமையிலாக்** கலைஞானம்' என உயர்த்துரைத்தார் எனினும் பொருந்தும்.

ஆளுடைய பிள்ளையார் 'பண்டை நற்றவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும் தொண்டர்' ஆகிய **சாமுசித்தர்** ஆவர். ஆதலின் அவர் முன்பு செய் தவத்தின் ஈட்டம் மிக்குடையவராகப் பிறங்கி ஒளிர்ந்தனர், எனவே முற்பிறப்புகளிலேயே அவர் கலைஞானங்களெல்லாம் கைவரப் பெற்றிருந்தார்.

செவ்வி முதிர்ந்த தாமரையின் நாள் அரும்புகளை ஞாயிறுனது அலர்த்துங்கால், முன்னுள் அலர்த்தப்பட்டு இரவிற் குவிந்திருந்த மலர்களும், அவற்றின் இடையில் தாமே விரிந்து மலரும். அது போலப் "பிரளயாகலருக்கு முன்னுணர்த்தும் தான் குருவாய் முன்" எனச் **சிவஞானபோதம்** கூறுவதுபோல, நாற்றோளும் முக்கண்ணும் கறைமிடறும் முதலியன அமைந்த தனது இயற்கை வடிவினையே குருவடிவமாகக் காட்டி, முன்னே நின்று சிவபெருமான் அருள் புரிந்த பொழுது, ஆளுடைய பிள்ளையாரது அறிவின் கண் ஏனைய ஞானங்களோடு, கலை ஞானமும் இடையே போந்து இயல்பாக மலர்ந்தது.

இக் குறிப்பினை நம்மனோர் உய்த்துணர்ந்து கொள்ளுமாறு வைப்பு முறையால் விளக்குதற் பொருட்டே, கலை ஞானம் தொடக்க நிலைக்கு உரியதாகவும், அதனை முதலிற் கூறுமல் இடையிற் கூறியருளினர் ஆசிரியர்!

இனி, இந்த ஞானங்களை யெல்லாம் ஆளுடைய பிள்ளையார் ஏனையோரைப் போலச் சாதனவகையால் ஒன்றன்பின் ஒன்ருகப் படிமுறையே யன்றி, ஒருங்கெய்தினர் என்னும் பெருவியப்பிற்குரிய செய்தியின் பெற்றி யுணர்த்துதற்கே, ஆசிரியர் இங்ஙனம் ஞானத்திறங்களை நிலை மாற்றிக் கூறி யருளினர் எனினும் அமையும்.

உணர்வரிய மெய்ஞ்ஞானம் (4):

ஆளுடைய பிள்ளையார் பெற்றுப் பிறங்கிய மெய்ஞ்ஞானம், தேவர் முனிவர் என்பவர்களாலும் இற்றென எண்ணி யுணர்தற்கும் அரிய சிறப்புடையதாகலின், அதனை **'உணர்வரிய மெய்ஞ்ஞானம்'** என விதந்து ஓதினர். "அகில தேவருக்கும் முனிவருக்கும் தெரிவரிய பொருள் ஆகும் **தாவில் தனிச் சிவ ஞானம்**" என இம் மெய்ஞ்ஞானத்தினை, ஆசிரியர் சிறந்தெடுத்துக் குறிப்பிட்டிருத்தலும் ஈண்டுக் கருதி யுணரற் பாலது.

அனுபூதி ஞானத்திற் சுட்டுணர்வு கெட்டொழிதலின், அது பற்றி **'உணர்வரிய'** என்னும் அடைமொழி புணர்த்து ஓதியருளினர் எனலுமாம்.

இனி **மெய்** என்பது சிவசத்து ஆகிய இறைவனைக் குறிப்பதாகக் கொண்டு, 'உணர்வரிய' என்பதனை இறைவனுக்கு அடைமொழியாக்கலும் ஒன்று.

'உணர்வரிய மெய்' என்பது 'பசுஞான பாசஞானங்களால் உணரப்படாத கடவுள்' எனப் பொருள்படும். "ஊனக்கண் பாசம் உணராப்பதி" என்னும் சிவஞான போதமும், "பாச ஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரன்" என்னும் சிவஞான சித்தியாரும், "பாசமா ஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலும் ஈசனை யுணர ஒண்ணுது" என்னும் சிவப்பிரகாசமும் இப்பொருளை வலியுறுத்தும்.

'உணர்ந்தார்க்கு உணர்வரியோன்' என்னும் திருச்சிற்றம்பலக் கோவையார் (8) செய்யுளில், 'ஒருகால் தன்னை உணர்ந்தார்க்குப் பின் உணர்தற்குக் கருவியாகிய சித்த விருத்தியும் ஒடுங்குதலின் மீட்டு உணர்தற்கு அரியவன்' எனவும், 'தவத்தானும் தியானத்தானும் எல்லாப் பொருள்களையும் உணர்ந்தவர்க்கும் உணர்வரியவன்' எனவும் **பேராசிரியர்** செய்திருக்கும் விளக்கமும், ஈண்டு நாம் அறிந்து இன்புறுதற்குரியது.

இங்ஙனம் உயிர்களெல்லாம் எண்ணிறந்த பல பிறவிகளாற் படிமுறையே எய்துதற்குரிய இவ்வகை ஞானங்களை யெல்லாம், இடையீடின்றி ஆளுடைய பிள்ளையார் ஒருங்கே பெற்றனராதலின் **'அந்நிலையில்'** எனவும்; இவற்றைப் பெறுதற்குரிய நிலையில் எண்ணில்லாத பல பெருந்தவங்கள் செய்து இருந்தமையின் **'தவமுதல்வர்'** எனவும் ஆசிரியர் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்தனர்.

முடிவுரை.

'எல்லையற்ற பல பொருள் நுட்பக் குறிப்புக்களை யுணர்த்திக்கொண்டு செல்லவல்ல தன்மையதாதலே, சிறந்த கவிதை எனத் தெளியப் படுதற்குரிய சீரிய சான்ருகும். சிறந்த நல்ல கவிதைச் செய்யுள் எதுவாயினும், அதனைச் சுற்றி அளவிடற்கரியதொரு பொருட்குறிப்புச் சூழ்நிலை மிதந்து கொண்டே யிருக்கும். கவிஞன் கருதியதும் கூறியதும் ஒரு

கருத்தேயாயினும், அக்கருத்தே மிக விரிந்து பரந்து, அவன் கருதாத வேறு பல இயைபுடைய நற் கருத்துக்களையும், தன்கண் பொலியத் தோற்றுவித்துக் கொண்டு திகழும்' எனப் பேராசிரியர் **ஏ. சி. பிராட்லி** என்பவர் கூறுவர் (4). அதற்கு நாம் மேலே கண்ட சிறந்த பெரியபுராணச் செய்யுள் ஓர் இனிய எடுத்துக்காட்டாகும்.

'ஒரு சிறந்த உயர்ந்த கவிதையினை, நாம் எத்தனை முறைதான் திரும்பத் திரும்பப் படித்தாலும் பாடினாலும், அதன் சுவை ஒரு சிறிதும் குன்றாமல் ஓங்கித் திகழும்'' (5) என அறிஞர் **இராபர்ட் பிராஸ்ட்** என்பவர் இயம்புவர். அவ்விலக்கணத்திற்கும் தெய்வ நலம் செறிந்த சேக்கிழார் சுவாமிகளின் மேலைச் செய்யுள், செவ்விய நல்ல எடுத்துக்காட்டு என்பதில் ஐயமில்லை. எனவே, இத்தகைய தெய்வநலம் சான்ற சிறந்த செய்யுட்களை ஓதி, நாம் அனைவரும் இன்புற்று நலம்பெறுவோமாக!

—ஆசிரியர்.

(4) "The proof of the purest poetry is that its meaning is **inexhaustible**.. About the best poetry, and not only the best, there floats an atmosphere of **infinite suggestion**. The poet speaks to us of one thing, but in this one thing there seems to lurk the secret of all. He said what he meant, but his meaning seems to beckon away beyond itself, or rather to expand into something **boundless** which is only focussed in it."

—Professor A C. Bradley,
Oxford Lectures on Poetry.

(5) "Read it a **hundred** times; it will forever keep its freshness as a petal keeps its fragrance..."

—Robert Frost.

ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள்

"பக்தி வெள்ளம்"

முன்னுரை :

'கம்பர் இராமபிரானை அல்லால் மற்றுங் கற்பரோ?' என வியந்து வினவிப் பாடினர் **நம்மாழ்வார்.** இராமபிரானின் இனிய வரலாறும், இணையற்ற சிறந்த தெய்விக இயல்புகளும், எவருள்ளத்தையும் கொள்ளைகொள்ள வல்லன. மிகவும் கற்றுணர்ந்த அறிஞர்கள், சிறிதும் படியாத பாமரர்கள் ஆகிய எல்லோருக்குமே, எல்லையில்லாச் சுவையும் இன்பமும் நல்கி, யாவரானும் மிகவும் விரும்பிப் போற்றப்படத் தக்கதாக **இராமாயணம்** இலங்குகின்றது. எத்துணையோ பன்னெடுங் காலமாகப் பல கோடிக்கணக்கான மக்களின் இதயங்களை இனிது கவர்ந்து, இணையற்று விளங்கி வருகின்றது இராமாயணம்! (1)

---

(1) "The two great epics of ancient India–**the Ramayana** and **the Mahabharata**–represent the typical Indian method of catering all together for various degrees of cultural development, from the **highest intellectual** to the simple unread and **untaught villager**. They make us understand somewhat the secret of the old Indians in holding together a variegated society divided up in many ways and graded in castes, in harmonizing their discords, and giving them a common background of **heroic tradition** and **ethical living.** Deliberately they tried to build up a unity of outlook among the people, which was to survive and overshadow all diversity...I do not know of any books anywhere which have exercised such a continuous and pervasive influence on the mass mind as these two."

—**Shri Jawaharlal Nehru**,
The Discovery of India.

திருவரங்கத் தமுதனர் :

இராமாயணம் என்னும் இணையற்ற எழில் மிக்க இதிகாசத்தினைத் திருவரங்கத்தமுதனர் என்னும் வைணவப் பெரியார், "பக்தி வெள்ளம்" என்று குறிப்பிட்டுப் புகழ்ந்து போற்றுகின்றார். "படிகொண்ட கீர்த்தி **இராமாயணம்** என்னும் பக்திவெள்ளம் குடிகொண்ட கோயில் இராமாநுசன்" என்று, அவர் தாம் இயற்றியருளிய **இராமாநுச நூற்றந்தாதியின்கண்** பாடியிருத்தல் காணலாம். "பிரபந்த காயத்திரி" என வைணவப் பெருமக்களால் மதித்துப் பாராட்டப் பெறும் இந்நூல், 'பக்திவெள்ளம்' என இராமாயணத்தினைக் குறிப்பிட்டிருப்பது, அதன் சிறப்பினை மலையிலக்கென அறிவித்து நிற்பதாகும். நம் இந்திய நாட்டு மக்களின் உள்ளங்களிலெல்லாம் ஊடுருவித் தோய்ந்து ஒன்றிநின்று, பக்தியுணர்ச்சியினை வற்றாத பெருவெள்ளம் எனப் பெருக்கெடுத்து ஓடச்செய்த பெருமைக்குரிய நூல்களுள், இராமாயணம் தலைசிறந்தது என்பதற்குத் தடையும் உண்டோ?

பழந்தமிழ் இலக்கியங்கள் :

இராமாயணம் என்னும் பக்திவெள்ளம், கம்ப நாடர் இயற்றிய கவிதைச்சுவை நிறைந்த பேரிலக்கியம் தோன்றிய பின்னர், மிகமிகப் பெரிய வற்றாத பெரு வெள்ளமாகத் தமிழ் நாட்டில் தமிழர் அனைவர் உள்ளங்களிலும் பாய்ந் தோடத் தலைப்பட்ட தெனினும், கம்பநாடர் தோன்றுதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்னருங்கூட, இராமாயணம் என்னும் பக்திவெள்ளம் தமிழ்நாட்டில் இனிது பாய்ந்து பெருகிக்கொண்டிருந்தது என்னும் உண்மை, பண்டைத் தமிழ் இலக்கியங்களால் நன்கினிது புலனாகின்றன.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படும் பழந்தமிழ்ச் சங்க நூல்களிலும் கூட, இராமாயணத்தைப் பற்றிய

10 JAN 1966
MADRAS

ஸ்ரீ காளமேகப்பெருமாள், திருமோகூர்



ஸ்ரீ காளமேகப்பெருமாள், திருமோகூர்.

செய்திகளும் கதைகளும் குறிப்புக்களும் காணப் பெறுகின்றன. சங்க காலப் புலவர்கள் தாம் பாடத் தலைப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் தகவுற விளக்குதற்கு, இராமாயண நிகழ்ச்சிகளையும் வரலாறுகளையும் ஆங்காங்கே அழகிய இனிய உவமைகளாக எடுத்துக் காட்டிப் பாடியிருக்கின்றார்கள்

எல்லோருக்கும் தெளிவுறத் தெரிந்தனவும், யாவரும் சுவைத்துவந்து விரும்புவனவும் ஆகிய செய்திகளே, இலக்கியங்களில் உவமைகளாகப் புலவர்களாற் கையாளப்படும். இவ்வடிப்படையில் ஆராய்ந்தால், மிகப்பழங் காலத்திலேயே இராமாயண வரலாறு தமிழ்நாட்டில் நன்கினிது பரவியிருந்தமை புலனாகும். இவ்வுண்மையை விளக்கும் சங்ககால இலக்கியச் சான்றுகள் சிலவற்றை மட்டும், ஈண்டுக் கண்டு இன்புறுவோம்!

அகநானூறு :

இராமபிரான் சேதுபந்தனம் செய்து இலங்கை செல்லத் தலைப்படும் முன்னர், ஒரு நாள் மாலை தன் துணைவர்களாகிய வானர வீரர்களுடன், மேலே நிகழ்தற்குரிய போர்ச் செய்திகள் குறித்து, தனுஷ்கோடியிலுள்ள கடற்கரையில், ஓர் ஆலமரத்தின்கீழ்த் தங்கியிருந்து ஆராய முற்பட்டார். அம் மாலைவேளையில், அவ்வால மரத்தின்கண் வாழ்ந்து கொண்டிருந்த பறவையினங்கள், தம் இயல்பிற்கேற்ப ஒன்று கூடிப் பேரொலி செய்தன. அஃது இராமபிரான் வானர வீரர்களுடன் கலந்து நிகழ்த்திய ஆலோசனைக்குச் சிறிது தடையாக இருந்தது. அதனால் இராமபிரான் அப் பறவைகளை நோக்கித் தம் திருக்கை அமர்த்தினார். அவ்வளவில் அப்பறவைகள் சிறிதும் ஒலி செய்யாமல், அமைதியுற் றடங்கி நின்றன.

இந்த இராமாயண வரலாற்றுச் செய்தியினை, 'ஒரு தலைவனும் தலைவியும் தம்முட் காதலித்துக் களவொழுக்கம் மேற்கொண்டிருந்த பொழுது அலர் தூற்றிய அவ்வூர்ப் பெண்டிர்கள், பின்னர் அவ்விருவரும் முறைப்படி திருமணம் செய்து கொண்ட நிலையில், அலர்தூற்ற வாய்ப்பின்றி நாவடங்கி நின்றனர்' என்னும் கருத்தினை வற்புறுத்த, உவமையாக எடுத்துக் காட்டிக் கடுவன் மள்ளனார் என்னும் புலவர் பின்வருமாறு பாடுகின்றார்:

> "வென்வேற் கவுரியர் தொன்முதுகோடி
> முழங்கிரும் பவ்வம் இரங்கும் முன்துறை,
> வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
> பல்வீழ் ஆலம் போல,
> ஒலியவிந் தன்றுஇவ் வழுங்கல் ஊரே"
>
> —அகநானூறு, 70

புறநானூறு:

சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி என்னும் கொடைவள்ளல் ஒருவனிடம் சென்று, புலவர் ஒருவர் அவனைப் புகழ்ந்து பாடினார். அவ்வள்ளல், அவர்தம் புலமை நலனையும் பாடல் நயனையும் வியந்தினிது போற்றி மிகுந்த பரிசில்களை வழங்கினன்; ஏராளமான பொன் அணிகலன்களை அளித்தான். வறுமையிலேயே பெரிதும் உழன்று கிடந்த புலவரும், அவர்தம் சுற்றத்தாரும், இதற்கு முன்னர் அத்தகைய பொன் அணிகலன்களை என்றும் எங்கும் கண்டிலர். அதனால் அவற்றைச் செய்வதின்ன தென்றறியாமல், விரலில் அணிவதைச் செவியிலும், செவியில் அணிவதை விரலிலும், இடுப்பில் தரிப்பதைக் கழுத்திலும், கழுத்தில் தரிப்பதை இடுப்பிலுமாகக் காண்பார்க்கு நகைப்புண்டாகும் வண்ணம் மாற்றி யணிந்து கொண்டு மகிழ்ந்து நின்றனராம். இச் செய்தியினை ஊன்பொதி பசுங்குடையார் என்னும் அப்புலவர் தாமே குறிப்பிடுகின்றார்.

அங்ஙனம் குறிப்பிடுங்கால் அவர், 'இராவணன் சீதையைக் கவர்ந்து தேரில் ஏற்றிக்கொண்டு வான் வழியாகச் சென்றபொழுது, இருசியமூக மலையின் அருகில், சீதைப் பிராட்டி தன் அணிகலன்களை யெல்லாம் ஒவ்வொன்றாகக் கழற்றி எறிந்து கொண்டு சென்றாள். அவற்றை அங்கு வாழ்ந்து திரிந்து கொண்டிருந்த வானர சேனைகள் கண்டு எடுத்து, அவற்றின் ஒளியிலும் அழகிலும் மயங்கி, அவற்றைத் தாம் அணிந்துகொண்டு அழகு பார்க்க முற்பட்டன. ஆனால் அணிந்து கொள்ளும் முறை அறியாமையால், அவற்றை

மாற்றி மாற்றிப் பிழைபட அணிந்துகொண்டு நகைச்சுவை தோற்றித் திகைத்து மயங்கின' என்னும் இராமாயணக் கதையினை எடுத்து உவமையாகக் காட்டிப் பாடி, உவகை விளைவிக்கின்றார்.

"மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே; அதுகண்டு
இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
அரைக்கு அமை மரபின மிடற்றுயாக் குநரும்
மிடற்றமை மரபின அரைக்குயாக் குநரும்
கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதர்அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந்தா அங்கு
அறாஅ அருநகை இனிதுபெற் றிகுமே"
—புறநானூறு, 378.

பரிபாடல் :

இராமாயணத்தில் தாடகைவதம் நிகழ்ந்த பின்னர், இராமன் அகலிகை சாபம் தீர்த்தருளிய செய்தியை யாவரும் அறிவர். இந்திரன் வஞ்சக வடிவம் கொண்டு வந்து அகலிகையினைப் புணர்ந்ததும், கவுதம முனிவர் வருதல் கண்டு பூனை வடிவம் கொண்டு மறைந்தோடியதும், கவுதம முனிவர் நிகழ்ந்த துணர்ந்து அகலிகையினைக் கல்லாகும் வண்ணம் சபித்ததும் ஆகிய செய்திகள், இராமாயணத்தில் வருவன. இவற்றை ஆசிரியர் திருவள்ளுவர் தாமும், தம்முடைய திருக்குறள் நூலில்,

"ஐந்தவித்தான் ஆற்றல்
அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி"

என்று குறிப்பிட்டருளினர். இவ்விராமாயண கதை பற்றிய குறிப்பு, பரிபாடல் என்னும் சங்கம் மருவிய நூலிலும் பயின்றுள்ளது.

பரிபாடலில் முருகனைப் பற்றிய பாடல்கள் பல வருகின்றன. அவற்றுள் திருப்பரங்குன்றம் பற்றிய பாடற் பகுதி ஒன்றில், அங்கேயுள்ள கோயிலில் அமைந்திருந்த சித்திர மண்டபத்தில், அகலிகை சாப விமோசனம் பற்றிய கதைச் சித்திரம் ஒன்றும் வரையப் பெற்றிருந்தது. கோயிலில் முருகனைத் தொழுவதற்கு வரும் அடியார்கள், அச்சித்திரத்தைக் கண்டு வியந்து மகிழ்கின்றனர்.

"இந்திரன் பூனை ; இவள்
அகலிகை ; இவள்
சென்ற கவுதமன்
சினன் உறக் கல்உரு
ஒன்றிய படிஇது
என்றுரை செய்வோரும்.."
—பரிபாடல் : 19, 50—53

கலித்தொகை :

சங்கத் தொகை நூல்களுள் மிகவும் புகழ் பெற்ற தொன்மையும் 'கற்றறிந்தார் ஏத்துங் கலி' என்னும் சிறப்பினைப் பெற்றுத் திகழ்வது கலித்தொகை என்னும் நூல். அதன்கண் 'குறிஞ்சிக்கலி' என்னும் பகுதியைப் பாடிய நல்லிசைப் பெரும் புலவர் கபிலர் என்னும் கவினூர் பெருமான். 'மலைநிலத்தில் வாழும் மதங்கொண்ட ஓர் யானையானது பூத்துப் பொலிவு எய்தி நின்று வேங்கை மரத்தினைக் கண்டு, அதனைப் புலி என மயங்கி மருண்டு, கறுவு கொண்டு அதன்மீது வேகமாகச் சென்று மோதியது. அதனல் அவ்வேங்கை மரத்தின்கண், அதனுடைய தந்தங்கள் ஆழமாகச் சென்று புதைந்து பதிந்து விட்டன. தனது நீண்ட கூரிய தந்தங்களை மீண்டும் அம்மரத்தினின்று இழுக்க முடியாமல், அவ்யானையானது அலறிக் கதறி அழுது வருந்தி ஓலமிடுகின்றது.'

இவ்வியற்கை வருணனைச் செய்தியை விளக்கிப் பாடலுறும் கபிலர், 'இராவணன் சிவபிரான் உமைப்பிராட்டியுடன் எழுந்தருளி வீற்றிருக்கும் திருக்கயிலை மலையினைப் பெயர்த்தெடுக்க முயன்று முடியாமல், அதன்கீழ் அகப்பட்டுக் கொண்டு அலறிக்கதறி அழுது ஓலமிட்ட நிகழ்ச்சியினை உவமையாக எடுத்துக் காட்டிப் பாடி உவகை கூர்கின்றார்.'

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந்து உயர்மலை இருந்தனன் ஆக,
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்ப்புகுத்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல;
உறுபுலி உருஏய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண்டு அதன்முதற் குத்திய மதயானை
நீடிரு விடரகம் சிலம்பக் கூஉய்த்தன்
கோடுபுய்க் கல்லாது உழக்கும் நாடகேள்"
—கலித்தொகை

மணிமேகலை :

செந்தமிழ் மொழியிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களுள் 'மணிமேகலை' என்பது ஒன்று. மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனர் என்பவர் இதனை இயற்றியருளினர். பௌத்த சமயக் கொள்கைகளைப் பரப்புதற்கென்றே, இந்நூல் தோன்றியது. இதன் கண்ணும் இராமாயணம் பற்றிய குறிப்புக்கள் அமைந்துள்ளன.

கோவலனுக்கும் மாதவிக்கும் மகளாகப் பிறந்த 'மணிமேகலை' யானவள், அமுதசுரபி என்னும் அரும்பெறற் பாத்திரத்தைப் புத்தர் பெருமான் அவதரித்த வைகாசிப் பூர்ணிமை நாளில், மணி பல்லவத் தீவில், கிடைக்கப் பெறுகின்ருள். அஃது அள்ள அள்ளக் குறையாமற் பெருகும் அட்சய பாத்திரம். அதனைக் கொண்டு மணிமேகலை, 'காணுர் கேளார் கால்முடப்பட்டோர் பேணுநரில்லோர் பிணிநடுக்குற்ருேர்' முதலிய ஏழைகள் யாவருக்கும் உணவு வழங்கி உதவி செய்கின்ருள். விருச்சிகன் என்னும் முனிவராற் சபிக்கப்பெற்று, யானைத்தீ என்னும் தீராத பசி நோய் எய்திப் பன்னிரண்டு ஆண்டுகள் எங்கணும் வருந்தி யுழன்ற காய சண்டிகை என்னும் கந்தருவப்பெண் ஒருத்தி, மணிமேகலை பாற் போந்து அவள் அமுதசுரபியினின்று வழங்கிய உணவை உட்கொண்டு, தீராத தன்நோய் தீரப் பெறுகின்ருள். இதற்கு முன்பெல்லாம் எத்துணை மலையளவு உணவையுண்டும் தன்பசிநோய் தணியாமல் இருந்த தன்மையினை, மணிமேகலைக்கு அவள் கூறுங்கால், 'இராமபிரான் சேதுபந்தனம் செய்த பொழுது வானர சேனைகள் கொண்டு வந்து எறிந்த பெரிய பெரிய மலைகளெல்லாம் கடலின் கண் சென்று ஆழ்ந்து மறைந்து நின்றதுபோல, மலைமலையாகத் தான் இதற்கு முன்பு உண்ட உணவெல்லாம் தன் வயிற்றுக்குள் சென்று மறைந்து அடங்கிப் பசி தணிக்காமல் ஒழிந்தன' என்று கூறியதாகச் சீத்தலைச் சாத்தனர் பாடுகின்ருர்:

"யானைத் தீநோய் அகவயிற் றடக்கிய
காயசண் டிகையெனும் காரிகை வணங்கி,
நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீர் அடைத்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லாம்
அணங்குடை அளக்கர் வயிறுபுக் காங்கு,
இட்டது ஆற்ருக் கட்டழற் கடும்பசிப்
பட்டேன் என்றன் பழவினைப் பயத்தால்"
—மணிமேகலை : 17, 7 - 14.

மதுரைமாநகர் நோக்கிப் புறப்பட்ட கோவலன், வழியிற் கவுந்தியடிகள் என்னும் சமண்சமயத் தவ மூதாட்டியாரைக் கண்டு வணங்குகின்ருன்; வணங்கித் தனக்கு நேர்ந்த துயரநிலை பற்றிக் கூறி மனம் வருந்துகின்ருன். அதுபோது கவுந்தியடிகள், 'இராமபிரானே தந்தையின் கட்டளைப் படி கானகம் சென்று, அங்கே தன் மனைவியாகிய சீதையினை இராவணனின் சூழ்ச்சியால் இழந்து வருந்திப் பலவகை இன்னல்களை அடைந்தனன் என்ருல், நம்போலும் மனிதர் எம்மாத்திரம்?' என்று கூறிக் கோவலனுக்கு ஆறுதல் உரைகள் பகர்ந்ததாக இளங்கோவடிகள் பாடுகின்ருர்:

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீ அறிந் திலையோ ? நெடுமொழி அன்ருே !"
—சிலப்பதிகாரம்.

இராமனை 'வேதமுதல்வற் பயந்தோன்' என்றும்; இராமனது வரலாருகிய இராமாயணம், மக்கள் அனைவராலும் அறியப்பெற்று நாடு முழுவதும் பரவியிருந்தமையின் 'நெடுமொழி' என்றும்; இராமன் 'தந்தைதாய் வாக்கிய பரிபாலனம்' செய்தற் பொருட்டுப் பல இன்னல்களையும் மேற்கொண்டு நின்ருன் என்பதனை யுணர்த்துத் 'தாதை ஏவலின் மாதுடன் போகிக் கடுந்துயர்

உழந்தோன்' என்றும் கூறியிருக்கும் நுட்பங்கள் நுனித்தறிந்து மகிழ்தற்குரியன.

"மீட்சி என்பது இராமன்வென் றன்னன
மாட்சியில் இராவணன் தோற்றமை மதித்தல்"
—மணிமேகலை : 27, 53—54.

எனப் 'பத்துவகை அளவைகள்' பற்றி விளக்குங்காலும்' 'மீட்சி' அல்லது பாரிசேடம் என்னும் பிரமாணம் பற்றிய உதாரணம் காட்டும் இடத்தில், இராமன் வென்றதும் இராவணன் தோற்றதும் ஆகிய செய்தியைக் குறிப்பிட்டிருத்தலும் உணர்தற்குரியது.

சிலப்பதிகாரம் :

இன்று தமிழ் மக்களிடையே பொதுவாக அனைவராலும் பாராட்டப் பெற்றுச் சிறந்து திகழ்வது, சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியம். இதனை இயற்றியவர் இளங்கோவடிகள் என்னும் தவநலஞ் சான்ற முனிவர். அவரைச் சமண சமயம் சார்ந்தவர் எனவும் சிலர் கூறுவர். அப்பெருந்தகையார் இயற்றியருளிய சிலப்பதிகார காவியத்திலும், இராமாயணத்தைப் பற்றிய இனிய குறிப்புகள் சில வருகின்றன.

கோவலன் புகார் நகரத்தை விட்டு நீங்கி மதுரைமா நகர்க்குக் கண்ணகியுடன் புறப்படுகின்றான். அவன் புகார் நகரம் விட்டு நீங்கிய நிலையில் அந்நகரம், இராமனைப் பிரிந்த அயோத்தி போலப் பெரிதும் கலங்கி வருந்திய தாகக் கௌசிகன் என்னும் அந்தணன் கூற்றில் வைத்து இளங்கோவடிகள் பாடுகின்றார்!

"பெருமகன் ஏவல் அல்லது யாங்கணும்
அரசே தஞ்சமென் றருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பேது உற்றதும்"
—சிலப்பதிகாரம்.

மேலும், சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் என்னும் பகுதியில், சேரன் செங்குட்டுவனுக்கும் கனக விசயர்களுக்கும் நிகழ்ந்த போர்த்திறம் பற்றிக் குறிப்பிடுகையில், 'தேவாசுரப்போர் 18 ஆண்டுகளும், இராம ராவணப்போர் 18 மாதங்களும், பாரதப்போர் 18 நாட்களும், செங்குட்டுவனும் கனக விசயரும் நிகழ்த்திய போர் 18 நாழிகைகளும் நடைபெற்று முடிவுற்றன என இளங்கோ வடிகள் குறிப்பிடுதலும் காணலாம்.

"செறிகழல் வேந்தன் தென்தமிழ் ஆற்றல்
அறியாது மலைந்த ஆரிய மன்னரைச்
செயிர்த்தொழில் முதியோன் செயிர்த்தொழில் பெருக
உயிர்த்தொகை யுண்ட ஒன்பதிற் றிரட்டியென்
றியாண்டும் மதியும் நாளும் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலம் கூட்டி எண்கொள
வருபெருந் தானை மறக்கள மருங்கின்
ஒருபகல் எல்லை உயிர்த்தொகை யுண்ட
செங்குட்டுவன்......"
—சிலப்பதிகாரம்

தொல்காப்பிய மேற்கோள் :

இராமபிரான் தாடகைவதம் செய்து, அகலிகை சாபம் தீர்த்து, விசுவாமித்திர முனிவர் அழைத்துச் செல்ல மிதிலைமாநகர்க்குப் போகின்றார். அங்கே வீதியிற் போய்க்கொண்டிருக்குங் கால், தற்செயலாக இராமபிரான் அரசமாளிகையின் மேல்மாடியில் உலாவிநின்ற சீதைப் பிராட்டியினைக் காண்கின்றார். சீதையும் இராமபிரானைக் காண்கின்றாள். இருவர் கண்களும் ஒன்றையொன்று சந்திக்கின்றன. இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்திக் காதல் வயப்பட்டனர். இதனை

"எண்ணரும் நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்
றுண்ணவும் நிலைபெறா துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"

"பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்."
—கம்பராமாயணம்.

எனக் கம்பநாடர், கவிதைச்சுவை பெருகக் கவின்மிகப் பாடுகின்றார். இராமன் ஜனகனின் சிவதனுசை முறித்த பின்பே சீதையைக் கண்டதாக வான்மீகி முனிவர் வடமொழியிற் பாடியிருக்கின்றார். ஆயினும், தமிழ்மொழியின் அகப்பொருள் இலக்கணம் வகுத்த முறையினைத் தழுவி, ஜனகனின் சிவதனுசை முறிப்பதற்கு முன்பே இராமபிரான் சீதையையும், சீதை இராமபிரானையும் கண்டு காதல் கொண்டு விட்டதாகக் கம்பநாடர் பாடியருள்கின்றார். கவிச்சுவையமையப் பாடும் கம்பரின் கற்பனைத் திறனுக்கு, இஃதொரு சிறந்த எடுத்துக் காட்டாகும் எனலாம்!

இங்ஙனம் கம்பநாடர் தாமே தம்முடைய மனஞ் சென்றவாறு பாடிவிட்டார் எனப் பிறரெவரும் குறைகூற இயலாவகையில், அவர்க்கு ஆதாரமும் அடிப்படையுமாக அமையத்தக்க தொரு செய்யுள் ஒன்று, தொல்காப்பியப் பொருளதிகார நூற்பா ஒன்றின் மேற்கோளாக, ஆசிரியர் நச்சினார்க்கினியர் அவர்களால் எடுத்துக் காட்டப் பெற்றிருக்கின்றது.

> " ஆள்வினை முடித்த அருந்தவ முனிவன்
> வேள்வி போற்றிய இராமன், அவனொடு
>
> மிதிலை மூதூர் எய்திய ஞான்றே
> மதியுடம் பட்ட மாக்கண் சீதை
>
> கடுவிசை வில்ஞாண் இடியொலி கேளாக்
> கேட்ட பாம்பின் வாட்டம் எய்தித்
>
> துயிலெழுந்து மயங்கினள்......"
>
> —தொல். பொருள், 54 உரை.

இன்னோரன்ன சான்றுகளால், இராமாயணம் என்னும் பக்தி வெள்ளம், தமிழ் நாட்டில் கம்பநாடர் தோன்றுதற்கும் மிகமுற்பட்ட பழங்காலத்தில் இருந்தே பெருகி வந்தமை, இனிது புலனாகும்.

கிரேக்க நாட்டுக் காவியம் :

இம்மட்டோ! இராமாயணவரலாறு மேலைநாட்டு மக்களிடையிலும் ஓரளவு எங்ஙனமோ பரவியிருந்தது எனவும் கூறலாம்! ஐரோப்பாக் கண்டத்திலேயே மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்தது கிரேக்கநாடு (Greece). கிரேக்க நாகரிகமும் கருத்துக்களும் பிறவுமே, இன்றளவும் மேலைநாட்டு மக்கள் அனைவருக்கும் மூல முதற் பொருள்களாக விளங்கி வருகின்றன.

அத்தகைய கிரேக்க நாட்டின் இணையற்ற பெருங்காப்பியம் ஆகிய இலியட் (Iliad) என்னும் நூலின் கதையில் வரும் பாத்திரங்களுக்கும் (Characters), இராமாயணம் என்னும் நம் நாட்டு இதிகாசத்தில் வரும் பாத்திரங்களுக்கும் இடையே, பலதிற ஒப்புமைத் தன்மைகள் காணப்படுகின்றன. இவ்விரு பெரு நூல்களுமே, போர் நிகழ்ச்சியினை அடிப்படைப் பொருளாகக் கொண்டுள்ளன. இரண்டிலுமே ஒருவன் மனைவியை மற்றொருவன் கவர்ந்துகொண்டு சென்றுவிடும் செய்தி கூறப்படுகின்றது.

ஒப்புமைத் தன்மை:

கிரேக்க நாட்டின் 'இலியட்' என்னும் காவியத்தில் வரும் மெனிலஸ் (Menelaus) இராமன்; ஹெலன் (Helen) சீதை; ஸ்பார்ட்டா நகர் (Sparta) அயோத்தி நகரம்; ட்ராய் நகரம் (Troy) இலங்கைமா நகர்; அகமெம்நன் (Agamemnon) சுக்கிரீவன்; பெட்ராக்ளஸ் (Patroclus) இலக்குவன்; நெஸ்ட்டார் (Nestor) ஜாம்பவான்; யுலிஸிஸ் (Ulysses) ஆஞ்சநேயன்; ஹெக்டார் (Hector) இந்திரஜித்து என்று கூறலாம்படி, ஓரளவு ஒப்புமைத் தன்மை இவ்விரு பெரு நூல்களிலும் அமைந்து கிடக்கின்றது!

முடிவுரை :

இத்தகைய சீரும் சிறப்பும் மிக்க இராமாயணம் என்னும் பக்திவெள்ளம், நம்மனோர் உள்ளங்களிலும் பெருகிப் பாய்ந்து நலம் விளைக்கும் வண்ணம், நாம் இராமபிரான் திருவருளை வழுத்துவோமாக!

[சென்னை - 'பிரசாந்தி வித்வத் மகா சமாஜம்' வழிபாட்டுச் சிறப்புக் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. 29-10-64.

—ஆசிரியர்.]

தவத்திரு தண்டபாணி சுவாமிகள்

முன்னுரை :

சென்ற பத்தொன்பதாம் நூற்றுண்டில் நம் தமிழ்நாட்டில் தோன்றிச் சிறந்து விளங்கிய சான்றோர்கள் பலர்! அவர்களுள் மகாவித்துவான் **மீனுட்சி சுந்தரம் பிள்ளை**, யாழ்ப்பாணம் **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்**, அருட்டிரு வடலூர் **இராமலிங்க அடிகள்** என்பவர்களைப் போலவே, மிகவும் புகழ்ந்து போற்றத் தகுந்த ஓர் அருளாளராகத் தலைசிறந்து விளங்கிய பெருந்தகையார், தவத்திரு **தண்டபாணி சுவாமிகள்** அவர்கள் ஆவர்.

அண்மைக் காலம் வரையில், ஒரு நாட்டின் **சரித்திரம்** என்றால், அதன்கண் ஓர் அரச மரபு தோன்றியதும், அதுபின்னர் நாளடைவில் வீழ்ச்சியுற்றதும் பற்றிய செய்திகளே பெரும்பாலும் இடம்பெறும். அரசன் ஒருவன் பட்டத்துக்கு வந்து முடிசூடிக்கொண்டது பற்றிய விவரங்களும், அவன் காலத்தில் நிகழ்ந்த படையெடுப்புகளும் போர்களும் அவற்றிற்கான காரணங்களும் என்பன பற்றிய செய்திகளே, சரித்திர நூல்களில் மிகுதியாகக் கூறப்பட்டிருக்கும் நாட்டு மக்களின் சமய இயல் - சமூக இயல் - ஒழுக்க இயல் முதலியன பற்றியோ, பொதுமக்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய மற்றும் பல இன்றியமையாத கூறுகள் பற்றியோ, அண்மைக்காலம் வரையிற் சரித்திர நூல்களின் ஆசிரியர்கள் சிறப்புற எடுத்து விளக்குவதில்லை (1).

ஆனால், இந்நாளில் ஒருநாட்டின் வரலாறு எங்ஙனம் எழுதப்படல் வேண்டும் என்பது குறித்து, அறிஞர்களிடையே புதிய கருத்தும், உணர்வும், எழுச்சியும் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. அத்தகைய புதிய அடிப்படைகளில் தமிழ் நாட்டு வரலாறு எழுதப்படுங்கால், சென்ற 19-ஆம் நூற்றாண்டு பற்றிய வரலாற்று நூல்களில், சிறப்பிடம் பெறத்தக்க பெரியவர்களுள், தவத்திரு **தண்டபாணி சுவாமிகள்** தலைசிறந்த ஒருவர் ஆவர் என்பதில் தடையில்லை.

தவத்திரு தண்டபாணி சுவாமிகள் அவர்கள், திக்கெலாம் புகழும் **திருநெல்வேலிப்** பதியில், சைவ வேளாண் மரபில், **செந்தில் நாயகம் பிள்ளை** என்னும் பெரியவருக்கும், **பேச்சி முத்து அம்மை** என்னும் பெருமாட்டிக்கும், 1839-ஆம் ஆண்டில் அருமைத் திருமகனாராக அவதரித்தார். இளமையில் இவருக்குத் தாய் தந்தையர்கள் இட்ட பெயர் "**சங்கர லிங்கம்**" என்பது.

இவர் முருகப் பெருமான்பால் மிக்க பேரன்பு வாய்ந்தவராய், அவரையே தமது வழிபடு கடவுளாகக் கொண்டிருந்தமையினால், **முருகதாச சுவாமிகள்** எனவும்; திருப்புகழ் பாடியருளிய ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளிடம் எல்லையில்லாத அன்பும் ஈடுபாடும் உடையவராய், அவரைப் போலவே அரிய இனிய சந்தச் செய்யுட்களை எளிதாகப் பாடும் ஆற்றல்

---

(1) "The proper history of a nation is **not** the story of the rise and fall of royal **dynasties,** nor that of frequent **invasions,** and constant **wars,** but that of the steady growth of the people in **social, moral** and **religious** ideals and their ceaseless attempts to realise them in actual life.

Hence the work of the historian of a nation, as I understand it, is chiefly concerned with the construction of pictures of how the people, age by age, ate and drank, how they dressed and decorated themselves, how they lived and loved, and how they worshipped their gods and solved the mysteries of human existence."

—Prof. **P. T. Srinivasa Iyengar,** M.A.,
Pre-Aryan Tamil Culture.

பெற்று விளங்கியதனால், **திருப்புகழ்ச் சுவாமிகள்** எனவும்; திருநீறு பூசி உருத்திராக்கம் பூண்டு கௌாடை யுடுத்துக் கையில் தண்டு ஒன்றும் ஏந்திப் பழநியம் பதியில் எழுந்தருளி வீற்றிருக்கும் ஸ்ரீ தண்டாயுதபாணிப் பெருமான் போல யாண்டும் திருவுலாப் புரிந்து போந்தனராதலின் **தண்டபாணி சுவாமிகள்** எனவும் சிறப்பித்துத் தமிழ் மக்களாற் பெரிதும் பத்திமையுடன் போற்றப்படுபவர் ஆயினர்! எண்ணவும் இயலாத கடினம் மிக்கனவும், அதியற்புத நலங்கள் பலனுவாய்ந்தனவும் ஆகிய 'வண்ணம்' என்றும் அரிய அழகிய தமிழ்ச் செய்யுள் வகைகளுக்கு இலக்கணம் வகுத்து, அவற்றைப் பாடுதலில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இலராக ஒளிபரப்பி இயங்கி நின்றதனால், இவரை **மகான்** எனவும் **வண்ணச் சரபம்** எனவும் தமிழறிஞர்கள் வியந்து போற்றி மகிழ்ந்தனர்.

சமகாலத்துச் சான்றோர்கள்:

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், அருட்டிரு இராமலிங்க அடிகள், பழநியம்பதி மாம்பழக் கவிச்சிங்க நாவலர், புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் போன்ற பல சான்றோர்கள், தவத்திரு தண்டபாணி சுவாமிகளின் சமகாலத்தவர்களாக விளங்கியிருந்தனர். அவர்கள் அனைவரும் நம் சுவாமிகள்பாற் பேரன்பு மிக்கவர்களாக விளங்கினர். நம் சுவாமிகளும் அவர்களைப் பெரிதும் உவந்து பாராட்டியிருக்கின்றனர்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பற்பல தலபுராணங்களை அற்புதமாகப் பாடி முடித்தவர் என்றும், மாயூரத்தில் தாமும் அவரும் சந்தித்தனர் என்றும், கருத்து வேறுபாடு அணுவளவும் நிகழ இடமின்றி, மிகவும் மகிழ்ச்சியுடன் அவர் தம்முடன் நட்புரிமை பூண்டு ஒழுகினர் என்றும் குறித்துள்ளார்.

தும்பியே நிகர்மீ னாட்சி
சுந்தரப் பெயர்ப்பா வாணன்

பம்பிய தலபு ராணம்
பலபல பாடித் தீர்த்தோன்!

அம்பிகை மயூரம் ஆகி
அரனைப்பூ சித்த ஊரில்

வெம்பிணக் கணுவும் இன்றி
மிகக்களித்து உறவா னானே!

இங்ஙனமே அருட்டிரு இராமலிங்க அடிகளார் பேரன்பு மிக்கவர் - நெஞ்செலாம் உருகப் பாடுபவர் - பெருங்குண நிதியம் போன்றவர் - இறையருட்பேறு எய்துதலில் எல்லையிலா வேட்கை வாய்ந்தவர் என்றும்; அவரைத் தாம் மூன்று முறைகள் சந்தித்து அளாவளாவிப் பேசி மகிழ்ந்திருக்கின்றனர் என்றும்; இருவருடைய கருத்தும், கொள்கையும், அனுபவங்களும் பெரிதும் ஒத்தே இருந்தன என்றும் சுவாமிகள் பாடுகின்றார்.

கருங்குழி நகரம் தன்னிற்
கருணிக குலவே ளாளர்

அருங்குடிப் பிறந்த அண்ணல்;
ஆடக சபைப்பி ரான்பால்

நெருங்குபே ரன்பிற் சேர்த்தோன்;
நெஞ்செலாம் உருகப் பாடும்

பெருங்குண நிதியம் போல்வான்;
பிழையில்பே றுறவேட் டோனே!

அவனுடன் மூன்று காலம்
அளவளாய்ப் பேசி யுள்ளேன்

எவளவும் பேதம் இன்றி
என்கருத்து இசைந்தே சொன்னான்!

ஸ்ரீமத் **தாயுமான சுவாமிகள்** தாம், பிற்றை நாளில் **இராமலிங்க அடிகளார்** எனத் தோன்றியருளினர் என்பது இவர் துணிவு. இவ்வாறே யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ **ஆறுமுக நாவலர்** பெருமான் அவர்கள், தமது முன்னைப் பிறவியில் 'உச்சிமேற் புலவர் கொள்பவர்' எனத் தமிழறிஞர்கள் புகழ்ந்து போற்றிவரும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் பெருந்தகையாகப் பிறங்கி யிருந்தவர் என்பதும் இவர்தம் கருத்து.

அருமைத் தமிழ்த்தாயு
மானபிள்ளை தாமே

பெருமை இராமலிங்க
பிள்ளை; - பொருவிலதாக்

கூறும் உரையாற்
குலவுநச்சி னார்க்கினியர்

ஆறு முகநா வலர்

பழநியம் பதிக்கு அருகில் வாழ்ந்து வந்த **மாம்பழக் கவிச்சிங்க நாவலர்** தம்மைச் சந்தித்துப் பழகித் தம்பாற் பேரன்பு பூண்டு நின்றவர் என்றும்; தம்மை அவர் பலவாறு புகழ்ந்து போற்றுவர் என்றும், தற்புகழ்ச்சியாதல் கருதி அப்புகழுரைகளைச் சொல்லிக் கொள்ளத் தாம் விரும்பவில்லை என்றும், சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

தண்டணி கரத்தெங் கோமான்
தறுகிய சயிலப் பாங்கர்

வண்டமிழ்ப் புலமை சான்ற
மாம்பழக் கவிச்சிங் கம்தான்

விண்டதியான் உரைக்க மாட்டேன்
வெண்ணிறக் கமல மீதோர்

ஒண்டகை அனம்போல் வாழ்வாள்
உள்ளம்நன் குணர்ந்த வாறே!

சென்னையில் அக்காலத்திற் சிறந்து விளங்கிய புலவர் பெருமக்களுள், மகாவித்துவான் **காஞ்சிபுரம் சபாபதி முதலியார்** என்பவரும், புரசைப்பாக்கம் **அட்டாவதானம் சபாபதி முதலியார்** என்பவரும் மிகவும் புகழ் வாய்ந்திருந்தவர்கள். முன்னையவர்தாம் தேவார அடங்கன் முறையினை ஓலையேடுகளினின்று பரிசோதித்துத் திருத்தமுற அச்சிற் பதிப்பித்து உலகுக்கு வழங்கிய பெருமைக்கு உரியவர்; இராமலிங்க அடிகளார் சிறு பிள்ளையாக இருந்தபோது, இவரிடமே கல்வி பயில அனுப்பிவைக்கப் பட்டனர் என்பர்; இவர் நம் சுவாமிகளை விட வயதில் முதியவராகப் பழுத்த பழமாக அப்பொழுது வாழ்ந்து வந்தார். பின்னையவர் பல நூல்களின் ஆசிரியரும், மேற்குறித்த பெருந்தகையாரின் மாணாக்கரும் ஆவர்.

சென்னைக் கந்தகோட்டத்து முருகனைக் குறித்துப் பிள்ளைத்தமிழ் பாடி அரங்கேற்றியபோது, இவ்விரு பெரும்புலவர்களும் வருகைதந்து சிறப்பித்தனர். காஞ்சிபுரம் சபாபதி முதலியார் அவர்கள், ஷை பிள்ளைத்தமிழ் அரங்கேற்றத்தின்போது பல வினாக்களை எழுப்பிச் சுவாமிகளை விளக்கங்கள் கேட்டனர்; அதுபோது அவர் 'அருந்தவர்பாற் பேசும் முறை பிழைத்து இரண்டொரு சொல்' சொல்லவும் நேர்ந்தது. எனினும் சுவாமிகள் அவரைத் தவறாகக் கருதாமல் தக்க விடைகள் கூறி மகிழ்வித்தனர். மேலும் 'முதலியார் செய்த வாதம் மிகவும் தகுதியுடையதே, அவருடைய பெருமையினை யான் நன்கு அறிவேன். அவரை எளியவராக எண்ணி விடாதீர்கள்! அவர் **துரோணாசாரியர்** போன்றவர். அவர் மாணவர் ஆகிய அட்டாவதானம் சபாபதி முதலியாரோ, **காண்டீபன்** (அருச்சுனன்) போன்ற சிறந்த புலமை வீரர்' என்றும் நம் சுவாமிகள் குறிப்பிடுகின்றார்கள்.

அன்னவனும் நல்லறிரு வாகிஎனச்
சபை அறிய அறைந்தான் உண்மை!

தன்னவினும் கொடியதய்யச் சந்தத்தில்
வாதுசெய்த தகவின் மேன்மை

என்னகம்நன் கறியும்; அவன் எனையறிவான்;
அவன் எளியன் என எண்ணேன்மின்;

முன்னமர்செய் பாரதத்தில் துரோணனையே
நிகரும்ஒரு முதியோன் தானே! (1)

கற்றதன்மா ணாக்கர்களிற் றலைவனே
ஆம்புரசைக் கவிஞன் தன்னை

உற்றலங்கா ரப்படுத்தும் படிவிடுத்தான்;
முதல்நாளில் ஊமை போன்றான்

விற்றலைமைக் காண்டீபன் எனவிளங்கி
னான்; மிகவும் வியந்தேன் அம்மா! (2)

சத்தியணி கரக்கும் அரன் திருவருளால்
அட்டாவ தானம் செய்யும்

புத்தியினன் ஆகும்அவன், அவையறிய
என்னைமிகப் புகழ்ந்தான்; 'அந்தோ

இத்திருநூற் கவித்தொகைமுன் விதித்தவன்
ஆயிரம்எனச் சொற்றிலனே' என்றான்;

பத்தியினால் நவரசமும் துலங்கமுறைப்
படிஉரையும் பகர்ந்தான் நன்றே! (3)

இங்ஙனமே சென்னையில் வாழ்ந்திருந்த அஷ்டாவதானம் பூவை **கலியாண சுந்தர யதீந்திரர்,** வண்ணக்களஞ்சியம் **நாகலிங்க முனிவர்,** அரன்வாயல் வேங்கட சுப்புப் பிள்ளை, திருநெல்வேலி அழகிய சொக்கநாதப் பிள்ளை, தேவகோட்டை வன்றொண்டன்

செட்டியார் போன்ற சான்றோர்கள் பற்பலர், சுவாமிகளிடம் மாணவர்களாகப் பழகிப் பயின்று, நலங்கள் பல பெற்றுச் சிறந்து திகழ்ந்தனர். இன்னோரன்ன செய்திகள் பலவும் நம் சுவாமிகளின் அருமை பெருமைகளை நன்கினிது உணர்த்துவன ஆகும்.

முருகபக்தி :

சுவாமிகள் முருகப் பெருமான் பாற் பேரன்பு பூண்டவர். 'முனிவர்களில் அகத்தியரும், மலைகளிற் பொதியமலையும், படைகளில் வேற்படையும், கொடிகளில் சேவற்கொடியும், மொழிகளில் தமிழ்மொழியும்போல, **முருகன்** தெய்வங்களுள் தலைசிறந்த பெருமான்' என்று சுவாமிகள் சுவைபெருகக் கவிபாடுவர்.

> காமுகரிற் சசிபோலும், கடவுளரிற்
> குகன் போலும், கவினர் தீஞ்சொற்
> பாமுதிர்பல் கலைப்பெருக்கில் தமிழ்போலும்,
> கொடைநலத்திற் பரமன் போலும்,
> தீமுனைஆ யுதத்திரளில் வேல்போலும்,
> பதாகைகளிற் சேவல் போலும்,
> மாமுனிவர் குலத்தில்அகத் தியன்போலும்,
> மலையினத்தில் மலயம் மாதோ.
>
> [சசி-சந்திரன், பரமன்-சிவபெருமான்,
> பதாகை-கொடி, மலயம்-பொதியமலை.]

ஒருசமயம் சுவாமிகள் இராமநாதபுரம் சமஸ்தானத்துக்குச் சென்ற போது, சேதுபதி மன்னர் அவர்கள், "**கண் விண் பெண் பொன்பண் கனி**" என்னும் ஈற்றடியைக் கொடுத்துப் பாடியருளக் கேட்டார். அந்த ஈற்றடியை முருகனுக்கே பொருந்தும்படி வைத்துச் சுவாமிகள் ஆசுகவியாகவும், நிரல்நிறை என்னும் அணிநலம் அமையவும், ஓர் அழகிய வெண்பாப் பாடியருளினர்.

> முருகனுக்கு மூவாறு முன்பு தொட்டுக்
> காத்தல்
> உருகுமயல் ஈதல் உறுபூண்—பெருகுசெவி
> யுண்மகிழ்ச்சி சேர்ப்ப துலகதனைச்
> சூழவிடல்
> கண்விண்பெண் பொன்பண் கனி

[முருகனுக்கு மூவாறு கண்கள்; அவன் முன்னொரு காலத்தில் தொட்டுக் காத்தருளியது விண் உலக அரசுரிமை; அவனுக்கு உருகும் மயல் ஈபவள் வள்ளியம்மையாகிய பெண்; அவனுக்கு ஏற்ற அணிகலன்கள் பொன்; அவனுடைய செவிகளுக்கு மகிழ்ச்சியை விளைவிப்பது அடியார்களின் துதிப்பாடல் ஆகிய பண்; அவனை உலகைச் சூழ்ந்து வலம்வரச் செய்தது மாம்பழம் ஆகிய கனி என்பது பொருள்.]

சமய சமரசஞானம் :

இங்ஙனம் சுவாமிகள் முருகன்பாற் பேரன்பும் ஈடுபாடும் மிக்கு விளங்கினராயினும், சமயக் காழ்ப்பு சிறிதும் இன்றிச் சமரச நெறியைப் போற்றுதலில் சுவாமிகள் பெரிதும் கருத்தூன்றி யிருந்தனர். சமய வாதங்களையும் பேதங்களையும் நம் சுவாமிகள் அறவே வெறுத்தொதுக்கினர். 'என்னுடைய தெய்வந்தான் பெரிது என்றுகூறி ஏனையோர் தெய்வங்களை இகழ்பவன் பக்குவம் சிறிதும் எய்தாதவன். எல்லாத் தெய்வவழிபாடும் முடிவில் ஒன்றேயாம் என்னும் சமரசவுணர்வு கைவந்தவன் பக்குவம் மிக்கவன். தொடக்க நிலையில் பலரும் பலவேறு தெய்வ வழிபாடுகளைக் கைக்கொள்ளுவராயினும், அனுபவ முதிர்ச்சி நிலையில் எல்லாம் ஒன்றேயாக முடியும்' என்பது சுவாமிகளின் துணிவு.

> என்தெய்வம் பெரிதென்பான் கன்னி
> யொப்பான்
> தெய்வமொன்றே எனத்தேர்ந் துள்ளோன்
> குன்றென்ன முலைபருத்துக் கொண்
> கனுக்காம்
> பருவமுறு குமரி போல்வான்...
> எக்கடவுட் கெவருரிமை பூண்டுற்றாலும்
> எனக்கு அதுவும் மதமுடிவில் ஏகந்தானே...

சைவ வைணவ சமரசஞானம் கைவந்து விளங்கிய நம் சுவாமிகள், உடல் முழுதும் திருநீறு பூசியதுடன், சிலகாலம் இருதோள்களிலும் தென்கலை வடகலைத் திருநாமக் குறிகள் அணிந்து, கழுத்தில் உருத்திராக்கமாலையோடு துளசிமணி மாலை தாமரைமணி மாலைகளும் ஒருங்கே யணிந்துகொள்ளும் இயல்பினராக இருந்தனர். சைவம் வைணவம் சாக்தம்

காணபத்தியம் கௌமாரம் சௌரம் என்னும் அகச்சமயங்களும், சமணம் பௌத்தம் பார்சியம் சீக்கியம் இசுலாமியம் கிறித்துவம் என்னும் புறச்சமயங்களும் ஆகிய அனைத்தையும், உயர்வு தாழ்வு வேறுபாடுகள் கருதாமல், இவர் ஏற்றபெற்றி போற்றி வந்தார்.

ஆதியிற் கவுமா ரத்தில்
 அழுந்துபு கிடந்து பின்னர்
வேதியின் விதித்த ஆறு
 விதிநெறிப் பொதுவன் ஆகி,
ஏதில்புன் நெறியோ ரேனும்
 இரங்கும் நெஞ் சினரேல் அன்னோர்
ஓதிடும் தேவும் நம்தே
 உருவென உணர்ந்திட் டேனே.

சீவகாருணிய ஒழுக்கம்:

சுவாமிகள் தம்முடைய உயிர்போற் பெரிதும் வற்புறுத்திப் போற்றிய கொள்கை, சீவகாருணியம் ஆகும். பிற உயிர்களைக் கொல்லுதலும், அவற்றின் புலாலைப் புசித்தலும் ஆகிய இரண்டையும், சுவாமிகள் அறவே அருவருத்து வெறுத்துக் கடிந்துரைத் துள்ளனர். 'கொலை புலையிற் சாராமல் இரக்கம் மிக்க நெஞ்சம் உடையவராக இருப்பவர் யாவராயினும், அவர்கள் பெரியவர்கள். அத்தகையவர்கள் எந்தச் சமயத்தைச் சார்ந்து, எத்தெய்வத்தை வழிபடினும், அத்தெய்வங்களை யானும் வழிபட இசைவேன்' என்று சுவாமிகள் பாடுகின்றார்.

பன்னிரண்டு சமயத்தும் கொலைபுலையிற்
 சாராத பான்மை யோராய்த்
துன்னிவளர் பெரியோர்கள் வழிபடுமெத்
 தேவரையும் துதித்தல் செய்வாம் ...

சுவாமிகள் சீவகாருணிய ஒழுக்கத்தினை உயிர்போலப் போற்றியவ ராதலின், தமது தல யாத்திரையில் திருவொற்றியூர் சென்றபோது அங்கு வட்டப் பாறை யம்மனுக்கும், பழநிக்குச் சென்ற போது அங்கே இடும்பனுக்கும் உயிர்ப் பலி நிகழ்வது அறிந்து, பெரிதும் வருந்திப் பின்வரும் அழகிய பாடல்களைப் பாடியருளினர் !

ஒற்றியூர்க் காளீ! உனக்கேனோ
 ஊன் விருப்பம்?
வெற்றிமழு வோன்விருப்பு வேண்டாமோ?
 —சிற்றுயிரைக்
கொல்வார்க்கும் இன்பம் கொடாதான்
 அவன்கண்டாய் !
நல்வார்த்தை சொன்னேன்இந் நாள் (1)

பாடும் அன்பர்போற்றும் பழநிப்
 பாதியில்நின்று
ஆடும் இடும்பா ! அறையக்கேள் !
 - நீடும்
கொலைகண்டு மாமிசம்உட் கொண்டுவக்க
 வேண்டாம்!
நிலைகண்டு மெய்யருளில் நில் (2)

வேதம் சொல்லினும் விரிஞ்சன் ஆதியர்
நேரிற் கூறினும் நீசர்க்கு உரித்தாம்
கொலைபுலை செய்தல் கூடாது அன்றே (3)

எனப் பலவிடத்தும் சுவாமிகள் சீவகாருணியத்தினைப் பறையறைந்து வற்புறுத்திப் பாடுவர். சுவாமிகளுக்குச் சீவகாருணிய நெறியில் எத்துணை அழுந்திய பற்று இருந்தது என்பது, 'அவண் எண்ணுயிரம் பேர்களும் ஆவி விட்டனராம். அதை விரித்து விவரமாச் சொல்வார் சிலர், அது வீணே,...' என்றும்; **சிவஞான சுவாமிகள், கச்சியப்ப முனிவர்** பற்றி 'நச்சிய ஆயுள் நாளெலாம் தமிழ்க்கே நன்கு தத்தம் செய்தார்' எனப் புகழ்ந்து போற்றினும், அன்னோர் 'மெச்சியே வேள்விக் கொலையையும் துணிந்து விளம்பினர். அது பெருவியப்பே...' என்றும்; **'கொலை மறுத்தல்'** என்னும் அரிய நூலை இயற்றியருளிய பேரூர்ச் **சாந்தலிங்க சுவாமிகள்** தம் நூலுக்கு ஏற்பக் கொலையனைத்தையுமே முற்றிலும் கடிந்துரைக்க வேண்டியராக இருந்தும், ஒரு சிலரின் பகைமை ஏற்படும் என்று அஞ்சி, வேள்விகளில் நிகழும் கொலையினைமட்டும் கண்டித்து ஒதுக்காமல் ஒப்புக்கொண்டவர் போல, நெகிழ்ந்து உரைத்து மேம்போக்காகச் சென்று விட்டனர் என்றும் ; சுவாமிகள் குறிப்பிட் டருளுதல் கொண்டு எண்ணி யுணரலாம்.

வேள்விப் பெரும்பகையாம்
வீரசைவ சித்தாந்தக்
கோள்விட்டி டாத
குருவாம் அவன்நூலில்,
வாள்விப் பிரர் செய்கொலை
மட்டும் ஒப்பல் ஏன்? என்னும்
கேள்விக்கு எதிர்சொற்
கிளத்துமாறு ஓர்ந்திலனே

'ஆதலின் வடலூரார்க்கும் **அடியனேன்** தனக்கும் இந்தப் பூதலத்தினர் ஊன் உண்ணாப் புதுமை செய்திடலே போதும். சாதல் எய்தினரை மீட்கும் தகை, இதில் தாழ்வேயாம்' என்று சுவாமிகள் குறிப்பிட்டிருப்பதும் ஈண்டு உணரற்பாலது. இவ்வாற்றால், '**கொல்லா விரதம்** குவலயம் எல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்லுவது என் **இச்சை** பராபரமே' என்ற தாயுமான சுவாமிகள் போலவே, நம் சுவாமிகளும் சீவகாருணிய நெறியினைப் பரப்புதலில் எல்லையில்லா இச்சையும் முயற்சியும் மேற்கொண்டிருந்தமை தெளியலாம்.

சுவாமிகளின் நூல்கள் :

'முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக் காட்ட, அளவிலா ஆர்வம் பொங்கி, மன்பெருங் காதல்கூர' எனச் சேக்கிழார் சுவாமிகள் பாடுதல் போல, முருகப் பெருமானைப் பேரன்பு மீக்கூர உபாசித்து வழிபடும் பேறு பெற்றவர் நம் சுவாமிகள்! எட்டு வயது இளம்பிள்ளையாக இருந்த பொழுதே, முருகன் திருவருள் சுவாமிகளுக்கு முழுவதும் உரியதாயிற்று. முயலாமலே திடுமென இங்ஙனம் அருட்பேறு எய்தும் அரும்பெறற் பெருந்தகையோர்களைக் "**கிருபாசித்தர்**" என்பர் (2).

சுவாமிகள் அத்தகைய ஒரு சான்றோர் போலும்! அதனாலேயே சுவாமிகளுக்கு எட்டாம் அகவையிலேயே முருகன் திருவருளும், இயல்பாகக் கவி பாடும் இணையிலா ஆற்றலும், மிக எளிதே கிடைப்பனவாயின. 'கவிதை பாடும் ஆற்றலானது கல்வியினாலோ கற்பனையினாலோ மட்டும் அமைவதன்று; இறைவனை முறையாக உபாசனை செய்து வழிபடும் திறனாலேயே, அஃது உண்டாகி வளர்ந்து செழித்துச் சிறந்தோங்கும்' எனச் சுவாமிகள் ஆங்காங்கே பலவிடத்தும் நமக்கு வற்புறுத்தி அறிவுறுத்தருள்வர்.

நல்லு பாசனை இன்றிய நாவலர்
சொல்லும் நாண இருண்டுள சூழல்வாய்
வில்லு டன்புகும் வேடனும் வேறுயிர்க்
கொல்லும் நீர்மை தவிர்ந்ததக் குன்றமே

எனப் **புலவர் புராணம்** பொதியாசலப் படலத்தில் சுவாமிகள் பாடியிருத்தல் போல, முருகன் உபாசனையினால் சிறந்த கவிபாடும் திறம்பெற்று, 'வண்ணச் சரபம்' என விளங்கியவர் நம் சுவாமிகள்.

சுவாமிகள் இயற்றிய நூல்கள் பலப்பல. பாடிய பாடல்களோ ஏறத்தாழ **நூறாயிரம்** ஆகும் எனலாம். சுவாமிகளின் நூல்களிற் பெரிதும் இந்நாளிற் பரவி யிருப்பது **புலவர் புராணம்** என்னும் நூல் ஆகும். தமிழில் இதற்கு முன்னர் இத்தகையதொரு நூல் தோன்றியதாகத் தெரியவில்லை. தமிழில் எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்துவகை இலக்கணங்களே இருந்து வந்தன. சுவாமிகள் '**அறுவகை இலக்கணம்**' என ஒன்று வகுத்துள்ளார். தொல்காப்பியம் முதலிய பழந்தமிழ்

(2) "There is another class of devotees, known as **kripasiddha**, that is to say, those on whom the grace of God descends all of a sudden and who at once attain His vision and knowledge. Such people may be likened to a room that has been dark a thousand years which, when a lamp is brought into it, becomes light immediately, not little by little.

– The Gospel of Sri Ramakrishna, P.106

நூல்களில் 'செய்யுள் இயல்பு' ஓரளவு விளக்கப் பெற்றிருப்பினும், 'வண்ணச் செய்யுள்' குறித்துப் போதிய விளக்கங் கள் இல்லாமையின், சுவாமிகள் அதனை விரித்து விளக்கி யருளினர், தில்லைத் திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், பழநித்திருவாயிரம், திருவாமாத்தூர்த் தலபுராணம், குருபரதத்துவம், மனு நெறித் திரு நூல் முதலிய பற்பல நூல் களைச் சுவாமிகள் இயற்றியுள்ளனர். தாம் யாத்திரை சென்று தரிசித்து வணங்கிய தலங்களுக்கெல்லாம் பாடலும் பதிகமும் நூல்களும் மிகப்பல இயற்றி யிருக்கின்றனர் நம் சுவாமிகள்!

முடிவுரை :

இத்தகைய நூல்களை யெல்லாம் கற்றுப் பயனடையவும், விழுப்புரத்திற் கடுத்துள்ள **திருவாமாத்தூர்** என்னும் தேவாரத் திருப்பாடல் பெற்ற சிவதலத் தின்கண் அமைந்துள்ள சுவாமிகளின் **சமாதிக்** கோயிலினைக் கண்டு வணங்கி நலமடையவும், நாம் அனைவரும் முற்படு வோமாக!

[சென்னையில் நிகழ்ந்த சுவாமிகளின் நினைவு நாள் விழாவை (1-11-64) ஒட்டி, அன்புருவப் பெருந்தகை ஆகிய நம் **அற நிலைய ஆணையர்** அவர்கள் விரும்பிப் பணித்த வண்ணம், இக் கட்டுரை எழுதப் பெற்றது.]

—**ஆசிரியர்**

தவத்திரு தண்டபாணி சுவாமிகள்– (தோற்றம்: 1839 - மறைவு: 1898)

தொண்டை நாட்டுத் திருப்பதியநுபவம்

மகாவித்துவான் P.B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இனி, பதினேழாமத்யாயத்திற் செல்வோம். இதில் மூவகையான தபஸ்ஸுக்களைக் கூறுகின்முன் கண்ணன். அவை சாரீர தபஸ்ஸென்றும், வாங்மய தபஸ்ஸென்றும், மாநஸ தபஸ்ஸென்றும் வழங்கப்படுவன. "ஊன் வாட வுண்ணாதுயிர் காவலிட்டு உடற்பிரியாப் புலனைந்தும் நொந்து, தான் வாட வாடத் தவஞ் செய்ய" என்றும், "காயோடு நீடு கனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து தீயூடு நின்று தவஞ்செய்ய" என்றும் ஆழ்வாழ்வார்கள் ஒருவிதமான உடல் தவத்தை யருளிச் செய்துள்ளார்கள். கீதாசார்யன் அருளிச் செய்வது அதனில் வேறுபட்டது. "தேவத்விஜகுரு ப்ராஜ்ஞ பூஜநம் சௌசமார் ஜவம், ப்ரஹ்மசர்ய மஹிம்ஸாச சாரீரம் தப உச்யதே" என்பது காயிக தபஸ்ஸைத் தெரிவிக்கும் ச்லோகம். பகவானையும், அந்தணர்களையும், ஆசாரியர்களையும், பண்டிதர்களையும் வழிபாடு செய்வது, புண்ய தீர்த்தங்களில் குடைந்தாடுவது, நெஞ்சில் நினைத்ததை அப்படியே அனுஷ்டித்துக் காட்டுவது, மாதர்களைக் கண்டு காதல் கொள்ளாமை, பிராணி பீடைகள் செய்யாமை ஆகிய இவை காயிக தபஸ்ஸெனப்படும். "அநுத்வேககரம், வாக்யம், ஸத்யம், ப்ரியஹிதம்சயத் | ஸ்வாத்யாயாப்யஸநம், சைவ வாங்மயம், தப உச்யதே' என்பது வாங்மயமான தபஸ்ஸைத் தெரிவிக்கும் ச்லோகம். பிறரை நோவச் செய்யாத வார்த்தைகளைச் சொல்லுவது, உண்மையைச் சொல்லுவது, ப்ரியமும் ஹிதமுமானவற்றைச் சொல்லுவது, வேதமோதுவது ஆகிய இவை வாசிக தபஸ்ஸெனப்படும். "மந: ப்ரஸாதஸ்ஸௌம்யத்வம் மௌநமாத்ம விநிக்ரஹ:, பாவஸம் சுத்திரித்யேதத் தபோ மாநஸ முச்யதே" கோபம் முதலியன கொள்ளாமையாகிற மனத்தெளிவு பிறர்க்குத் தீங்கிழைக்க நினையாமையாகிற ஸௌம்யத்வம்; வாய் திறந்து பேசாமை, ஸதா தியானிக்கத் தகுந்த பரமபுருஷன் விஷயத்திலே நெஞ்சைச் செலுத்துகை, வேற்று விஷயங்களில் சிந்தனை கொள்ளாமை ஆகிய இவை மாநஸ தபஸ்ஸெனப்படும். இங்ஙனம் மூவகைப்பட்ட தபஸ்ஸு மறுபடியும் மூவகையாக வகுக்கப்படுகிறது; ஸாத்வீகமென்றும், ராஜஸமென்றும், தாமஸமென்றும்.

இப்படி மூன்று மூன்ருக வகுக்கப்படும் விஷயங்கள் பதினெட்டாமத்யாயத்திலும் பல கூறப்படுகின்றன. அதில் ஸுகமானது ஸாத்வீகமென்றும் ராஜஸமென்றும் தாமஸமென்றும் மூன்ருகப் பிரிக்கப்படுகிறது. எந்த ஸுகமானது உபக்ரம தசையில் விஷம் போல இருந்து பரிணாமத்தில் அம்ருதம் போலாகிறதோ அது ஸாத்விக ஸுகமாம். யோகம் தொடங்கும் போது வெகு ஆயாஸ ஸாத்யமாகையாலே துக்கம் போல் தோன்றும்; விபாக திசையில் அப்பாஸ பலத்தாலே அதுவே அம்ருதம் போலாகும். இது தான் ஸாத்விக ஸுகம். "யத் ததக்ரே விஷமிவ பரிணாமே அம்ருதோபமம், தத் ஸுகம், ஸாத்விகம், ப்ரோக்தம், ஆத்ம சுத்தி, ப்ரஸாதஜம்" (18-37) என்கிற ச்லோகத்தை இங்கே அநுஸந்திப்பது.

இதற்கு அடுத்த ச்லோகம் "விஷயேந்த்ரிய ஸம்யோகாத் யத்தத்க்ரே அம்ருதோபமம், பரிணாமேவிஷமிவ தத் ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம்" என்பது. இந்த ச்லோகத்தை நம்மாழ்வார் திருவாய்மொழியில் (7-1-8) "இன்னமுதெனத் தோன்றி ஓரைவர் யாவரையும் மயக்க" என்கிற பாசுரத்தினுல் மொழி பெயர்த்திருக்கின்ருரென்னலாம். இந்திரியங்கள்

சிற்றின்பங்களைப் பற்றி யநுபவிக்கும் ஸுகம் அநுபவ வேளையில் அமுதம் போல் தோன்றிப் பிறகு நரகஹேதுவாகை யாலே விஷமாகப் பரிணமிக்கும். இது தான் ராஜஸ ஸுகமென்பது.

இதற்குமேல் தாமஸ ஸுகமென்பது எத்தகைய தெனில், "யதக்ரே சாநுபந்தே ச ஸுகம் மோஹநமாத்மந: நித்ராலஸ்ய ப்ரமாதோத்தம் தத் தாமஸ முதாஹ்ருதம்" (18-39). இந்த ச்லோகத்தினால் தெரிவிக்கப்படுவது கீழ் சொன்னவற்றில், அநுபவ வேளையிலோ விபாகதசையிலோ ஏதேனுமொரு போதிலே அமுதமாகுமாகார முண்டு, இஃது அங்ஙனன்றிக்கே இரண்டு தசையிலும் விஷமாகவே காண்பது. உறங்குவது, சோம்பேறியா யிருப்பது, செய்ய வேண்டியவற்றிலே கவனிப்பில்லாமலிருப்பது ஆகிய இவை உபய தசையிலும் விஷமானதே,

இப்படியாகச் சொல்லிக் கொண்டு போய், ப்ராஹ்மண ஜாதிக்குரிய தருமமின்னது, க்ஷத்ரிய ஜாதிக்குரிய தருமமின்னது, வைச்ய ஜாதிக்குரிய தருமமின்னது, சதுர்த்த ஜாதிக்குரிய தருமமின்னது என்று சொல்லுகையில் - "சௌர்யம் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம் யுத்தே சாப்ய பலாயனம், தானமீச்வர பாவச்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்" என்கிற ச்லோகத்தினால் க்ஷத்ரிய தருமத்தை நெஞ்சிலே யூன்ற வருளிச் செய்தான், இதில் பூர்வார்த்தத்தில் ஐந்து குணங்கள் க்ஷத்திரியனுக்குச் சொல்லப் படுகின்றன. இவற்றுள்- சௌர்யமாவது - போர்க்களத்தில் சிறிதும் கூசாமே புகுவதற்குரிய வல்லமை. தேஜஸ்ஸாவது - பிறரால் அசைக்கவும் முடியாமை; த்ருதியாவது - தொடங்கின காரியத்தை எத்தனை இடையூறுகள் மிடைந்தாலும் சளைக்காமல் நிறைவேற்றியே தீரும்படியான மனவுறுதி. தாக்ஷ்யமாவது - எந்த காரியத்தையும் இனிது நிறைவேற்ற வல்லனாகை. (யுத்தே சாபி அபலாயநம்) போர் புரிய வந்து நின்ற பின் தனக்கு மரணமே ஸம்பவிக்குமென்று தோன்றினாலுங் கூட முதுகு காட்டியோடாமை. அர்ஜுநன் க்ஷத்ரிய ஜாதியிலே பிறந்தவனாதலால் அவனுக்கு ஸ்வஜாதி தர்மமாகிய யுத்தத்தை வழுவறச் செய்கை ஆவச்யகமென்பதை மேன்மேலும் வற்புறுத்திச் சொல்லித் தான் சொன்னபடியே கேட்டாக வேண்டுமென்றும் தன்னையே தஞ்சமாகப் பற்றியாக வேண்டுமென்றும் வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது போலுரைத்து, கடைசியாக அவன் வாக்கிலிருந்து "நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர் லப்தா த்வத்ப்ரஸாதாத் மயாஉச்யுத, ஸ்திதோஸ்மிகத ஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ." என்று சொல்லுவித்துக் கீதையைத் தலைக்கட்டினனாயிற்று. கண்ணா! உனது திருவருளால் என்னுடைய விபரீதஜ்ஞானமெல்லாம் தொலைந்தது; உண்மைப் பொருளுணர்ச்சி உண்டாயிற்று; மனதிலிருந்த கல்மஷங்களெல்லாம் தீர்ந்து ஒரு நிலையில் நின்று விட்டேன்; இனி நீ சொன்னபடி கேட்கிறேன் என்று சொன்னனென்கிற இவ்வளவையும் த்ருதராஷ்ட்ரனுக்கு ஸஞ்சயன் சொல்லி நின்றான்.

கீதையுபதேசம் கேட்பதற்கு முன்பு அர்ஜுநன் இருந்த இருப்பு என்ன? இப்போது நின்ற நிலை என்ன? என்பதே ஸாரமாக இங்கு உய்த்துணரத்தக்கது. நான் யுத்தம் செய்யமாட்டேனென்று வில்லையும் அம்புகளையும் விட்டெறிந்து தேர்த்தட்டிலே உட்கார்ந்து விட்டான் என்பது முதலத்யாயத்தின் முடிவில் சொல்லப்பட்டது. நீ சொன்னபடியே நின்றுனென்பது பதினெட்டாமத்யாயத்தின் முடிவில் சொல்லப்பட்டது, அவரவர்களுக்கு ஸ்வதர்மத்தில் ருசியையுண்டாக்குவதே கீதையின் முழுநோக்கு என்றதாயிற்று. இந்த கீதா சாஸ்த்ரம் அவதரித்திருக்கிற ரீதியை ஊன்றி நோக்குமிடத்து வெகு ஆச்சரியமாகவே யிருக்கிறது. திருவாய்மொழியில் (4—8—6) "அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவரறிய, நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத்தொருமூர்த்தி" என்கிற பாசுரத்தில் கீதையின் பெருமை ஸாரமாக அருளிச் செய்யப்பட்டது. இதன் அருமை பெருமையைக் கண்ணபிரான்

தானே முடிவில் "இதம்தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந, ந சாசுக்ரூஷவே வாச்யம் நசமாம் யோப்யஸூயதி" என்கிறவொரு ச்லோகத்தினால் அற்புதமாகப் பேசினான். அர்ஜுநா! நான் உனக்குச் சொன்ன இந்த பரம குஹ்யமான சாஸ்த்ரத்தை அதபஸ்கனுக்குச் சொல்லாதே, அபக்தனுக்குச் சொல்லாதே, அசுச்ரூஷுவுக்குச் சொல்லாதே, என்னிடத்தில் அஸூயையுள்ளவனுக்குச் சொல்லாதே என்று கட்டளையிடுகிறான் கண்ணபிரான். இங்கு "ந சமாம் யோப்யஸூயதி" என்றவிடத்திற்கு நம் பாஷ்யகாரர் பாஷ்யமிட்டருளுகிறார்; காணக் கண்ணாயிரம் வேண்டும்; கேட்கக் காதாயிரம் வேண்டும்; நவில நாவாயிரம் வேண்டும். "மத்ஸ்வரூபே மதைச்வர்யே மத்குணேஷு ச கதிதேஷ்வயோ தோஷமாவிஷ்கரோதி ந தஸ்மை வாச்யம்" என்று பாஷ்யஸூக்தியுள்ளது. என்னுடைய ஸ்வரூபத்தையும் என்னுடைய ஐச்வர்யத்தையும் என்னுடைய குணங்களையும் ஒருவர் எடுத்துரைத்தால் அவற்றில் தோஷாவிஷ்கரணம் செய்பவனே என்னிடத்தில் அஸூயை கொண்டவன், அவனுக்கு நீ ஒன்றும் சொல்லாதே—என்று கண்ணபிரான் கட்டளையிடுவதாக ஸ்வாமி பாஷ்யம் செய்தருளுகிறார். பகவத் குணங்களை எத்தனை உயர்த்தியாகச் சொன்னாலும் அத்தனையும் ஒக்கும்! ஒக்கும்!! என்றிராதே அவற்றில் அஸம்பாவிதத்வத்தை உபபாதிக்கிறோம் கேண்மினென்று, தங்களுக்குண்டான பாண்டித்யத்தை யெல்லாம் பகவத் குணங்களை இல்லை செய்வதிலும் இறக்குவதிலுமே உபயோகப்படுத்துகிறவர்கள் பகவத் கீதைக்கு வெகுதூரத்திலே நிற்க வேண்டுமென்பது ஸ்வாமி திருவுள்ளமாகக் காண்கிறது.

ஆக இவ்வளவும், தொண்டை நாட்டுத் திருப்பதி யநுபவத்தில் பாண்டவதூதப் பெருமாளுடைய பெருமையநுபவத்தின் சார்பாக கீதா சாஸ்த்ர ஸாரப் பொருளையுணர்த்தினோமானோம். இனி நீரகத் தெம்பெருமானுடைய பெருமையை அடுத்த இதழில் அநுபவிப்போம். *

ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

11-11-64 **தவத்திரு தண்டபாணி சுவாமிகள் நினைவு விழா,**
இராஜேசுவரி கல்யாண மண்டபம், மயிலாப்பூர், சென்னை.

8-11-64 **சித்த வைத்தியசாலைத் திறப்பு விழா,**
ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், பழநி.

15-11-64 **அகத்தியர்க்குத் திருமணக் கோலக் காட்சி விழா,**
திருவேற்காடு, பூவிருந்தவல்லி.

25-11-64 **நோயாளிகள் விடுதித் திறப்பு விழா,**
திருமலைக் குமாரசாமி தேவஸ்தானம், பண்பொழி.

26-11-64 **மேலைக் கோயில் திருப்பணித் தொடக்க விழா,**
(பசுமடக் கால் கோள் விழா, கோயில் அலுவலர் இல்லங்களின் திறப்பு விழா). ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், திருச்செந்தூர்.

கந்தர் சஷ்டி விழா நடைபெற்ற கோயில்கள் சில

ஊர்ப் பெயர்.		கோயிலின் பெயர்.
இலஞ்சி	—	ஸ்ரீ இலஞ்சிக்குமாரர் கோயில்
மயிலாப்பூர்	—	ஸ்ரீ கபாலீசுவரர் கோயில்
சென்னை - முத்தியாலுப் பேட்டை	—	ஸ்ரீ கச்சபேசுவர சுவாமி கோயில்
காஞ்சிபுரம்	—	ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி (குமரகோட்டம்)
திருத்தணிகை	—	ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில்
சிக்கல்	—	ஸ்ரீ நவநீதேசுவரசுவாமி கோயில்
திருச்செந்தூர்	—	ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில்
சுவாமிமலை	—	ஸ்ரீ சுவாமிநாத சுவாமி கோயில்
சென்னை	—	ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயில் (கந்தகோட்டம்)
திருப்புகலூர்	—	ஸ்ரீ அக்னீசுவரசுவாமி கோயில்
குன்றக்குடி	—	ஸ்ரீ சண்முகநாதப் பெருமான் கோயில்
திருப்போரூர்	—	ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

இறை பணியாளர் மாற்றங்கள்

பெயர்	இருந்த இடம்	மாற்றப்பட்ட இடம்
ஸ்ரீ கே. எ. துரைராஜ்.	ஸ்ரீ கச்சாலீசுவரர் கோயில், அரண்மனைக்காரன் தெரு, சென்னை.	ஸ்ரீ சுந்தரேசுவரர் கோயில், கோலூர்.
,, எ. கே. ஜெகந்நாதன்.	ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயில், ஆண்டார் குப்பம்.	ஸ்ரீ சீதாராம ஆஞ்சநேய சுவாமி தொகுதிக் கோயில்கள், குடியாத்தம்.
,, எம். சேதுமாதவன்.	ஸ்ரீ சீதாராம ஆஞ்சநேய சுவாமி தொகுதிக் கோயில், குடியாத்தம்.	ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயில், ஆண்டார் குப்பம்.
,, சி. ரங்காச்சாரி.	ஸ்ரீ சுந்தரேசுவரர் கோயில், கூறைநாட்டுக் கருப்பூர்.	ஸ்ரீ பசுபதீசுவரர் தொகுதிக் கோயில், ஆவூர், பாபநாசம் வட்டம்.
,, கே. இராமலிங்கம்.	ஸ்ரீ பசுபதீசுவரர் தொகுதிக் கோயில்கள், ஆவூர்.	ஸ்ரீ அபயவரதேசுவரர் கோயில். அதிராம்பட்டினம்.
,, டி. கே. பரமசிவம்.	ஸ்ரீ பிரகதீசுவரர் கோயில், கங்கை கொண்ட சோழபுரம், மற்றும் தொகுதிக் கோயில்கள்,	ஸ்ரீ நீலிவனேசுவரர் கோயில், திருப்பங்கிளி.



சேர்வராயன் மலைக் கோயில்

(கோவை திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள், B.A., B.L.,)

இடம்—சேர்வராயன் மலைகள் சேலம் வட்டத்தின் நடுவில் உள்ளவை. இவைகள் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் இடையே விடுபட்ட மலைத் தொடர். இவைகளில் உயர்ந்த பகுதிகள் 4000, 4500 அடிதான் இருக்கும். சேர்வராயன் சிகரமும், கிரீன் மலை (பச்சை மலை) என்ற தட்டைச் சிகரமுமே, மிக உயர்ந்தவைகள். மற்றப் பகுதிகள் குறைந்தவைகள். இம்மலைகளில் மழை குறைவு. ஆகவே இதன் சரிவுகளிலிருந்து காட்டாறுகளே யன்றி நிரந்தர ஆறுகள் இல்லை. ஆனால் காப்பிப் பயிருக்கும், பேரிக்காய், ஆரஞ்சு முதலிய பழச் செடிகளுக்கும் போதிய நீர் வசதி உண்டு. ஏர்க்காடு தலைமை ஊர், அடுத்துப் பெரியது நாகலூர். மற்ற ஊர்கள் வெறும் குக்கிராமங்கள்தான்.

வழி—சேலத்திலிருந்து நேராக வடக்கே பெரும் பாதை ஒன்று மலை அடிவாரத்திற்குச் செல்லுகிறது. வழி நெடுக அலுவலகங்களும் மாளிகைகளும், பிறகு சிற்றூர்களும் உள்ளன. மலை அடிவாரத்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்று இருக்கிறது' அங்கிருந்து இரண்டு வழிகள் மலைமேல் ஏறுகின்றன. தார் போட்ட கெட்டிப் பாதை வளைந்து வளைந்து மேலே செல்லுகிறது. வழியில் 18 ஊசி முனை வளைவுகள் இருக்கின்றன. இவைகளில் வண்டி ஓட்டுபவர் வெகு எச்சரிக்கையாக ஓட்ட வேண்டும். 3500 அடி ஏறினவுடன் காப்பித் தோட்டங்களும், பழத் தோட்டங்களும் தென்படுகின்றன. வெப்பதட்ப நிலை வெகு மகிழ்ச்சி தருகின்றது. உச்சி ஏறினதும் ஏர்க்காட்டுப் பீடபூமிக்குச் செல்லுகிறோம். எதிரில் தோன்றுவது அழகிய சிறு ஏரி. அதனைச் சுற்றிப் புல்லாந்தரை வெகு இன்பக் காட்சி தருகிறது. பகல் 12 மணிக்கும் குளிர்ச்சியாக இருக்கும். பிறகு ஏர்க்காட்டு ஊர் அடைகிறோம். மற்றொரு வழி, கால் நடைப்பாதை. நேராக நடந்தோ, குரிச்சியிலோ போக வேண்டும். வண்டிப்பாதை 12 மைல். நடைப்பாதை ஏழு மைல். சேலத்திலிருந்து 19 மைலும், 14 மைலும் இருக்கும்.

ஊர்—ஏர்க்காடு 4000 அடி உயரத்தில் உள்ள ஒரு ஊர் - மேடும் பள்ளமும் கொண்ட நிலப் பரப்பு உள்ளது. சின்னஞ் சிறு பள்ளத்தாக்குகளில் மேலும் கீழுமாக வீடுகள் கட்டப் பட்டுள்ளன. மற்ற இடங்களில் தோட்ட வீடுகள் போல (பங்களாக்கள்) இடம் விட்டுக் கட்டப் பட்டுள்ளன. சென்ற பத்து ஆண்டுகளில் வீடுகளும் மக்கள் தொகையும் பெருகி இருக்கின்றன. ஊர் நடுவில் குடி நீர் குளம் ஒன்று அழகாகக் கட்டப்பட்டுள்ளது. அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், பஸ் நிலையம், ஆஸ்பத்திரி, மாதாக் கோயில்கள், சுற்றுலா விடுதிகள், உயர்ந்த பள்ளிகள், மாணவர் விடுதிகள் முதலியன இருக்கின்றன. இந்துக் கோயில்களைக் காட்டிலும் கிறிஸ்தவ நிலையங்கள் மிகவும் அதிகம். ஊரைச் சுற்றிலும் காபி, பேரி முதலிய பழத் தோட்டங்கள் சூழ்ந்திருக்கின்றன.

காட்சிகள் - ஏர்க்காட்டைச் சுற்றிலும் காட்சி நிலைகள் நிரம்ப இருக்கின்றன. வடகிழக்கு மூலையில் பெரிய பாறைகள் செங்குத்தாக நிற்கின்றன. இதை Lady Canning Seat அல்லது 'துரை மகள் கன்னிங்கு அம்மையார் பீடம்' என்பார்கள். ஏர்க்காட்டுக்கு வருகின்ற பெருமக்கள் எல்லாரும் இந்தப் பாறைகளைப் பார்க்காமல் திரும்புவதில்லை. ஆகவே இதனைச் சுற்றிலும் ஒரு அழகிய பூங்கா அமைத்து வருகிறார்கள். இப்பூங்காவில் நாவல் மரங்கள் தித்திப்பான பழங்களை ஈனுகின்றன. பாறைகள் சேலத்தை நோக்கி அமைந்திருக்கின்றன. கீழே சம நிலக் காட்சி மகிழ்ச்சி தரு

கின்றது. தென்மேற்கே - Pagoda hill - கோபுர மலை என்று ஒன்றிருக்கிறது. இங்கே பாறைகள் கோயில் கோபுரம் போல அமைந்திருக்கின்றன. இவை பண்டைக் குடிகள் வழிபட்ட பாறைகள். வழி முழுதும் - லண்டானா, (Lantana) புதர்கள் முளைத்திருக்கின்றன. கொத்துப் பூக்கள் அழகாக இருக்கும். மாலை நேரங்களில் மின்மினி; பூச்சிகள் நடனமாடுவது வெகு இன்பம் தரும்.

ஏனைய ஊர்கள் ஏர்க்காட்டிலிருந்து நேராகக் கிழக்கே ஒரு நெடுஞ்சாலை ஓடுகிறது. அச்சாலைக்கு இருபுறங்களிலும் உயர்ந்த மரங்களும் அவைகளின் அடியிலே காப்பிச் செடிகளும் பயிரிட்டிருக்கிறார்கள். அம்மரங்கள் காப்பிச் செடிகளுக்கு நிழலும் குளிர்ச்சியும் தருகின்றன. அந் நிழலில்தான் நல்ல காய்ப்பு உண்டாகும். காப்பி விளைவே இம் மலைப் பிராந்தியங்களுக்குச் செல்வம் தருகின்றன. இங்கே, குடியேறியிருக்கும் மக்கள் காப்பித் தோட்ட வேலையாட்களே ஆவர். அவ்வழியே ஆறு கற்கள் சென்றால் நாகலூர் என்ற ஊரை அடையலாம். இங்கு குடியிருப்புக்களும் கடைத் தெருவும் பள்ளிக்கூடமும் மற்ற வசதிகளும் இருக்கின்றன. இவ்வூரை விட்டு மேலும் கிழக்கே சென்றால் பல சிற்றூர்கள் அங்கங்கே இருக்கின்றன. பெரும்பாலும் மலைவாசிகளே சிறு சிறு குடிசைகளைக் கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள். குடிசைகள் ஆப்பிரிக்கா க்ரால் (Kraal) போல கூர்மையாக இருக்கும். அக்குடிகளை இந்நாட்டில் மலையாளிகள் என்று கூறுகிறார்கள். அவர்கள் மலைநாட்டுப் பண்டைக் கவுண்டர்கள்.

சேர்வராயன்மலை - ஏர்க்காட்டுக்கு வடக்கே மூன்று நான்கு கல் அளவில் இரண்டு முடிகள் அல்லது சிகரங்கள் இருக்கின்றன. ஒன்று சேர்வராயன்மலை. மற்றொன்று பச்சைமலை (Green Hill). சேர்வராயன் மலைதான் உயர்ந்தது என்று மக்கள் கருத்து—ஆனால் அளந்து கணக்கிட்டதில் பச்சைமலைதான் சிறிது உயர்ந்தது. போகும் வழியில் 'திருமதி நார்ட்டன் துரைசானி பங்களா' இருக்கிறது. அதுவரையில் பாதை நன்றாக இருக்கிறது. அந்த பங்களா வளைவில் ஒரு இயற்கைக் குகை இருக்கிறது. அதற்குள் இறங்கினால் நீர் ஊற்று ஒன்று உள்ளே காணலாம். இதற்குக் கரடிக் குகை (Bear's Cave) என்று பெயர். இங்கிருந்து சிறிது தூரம் மலைமேல் ஏறவேண்டும். சிகரத்தின் உச்சி பீடபூமி போல் தட்டையாக இருக்கிறது. ஒரு பர்லாங்கு வட்டமாக இருக்கிறது. மரம் செடி கொடி இல்லை. நான்கு புறங்களிலும் சரிவாக இருக்கிறது. சிறு பருக்கைக் கற்கள் தான் காணலாம்.

சேர்வராயன்கோயில்—சிகர மட்டத்திற்கு 20 அடி கீழே ஒரு இயற்கைக் குகை காணலாம். உயரம் நான்கைந்து அடியும் நீளம் பதினைந்து இருபது அடியும் உள்ளது. அக்குகைக்குள் இயற்கை இலிங்கங்கள் இருக்கின்றன. இக்குகை தான் கோயில் ஆகும். கட்டின கட்டிடங்கள் இல்லை. இந்த குகைக்குக் கீழே பத்திருபது அடிவரை சரிவாக நிலம் இருக்கிறது. அதன் கீழ் சமநிலத்தில் ஒரு அழகிய தடாகம் இருக்கிறது. அது ஆறு அடி சதுரம் ஆகவும் நான்கடி ஆழமாகவும் இருக்கிறது. நீர் மிகத் தெளிவாக இருக்கிறது. இதுதான் சேர்வராயன் தீர்த்தம். இக்கோயிலில் மலையாளிகள் வழிபடுகிறார்கள். ஏனைய இந்துக்களும் விழாக் காலங்களில் வழிபடுகிறார்கள். திருவிழா இளவேனிற் காலத்தில் நடைபெறும். ஆயிரக் கணக்கான மக்கள் கூடுவார்கள். தீர்த்தம் எடுத்துப் பொங்கல் வைப்பார்கள். எத்தனை நீர் முகந்தாலும் நீர் குறைவதில்லை. இது ஒரு அற்புதம். மலைஉச்சி 20 அடிதான் உள்ளதால் ஊற்று எவ்வாறு தோன்றுகிறது என அறியமுடியவில்லை.

பெயர்—மலைக்குகையில் எழுந்தருளியிருக்கும் இயற்கை அல்லது சுயம்பு மூர்த்தியின் பெயர் **சேர்வராயன்** என்று வழங்குகிறார்கள். இப்பெயர் ஆங்கிலத்தில் (செவராய்) Shevaroy என்று எழுதப்படும். இச்சொல் சிவராயன் என்பதின் மரூஉ என்பர் சில ஆராய்ச்சியாளர்கள். 'சேர ராயன்' என்று சொல்லி அது சேர வம்சத்தினர் வழிபட்ட தெய்வம் என்பர். ஒரு கோயில் இருந்தால் அதற்கு அருகில் உள்ள பொதுமக்கள் அக்கோயில் மூர்த்தியின் பெயரை வைத்துக் கொள்வது நமது நாட்டில் ஒரு பண்டைய வழக்கம். சேலத்தில் சில குடிகள் தங்கள் குழந்தை

களுக்குச் 'சிவராயன்' என்று பெயர் வைப்பதைக் காண்கிறோம். ஆகவே இம்மூர்த்தியின் பெயர் சிவராயனாக இருக்கலாம். ஆகவே இக்கோயில் ஒரு சிவாலயமாகவும் பண்டைக்காலம் முதல் பழைய குடிகளான மலையாளிகள் வழிபட்ட ஒரு தெய்வம் என்றும் கூறினால் மிகையாகாது.

வளர்ச்சி - பண்டைக் காலத்தில் சேர்வராயன் மலை மிக அடர்ந்த வனமாக இருந்தது. அதிலே மலைச்சாதியர் ஆங்காங்கே சின்னஞ் சிறு குறிச்சிகளைக் கட்டிக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் மலை உச்சியில் இருந்த குகையில் வழிபடும் தெய்வத்தை வணங்கி விழாவயர்ந்து இனிது வாழ்ந்து வந்தார்கள். வெள்ளையர்கள் நாட்டிற்கு வந்தவுடன் குளிர்ச்சியான இடங்களைத் தேடிவந்ததில் மலைகள் ஏறி ஏர்க்காட்டுப்பகுதிகளை வாசத்தலமாகக் கொண்டு சுற்றியிலுமிருக்கும் சாரல்களில் காப்பிக்கொட்டை பேரிக்காய் முதலியவைகளைப் பயிரிட்டு வளமாக்கினார்கள். தோட்டங்கள் மிகுதியாகவே சமநிலங்களிலிருந்து மக்கள் தொழிலுக்காகக் குடியேறினார்கள். ஆதி மக்கள் காடுகளின் இடையே பழைய வழக்கம் போல் சிறு குடிசைகளில் வாழ்ந்து பழையபடியே இருந்தார்கள். மலைவாசம் மிக ஆரோக்கியமாக இருக்கக் கண்டு கிறிஸ்தவப் பாதிரிமார்கள் தங்கள் கோயில்களைக் கட்டியும் பள்ளிகளை ஏற்படுத்தியும் விருத்தி செய்தார்கள். வெள்ளைக்காரப் பிள்ளைகளுக்குப் பெரிய பள்ளி ஒன்று ஆங்கில முறையில் தோன்றிற்று. அதற்கு Mountford பள்ளி என்ற பெயர் தரப்பட்டது. சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியர்கள் ஏர்க்காட்டுப் பகுதிகளை மிக விரும்பி அங்கே கோடைக் காலத்தைக் கழிக்கத் தொடங்கினார்கள். அவர்களுடனே கிறிஸ்தவ மிஷன்களும் பெருகின. இந்த முறையில் இம்மலைகள் ஆரோக்கியத்தலம் ஆகிவிட்டன.

நமது கடமை - பழங் காலத்துப் பண்டைத் தமிழ் மக்களுடைய சிவத்தலமாக இருந்த இம் மலைத்தொடர் தற்போது காப்பிப் பண்ணைகள் நிறைந்து பழத் தோட்டங்கள் ஆகியும் வாணிபத் தலமாகியும் மாறிவிட்டது. மேலும் கிறிஸ்தவர்கள் பள்ளிகளும் கல்லூரிகளும் தோன்றி ஆகாயத்தை அளாவி நிற்கின்றன. சைவர்களின் கோயில்களும், திருமால் அடியார்களின் அன்பு நிலையங்களும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து கிடக்கின்றன. சமயச் சங்கங்கள் இத் திவ்விய மலைகளுக்கு அருகே செல்வதும் இல்லை. சைவ வைணவச் சமயக் கூடங்கள் எழுப்பி மக்களை நல் வழிப்படுத்துவது நாட்டுப் பெரியோர்களின் கடமை. சேலம் மாவட்டத்துப் பெருமக்கள் இம் மலைகளில் வழிபாட்டு நிலையங்களை ஏற்படுத்தி நாள்தோறும் அல்லது வாரம் தோறும் வழிபாடு செய்யவேண்டும். சமயப் பாடசாலைகளை நிறுவி மக்களுக்குச் சமய மேன்மைகளைப் புகட்ட வேண்டும். ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கும் அறிஞர்களும் சமயத்துறவிகளும் இக்கைங்கரியத்தில் ஈடுபடுவார்களாக !

செய்திச் சுருக்கம்.

ஸ்ரீ மகான் தண்டபாணி சுவாமிகள் விழா :

சென்னை மயிலை எட்வர்ட் எலியட்ஸ்சாலை இராஜேசுவரி கலியாண மண்டபத்தில், 1–11–64 ஞாயிறன்று, சென்னைச் சட்ட மன்றத் தலைவர் கனம் திரு. S. செல்லபாண்டியன், B.A., B.L., அவர்களின் அரிய தலைமையில் மிகவும் சிறப்புற நிகழ்ந்தது.

திருமதி கே. வி. ஜானகியம்மாள், திருவாளர்கள் தி. மு. சங்கரலிங்கம், ச. சச்சிதானந்தம் பிள்ளை. B.A., L.T., அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A., B.L, ஔவை டி. கே. சண்முகம், அருள் மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், சிரவணபுரம் சுந்தர சுவாமிகள், கி. வா. ஜகந்நாதன், M A, பேரூர் இராமசாமி அடிகள், ந. ரா. முருகவேள், M.A., M.O.L., திருமதி சௌந்தரம் கைலாசம், திரு. சரவணபவாநந்தர், தி. செ. முருகதாச ஐயா, திருவாமாத்தூர் தி. கு. இராமசாமி முதலியார் ஆகிய பெருமக்கள் பலர், சுவாமிகளின் அருமை பெருமைகளையும், நூல்களின் சிறப்புக்களையும் குறித்து, வியந்து பாராட்டிச் சொற்பொழிவாற்றி, அஞ்சலி செலுத்தினார்கள்.

சிவ ஞான போதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T., காஞ்சிபுரம்.]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

பதினொன்றும் சூத்திரம்

2 ஆம் அதிகரணம் :

உயிர்கள் பொருள்களை அறிந்து நுகர்ந்து வரும்போது முதல்வன் அவற்றோடு உடனின்று உணர்த்தியும் உணர்ந்தும் வருகின்றான் என்னும் சுத்தாத் துவித நிலையை முதல் அதிகரணத்து விளக்கினார் ஆசிரியர். இனி, அந்நிலையை உணர்ந்தோன் அவ்வுணர்ச்சி வலியால் முதல்வன் திருவடியைத் தலைப்பட்டுப் பேரின்பம் நுகர்தலாகிய சிவப்பேற்றை, அடையும் முறையை இரண்டாம் அதிகரணத்தாற் கூறுகின்றார் :

சூத்திரப்பகுதி: "(அதனை) **அயரா அன்பின் அரன்கழல் செலுமே"**

வார்த்திகம்: "இனிப் பத்தியினாலே மறவாது ஏத்த அவனது சீபாதத்தை அணையும் என்றது, அவன் அந்நியமின்றிச் செய்வோர் செய்திப் பயன் விளைத்து நிற்றலான்,"

இங்குக் கூறப்படும் பொருள் :

முதல்வன் உடனின்று செய்துவரும் உபகாரத்தை மறவாது கடைப்பிடித்தலால் அவன்கண் இச்சை மீதூரும்; அது நிகழின், அவ்வன்பே இன்பாக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை ஆன்மா அனுபவிக்கப் பெறும்: இதுவே நிட்டையின்கண் நிகழும் சிவப்பேறு.

இதனால் பரமுத்தி நிலையில், ஆன்மாக் கருவி கரணங்களைக் கடந்து, ஏகதேச உணர்வு நீங்கி, வியாபக உணர்வுடையதாய், முதற் பொருளையே தன் அறிவிச்சைசெயல்களுக்கு விடயமாகக் கொள்ளும் என்பது விளங்கும். திருவள்ளுவர்

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின்
மற்றழித்துச் சார்தரா சார்தரும்
நோய்" என்றும்
"இன்பம் இடையறு(து) ஈண்டும் அவா
என்னும் துன்பத்துள் துன்பம்
கெடின்" எனவும்

அருளிச் செய்தது, இவ்வதிகரணத்து விளக்கப்படும் நிட்டையாகிய பரமுத்தி நிலையே பற்றியதெனக் கண்டுகொள்க.

ஐயப்பாடு: மறவாது பத்தியினால் அருள்வழி நிற்றல் பற்றியே சீபாதத்தை அணைதல் கூடுமோ? கூடாதோ?

பிறர் கூறும் பக்கம்: ஒருபொருளை அறிதலால் அதன்கண் இச்சை மீதூரும் என்றது பொருந்தும்; ஆயினும், இச்சித்த மாத்திரத்தில் பொருளை அணைதல் உலகத்தில் இல்லை, ஆதலால், உடம்பு

உள்ளபோது செய்யப்படும் பத்தி, உடம்பை நீத்தபின் எய்தும் பரமுத்திக்கு ஏதுவாதல் அல்லது உடம்பு உள்வழியே பேரின்பம் இடையறாது பெருகுதற்கு ஏதுவாம் எனக் கொள்ளுதல் சாலாது.

மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிவு:

முதல்வன் உலகத்துப் பொருள்போல உயிர்க்கு வேறாய் நிற்பவன் அல்லன்; நிலம் தன் மண்டலத்துப்பட்ட பொருள்களைத் தன் ஈர்ப்பாற்றலிற்பட அகப்படுத்தி நிற்றல்போல, முதல்வன் உயிர்களைத் தன் அருளாற்றற் சூழலின் அகப்படக் கொண்டுள்ளவன். மேலும், உள்குவார் உள்கிற்றை உடனிருந்து அறிந்து, அவரவர் கருத்திற்கு ஏற்ற பயனைக் கொடுத்தருள்கின்றவன், இது பிறப்பு வீடு என்னும் இரு நிலையினும் ஒக்கும். ஆதலால், அவா அறுத்துத் தூய்மையுற்றுத் தன்னை வேண்டி நிற்கும் சீவன் முத்தர்க்கு, அவன் பேரின்ப பர போகமாய் விளைந்து நிற்பன் என்பதே மெய்ந் நூல்களின் முடிந்த முடிபாம்,

இக்கருத்தை விளக்க எழுந்த பிரமாண உரைகளுட் சில வருமாறு:—

தூய்மை (என்பது) அவாவின்மை;
மற்றது வாஅய்மை வேண்ட வரும்
—திருக்குறள்

[தூஉய்மை—சுத்த நிலையாகிய பரமுத்திநிலை: வாஅய்மை-மெய்ப்பொருளாகிய முதல்வன்]

"வேண்டு வார் வேண்டுவதே
ஈவான் கண்டாய்"—அப்பர் தேவாரம்.

"மனத்துள் நின்ற கருத்தானை
கருத்தறிந்து முடிப்பான் றன்னை"
—அப்பர் தேவாரம்.

"இரந்திரந்துருக என்மனத்துள்ளே
எழுகின்ற சோதியே"—திருவாசகம்.

"அன்பினில் விளைந்த ஆரமுதே"
—திருவாசகம்.

"ஈறிலாப் பதங்கள் யாவையும்
கடந்த **இன்பமே என்னுடைய
அன்பே"** —திருவாசகம்.

"உள்ளம் உருகின் உடனுவர்"
—திருஞானசம்பந்தர், திருவுந்தியார்.

"இன்பில் இனிதென்றல் இன்றுண்
டேல்
இன்றுண்டாம் அன்பு நிலையே அது"
—திருவருட்பயன்.

"உறுந்தொழிற்குத் தக்க பயன்
உலகம்;
தத்தம் வறுந்தொழிற்கு வாய்மை
பயன்"
—திருவருட்பயன்.

இனி இங்குவரும் சிலதடை விடைகள்:

தடை: முதல்வன் திருவடி கூடுதல் உடம்பு உள்வழியே ஆகும் எனின், அது பக்கத்து உள்ளார்க்கும் தெரிதல் வேண்டும்; அன்றியும் அது சிலர்க்கே அன்றிப் பலர்க்கும் உளதாதலும் வேண்டும். இவை இன்மையின், பரமுத்திநிலை உடம்பு நீங்கியபின் அன்றி அஃது உள்ள பொழுது வருவதில்லை.

விடை: ஞாயிற்றின் ஒளியில் எல்லாக் கண்களும் நிற்பினும் படலம் உள்ள கண்ணுக்கு அவ்வொளி விளங்காமல் இருளாயே நிற்கும்; அதுபோலவே பாச நீக்கம் எய்தாதவர்க்கு எங்கும் பொங்கித் ததும்பும் பேரின்பம் உணரப்படுவதில்லை. ஞாயிற்றின் ஒளி போதாய் நிற்கும் பேரரும்பையே அலர்த்தும்; சிற்றரும்புகளை அலர்த்தாது. அதுபோல

தன்னை உணரமாட்டாத அபக்குவர் உணர்வை ஏகதேசமாகிய பாச உணர்வாகவே விளங்கச் செய்து, பக்குவராய்த் தன்னை மறவாது பத்தியினால் ஏத்துவார்க்கு வியாபக உணர்வை மலரச் செய்வன் முதல்வன், ஆதலால், பக்குவராய சீவன்முத்தர் உடம்புடையவராயினும் பாசத்தார் அல்லர் எனக் கொள்க.

அருக்கனேர் நிற்பினும் அல்லிருளே காணார்க்(கு)
இருட்கண்ணே பாசத்தார்க்(கு) ஈசன் அருட்கண்ணால்
பாசத்தை நீக்கும் பகல் அலர்த்தும் தாமரைபோல்
நேசத்தில் தன்னுணர்ந்தார் நேர்.

இவ்வுதாரணவெண்பா ஆன்மாவுக்கு முத்தி நிலையில் அறிவு நிகழுமாறும், அது முதல்வனது அறிவாகிய அருட்கண்ணானன்றி நிகழாமையும் உணர்த்துவதாதல் காண்க,

தடை;

வியாபக உணர்வு பக்குவம் எய்தினார்க்கே நிகழ்வதாயின், அஃது ஒரு காலத்துப் புதுவதாய்த் தோன்றுவது எனப்பட்டு அதுபற்றிக் கொள்ளப்படும் பரமுத்தி நிலை அழிநிலையாகி விடாதோ ?

விடை;

வளர்பிறை மதிபோல, உயிரின்கண் அநாதியே அத்துவிதமாய் நிலைபெறும் முதல்வன் அவ்வுயிரைப் பந்தித்துள்ள மல சக்தியை முறையாகப் படிப்படியாக மெலிவித்து, காந்தம் தன் ஈர்ப்புச் சூழலுட்பட்ட இரும்பைத்தான் அசையாமல் நின்றே தன்சக்தியால் தன்மாட்டு இழுத்துத் தன்வயப்படுத்திக் கொள்ளுமாறு போலத் தன் சந்நிதி மாத்திரத்தால் உயிரைப் பற்றி நின்று தன் திருவடியைப்பற்றிக் கொண்டு நிற்கும்படி செய்வன். இச்செயலை முதல்வன் எஞ்ஞான்றும் சலியாது செய்யும் ஆயினும், காந்தம் போல அவனும் விகாரப் படுதல் இல்லை. மலசக்தியை அரித்தலால் முதல்வன் அரன் எனப்படுவன். அஃது அவனுக்கு அநாதியே உள்ளது.

மன்னும் இருளை மதிதுரந்த வா(று) அன்பின்
மன்னும் அரனே மலந்துரந்து — தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய் வான் செய்தல்
சலிப்பில் ; விகாரியலன் தான்.

இதனால் ஆன்மாவுக்கு அன்பு நிகழுமாறும், அது முதல்வனது அன்பை இன்றியமையாதவாறும் கண்டுகொள்க.

தடை:

உயிர் தன் ஏகதேச உணர்வு (பாசஞானம்) நீங்கி முதற்பொருளோடு ஒற்றுமைப்படும் என்றீர். உணர்வு உயிரின் குணமாதலால், உணர்வுகெடக் குணியாகிய உயிரும் கெட்டதெனப்பட்டு, அது திருவடியை அடைவதில்லை என்று முடியும்.

விடை:

ஆம். அவ்வாறு கருதும்போது அது சரியே; அன்றியும், உயிர்க்கு ஏகதேச உணர்வாகிய பாசஞானம் நீங்காது எனினும் ஏகனாதல் என்னும் சிவப்பேறு இன்

றெனவே முடியும். பின்னர் முத்தி நிலையை உளங்கொள்ளுமாறு எவ்வாறு எனின், காலம் இடம் பற்றிய வரையறைக்கு உட்பட்டு நிகழும் உயிரின் ஏகதேச உணர்வுக்குக் காரணம் மலமே ஆகும். கடல் நீரிற் பிரிந்துள்ள உப்பு கண்டிப்புத்தன்மை (Crystalised form) அடைந்து நிற்றல்போல, மலசக்தியின் அகப்பட்ட உயிரின் அறிவு ஏகதேசப் படுதல் ஆகிய செயற்கை நிலையை உடையதாகும். அப்பணைந்த உப்புத் தன் கடினத்தன்மை நீங்கி, தன் இருப்பு நீங்காது, தண்ணீரோடு ஒற்றுமைப்பட்டு வியாபித்து நின்றாற் போல, மலசக்தி கெடுதலால், ஆன்மாத் தன் இயற்கை வியாபக வுணர்வைப் பெற்று முதற்பொருளோடு ஒற்றுமைப்பட்டு அவனுக்குச் சேடமாய் (சிறப்பு அடிமையாய்) நிலையுறும்; பின் முதல்வன் கழலினின்று பேர்ந்து கவர்த்தல் இல்லை.

நசித்தொன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்றா ;

நசித்திலதேல் ஒன்றாவ தில்லை—நசித்து மலம்

அப்பணைந்த உப்பின் உளம் அணைந்து சேடமாம்:

கப்பின்றாம் ஈசன் கழல்.

பரமுத்தி நிலை கூறி முடித்தமையின் ஈசன் கழலினின்றும் கப்பு (கவர்த்தல், பெயர்ந்து மீளுதல்) இன்றாம் என மீளாமை கூறப்பட்டது. "மீளா அடிமை உனக்கே ஆளாய்" என்னும் ஆளுடை நம்பிகள் அருளிச்செயல் ஈண்டு உளங்கொளற்கு உரியது. இதனைத் தெய்வப் புலமைத் திருவள்ளுவர்,

"ஆரா வியற்கை அவா நீப்பின் அந் நிலையே

பேரா இயற்கை தரும்" எனக்கூறி மெய்யுணர் வியலை முடித்தலும்,

"மீட்சியில்லை உரையளவை உண்மையின்,

மீட்சியில்லை உரையளவை உண்மையின்"

(அநாவிருத்தி: சப்தாத், அநாவிருத்தி: சப்தாத்) என உத்தர மீமாஞ்சையாகிய **பிரம சூத்திரம்** முடிதலும் புடைபட வைத்து உணர்ந்து உணர்வு ஒருமை பெற உதவுவன ஆம்.

உயிர்கள் முதல்வனுக்கு அடிமை, மாயையும், மாயா காரியங்களும் முதல்வனுக்கு உடைமை (லீலாவிபூதி) என்பதுபட **"அவை உடைமை; ஆளாம் நாம் அங்கு"** என்றார் ஆசிரியர் இரண்டாம் சூத்திரத்து. அங்குக் கூறியது பொதுவாக எல்லா உயிர்களும் தன் அருளை இன்றியமையாத பொது அடிமைகள் என்பது உணர்த்துதற்கு. இங்கு மீளவும் **"உளம் ஈசன்கழல் அணைந்து சேடமாம்"** என்றது, நித்திய விபூதியாகிய தன் கழலைத் தலைப்பட்டு உணர்ந்தின்புறும் சிறப்புரிமையை விளக்குதற் பொருட்டு எனக்கொள்க. திருவாதவூர் அடிகளும், நீராடும் மகளிராக வைக்கப் பெற்ற சீவன் முத்தரைத் திருவெம்பாவையில் பொதுவாக "அடியோம்" எனக்கூறாது, "உன்னைப் பிரானாகப் பெற்ற உன்**சீர்** அடியோம்" எனக்கூறியருளுதல் காண்க,

இனி ஓர் ஐயம் நீக்குதல்:—

வினா: நான்காம் சூத்திரத்து "சகச மலத்துணராது" என உயிரின் **கேவல**

நிலை கூறப்பட்டது: ஐந்தாம் சூத்திரத்தில், "தாம் தம் உணர்வின்தமியருளால் அளந்தறிந்தறியா" எனச் **சகல நிலை** கூறப்பட்டது; பின் ஆறுஞ் சூத்திரம் முதல் இதுவரை **தூஉய்மை** எனத் திருவள்ளுவர் குறிக்கும் **சுத்த நிலை** கூறப்பட்டது. இம்மூன்று நிலையினும் ஆன்மாத் தன்னியல்புகெட்டு வேறு வேறாய் வருமோ, தன்னியல்பு கெடாது ஒன்றாய் நிற்குமோ! ஒன்றாய் நிற்கும் எனின், இம்மூன்றனுள் இயற்கையும் செயற்கையும் ஆவன யாவை?

கார்காலத்துப் பகலவன் காலையில் மேக படலத்துள் முற்றிலும் மறைந்து ஒளி குன்றி நிற்கும்; ஆன்மா மலத்துள் மறைந்து உணர்வின்றி நிற்கும் கேவல நிலையை அதுபோலக் கொள்க: பின், சிறு காற்றால், மேகஞ் சிறிது சிதறுண்ணும் போது ஞாயிற்றின் ஒளி சிறிது விளங்கித் தோன்றும்; மல சத்தி மாயை காரியங்களால் சிறிது நீங்கச் சிற்றறிவு விளங்கப்பெற்று ஆன்மா உலக போகங்களை நுகர்ந்துவரும் சகல நிலையை அது போலக் கொள்க. இவ்விரு நிலையும் ஆன்மாவிற்கு முறையே மலத்தாலும் மாயையாலும் உண்டாகும் செயற்கை,

இனி, பெருங்காற்றால் மேகம் முற்றிலும் சிதறுண்டு நீங்கியபோது (நீராவியாகக் காற்றுள் மறைந்து நிற்கும் போது) கதிரவன் எங்கும் தன்னொளியேயாய் விளங்குவன்; சத்தி நிபாதத்தால் மல சத்தி முற்றுங் கழன்றபின் வியாபக உணர்வு விளங்கப் பெற்றுத் திருவடி எனப்படும் பர போகத்தை ஆன்மாத் துய்த்து நிற்கும் இயற்கைச் சுத்த நிலையை இது போலக் கொள்க. இதனால் மூன்று நிலையிலும் ஆன்மாத் தன்னியல்பு கெடாது நிற்றல் தெளியப்படும்.

இவ்வதிகரணத்தும் பிற இடத்தும் 'சிபாதம்' என்பது முதல்வன் தன்னை அடைவார்க்குப் பேரின்ப பரபோகமாய் விளையும் பேரின்ப சத்தியினையே ஆம். "அரைமாத்திரையில் அடங்கும் அடி. அகலம் அளக்கிற்பார் இல்லா அடி" என்னும் **திருநாவுக்கரசர்** திருமொழியாலும் அஃது உணரத்தக்கது.

'மலம் நசித்து' என்றது அது தன் மறைத்தற் சத்தி மடங்கிக் கீழ்ப்படுதல் மட்டுமே என்பதை இங்குக் கூறிய உவமையால் உணர்ந்து கொள்க,

பொன்வாள்முன் கொண்மூவிற்
புக்கொடுங்கிப் போய் அகலத்
தன்வாளே எங்குமாம் தன்மைபோல்
—முன்வாள்
மலத்துள் மறைந்துள்ளம் மற்றுலகை
உண்ணும்;
மலத்திரித்துச் செல்லும் வரத்து.

[பொன்வாள்: — பொன்னொளிபோனறிய சூரியன்; வாள்—முன்னையது ஒளி, தனிச்சீரில் உள்ளது அறிவு, முன் மலத்துள் மறைந்து நின்றது; பின் உலகை உண்ணும்; இறுதியில் மலத்தை இரித்து வரத்துச் (மேற்) செல்லும் என முடிக்க.]

பதினொன்றாம் சூத்திரம் முற்றிற்று.

"வைகுந்த - ஏகாதசி"

திரு. என். எஸ். தாத்தாச்சாரியார் – தஞ்சை

நாரணன் தமரைக் கண்டு
உகந்து நன்னீர் முகில்
பூரண பொற்குடம் பூரித்தது
உயர் விண்ணில்
நீரணி கடல்கள் நின்று
ஆர்த்தன நெடுவரை(த்)
தோரணம் நிரைத்து எங்கும்
தொழுதனர் உலகே.
(ஆழ்வார்)

"அறிவு என்னும் ஆற்றில் ஒழுக்கம் என்னும் நீர் பெருகவேண்டும்" (காந்தி அடிகள்)

மனிதனுக்கு உயிரே மிக விருப்பமானது. ஆனால் அந்த உயிரினும் மேம்பட்டது ஒழுக்கமாகும். "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்" என்பது தமிழ்மறை. "ஒழுக்கம் கெட்டவன் ஒன்றுக்கும் உதவான்" என்பதும் நம் தமிழ்ப் பழமொழி. ஒழுக்கம் என்பதை வடமொழியில் "ஆசாரம்" என்பார்கள். ஆசாரத்தில் அதிக கவனம் கொண்டவர்கள் சைவர்களும், வைண வர்களும்! "புலன்கள் ஐந்தும் வென்றிலேன், பொறியிலேன்" என்பது மழிசைப்பிரான் திருவாக்கு. நம் தமிழ் நாட்டில் வகுக்கப்பட்ட ஆசாரங்கள் எல்லாம் உடல் நலத்தையும், ஆன்ம நலத்தையும் அடிப்படையாகக் கொண்டே வகுக்கப்பட்டன. குடல் சுத்தமாகவும், உள்ளம் தூய்மையடையவும், மாதம் இரு முறை பட்டினி இருக்க வழிவகுத்தார்கள். ஒரு வைத்தியன் நோயாளிக்கு "மாதம் இரண்டு" என்று மருந்து கூறினான் என்றதொரு சிறுகதையையும் சொல் வார்கள். உணவை ஒதுக்குவதே விர தத்தின் சிறப்பு இயல்பாகும். நோன்பு என்பதும், விரதம் என்பதும் ஒன்றே. நோன்பிற்கு உபவாஸம்தான் உயிர்நாடி என்பதை "உபாஸ்மின் ச்வோ யக்ஷ்ய மாணே தேவதா வஸந்தி" (தேவதைகள் நம்மிடம் வந்து சாரும் நாள்தான் உபவாஸ நாள் என்பதே இவ்வாக்கியத்தின் உட் கருத்தாகும்) என்று தைத்திரீயமும், "ததுஹாஷாட: ஸாவய ஸோ அனசனம் ஏவ வ்ரதம் மேனே" (ஸவயஸ் என் பவரின் பிள்ளையான ஆஷாடர் என்பவர் விரதம் என்றால் உண்ணாமல் இருப்பதே) என்று சதபதப் பிராம்மணமும் பேசு கின்றன. மஹாபாரதத்திலும் ஆச்வ மேதிகபர்வத்தில் ஏகாதசி, துவாதசிகளின் பெருமையைக் கண்ணன் தருமருக்கு எடுத்துரைக்கும் பொழுது உபவாஸத்தின் சிறப்பை விளக்கி இருக்கிறார்.

ஏகாதசியின் சிறப்பு

இவ்வாறு போற்றப்படும் விரதங்களுள் "ஏகாதசி" விரதம் தலைசிறந்தது. இதையே ஹரிவாஸரம், ஹரிதினம் மஹா விரதம், பெருநாள் என்றெல்லாம் கூறு வார்கள். இந்த நாள் மாதம் இருமுறை வருகிறது. ஏகாதசி உபவாஸம் இருப்ப தால் நோய்களுக்கு முதற்காரணமான குடல் சீர்படும் என்பதை "ஜ்வரேச அதி ஸாரே ச லங் கனம் பரமௌஷதம்" "ஜ்வரத்திலும், கிராணியிலும் பட்டினி

இடப்பதே சிறந்த மருந்தாகும்) என்று வைத்திய நூல் கூறுகிறது. உபவாஸத்தைச் சிறப்புப் பகுதியாகக் கொண்ட ஏகாதசிக்கு இம்மையிலும், மறுமையிலும் ஏற்றமுண்டு. துவாதசியின் முதல் பகுதியை ஹரிவாஸரம் என்று ஸ்காந்தம் அழைக்கிறது. சூரியனிடமிருந்து 11 கலைகளும் சந்திரனில் கலப்பதைச் சுக்கிலபக்ஷ ஏகாதசி என்றும், சந்திரனிடமிருந்து 11 கலைகள் சூரியனுடன் கலப்பதைத் தேய்பிறை ஏகாதசி என்றும் கூறுவார்கள். ஒவ்வொரு தசமி அன்று ஒருவேளை உணவுடன் தொடங்கி, ஏகாதசி அன்று உணவை அறவே தள்ளிப் பகலிலும், இரவிலும் தூங்காமல் திருமாலையே நினைத்திருந்து, மறுநாள் துவாதசி அன்று சூரியோதயத்திற்கு முன்பே எழுந்து, கடன்களை முடித்து, பூஜை செய்து, சுவைகலப்பில்லாத வெறும் அன்னத்தைச் சுண்டைக்காய். அகத்திக்கீரை, நெல்லிக்கனி, இவைகளுடன் கலந்து பல்லில் படாமல், கவளம் கவளமாக மூன்று தடவை உண்ண வேண்டும் என்பார்கள். எந்த உபவாஸத்தையும் முடிக்கும் நாளைப் பாரணை என்றே அழைப்பதும் வழக்கம். "பாரணை" என்றால் தாங்குதல் எனப்பொருள். நிர்ணயசிந்து, கருடபுராணம், காத்யாயனஸ்ம்ருதி, வாயு புராணம், ஸ்காந்த புராணம், ஆக்னேய புராணம், ஹரிதிந திலகம் முதலிய நூல்கள் இந்த ஏகாதசியின் பெருமையை விளக்கிப் பேசுகின்றன.

ஏகாதசியின் பிரிவு.

வஞ்சுள ஏகாதசி, சுக்கில—கிருஷ்ண ஏகாதசி, கோபத்ம விரதம், கைசிக ஏகாதசி எனப் பலவகைப்படும். சுவர்க்கம், மோக்ஷம், நல்லபுத்திரன், நாட்டில் நல்ல அரசாட்சி, முதலிய பலன்களைத் தரக்கூடியது ஏகாதசி எனத் தத்துவஸாரம் என்னும் நூல் கூறுகிறது. ஏகாதசியில் பிறந்தவன் பொறுமையுள்ளவனாகவும், இனிய பேச்சுடையவனாகவும் நல்ல அறிவாளியாகவும், எப்பொழுதும் சிரித்த முகம் உடையவனாகவும் இருப்பான் என்று கோஷ்டீப்ரதீபம் என்னும் நூல் பேசுகிறது. இந்த 24 ஏகாதசிகளுள் கார்த்திகை வளர்பிறை ஏகாதசியான கைசிக ஏகாதசியும், மார்கழி சுக்கில பக்ஷம் ஏகாதசியான வைகுண்ட ஏகாதசியும் மிகவும் சிறந்தன. திருக்குறுங்குடி என்னும் பதியில் வதிந்த நம்பாடுவான் என்ற ஹரிஜன் கைசிகப் பண்ணைப்பாடி மோக்ஷம் அடைந்தான் ஆனதால், இதற்குக் கைசிக ஏகாதசி எனப் பெயர். இதுவே மிக உத்தமமான ஏகாதசியாகும், திருவரங்கம், காஞ்சிபுரம், திருமலை முதலிய புண்ணிய ஸ்தலங்களில் இன்றும் கைசிக புராணம் படிப்பதை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். இன்றுதான் திருமால் அரவணையில் இருந்து எழுந்திருக்கிறார் எனக்கொண்டு, இதை உத்தான (எழுந்திருக்கும்) ஏகாதசி என்றழைக்கிறார்கள். இதற்கு அடுத்த வைகுண்ட ஏகாதசியை வைகுண்டத்தின் கதவு திறக்கும் நாளாகப் பெரியோர்கள் கூறுகிறார்கள். ஆகவேதான் அன்று வைகுந்தக் கதவு திறக்கப்பட்டதைத் "திருவாசல்" என்று வைஷ்ணவர்கள் கூறுகிறார்கள்.

இந்த மாதத்தில் வரும் தேய்பிறை ஏகாதசி அன்று, திருமால் முரன் என்ற அசுரனை மாய்த்து முராரி என்ற பெயரை அடைந்தார் என்று சிந்தாமணி என்னும் நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஏகாதசியன்று பசுவின் வாலைப் பிடித்துக் கொண்டு முன்னோர்களுக்குக் கடன்

செய்ய வேண்டும் என்று சில நூல்கள் கூறுகின்றன. கார்த்திகை மாதத்தில் வரும் ஏகாதசியில் பிள்ளையார் பூஜையைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்றும் வைதிக நூல்வழி. இன்று அம்பரீஷ சரித்திரத்தைப் படிப்பது மிகவும் நல்லது. இந்திரன் ஏகாதசி பூஜை செய்து லக்ஷ்மி தேவியை வணங்கி இழந்த நாட்டை மீண்டும் பெற்றான் என்பதும் சிந்தாமணி யின் கருத்தாகும்.

வைகுந்த ஏகாதசி.

இந்த ஏகாதசிக்குத் திருவரங்கத்தில் தான் ஏற்றம் அதிகம். அதைப் பூலோக வைகுண்டம் என்பதும் இதனால்தான். இந்த வைகுந்தம் என்பது ப்ரகிருதி மண்டலம் என்ற பதினான்கு உலகத்திற்கும் அப்பால் விரஜாநதியின் மறுகரையில் உள்ளதாக உபநிஷதங்களும் மற்றும் நூல்களும் கூறுகின்றன. அறியாமை யற்றவர்கள் தங்கி இருக்கும் இடம் என்று ''வைகுந்தம்'' என்ற சொல்லின் பொருள். இந்த வைகுந்த ஏகாதசி யன்று அதிகாலையில் எழுந்து அரவணை துயின்ற அரங்கன் அன்ன நடை அழகைக் கண்களால் பருகிக் கொண்டே அகமகிழ்ந்துபின் சென்று வைகுண்டவாசலை மிதித்துக் கொட்டகையில் சேர்லவண்ணனை வணங்கினால் மண்ணிலே அன்றே விண்ணகரை அடையலாம் என்பது பெரியோர் கருத்து. வைகுந்தம் அடைந்து நித்ய சூரிகள் என்ற அந்தமிலாப் பேரின்பத்து அடியார்களின் திரளில் கலந்து அவனுக்குக் குற்றேவல் புரிந்து இன்புறுவதே பெருவீடு (மோக்ஷம்) என்று ஸ்ரீ வைஷ்ணவர்களின் கொள்கை. வைகுண்ட ஏகாதசி அன்று திருவரங்கத்திலிருந்து ஸ்ரீவைகுண்டம் கூப்பிடு தூரத்தில் இருக்கும் என்பார்கள். அன்றைக்கு ஸ்ரீரங்கத்தில் வைகுந்தப்படம் அரையணுப் படம் விற்கும் சிறுவர்களும் அதற்கேற்றாற்போல் ''வைகுந்தம் அரையணு'' என்றும் விற்பார்கள். அவனருளால் நிறைமதி பெற்று, உலகசுகங்களில் ஆசையைக்களைந்து, ஆசான் இன்னருளால் இந்த ஜீவாத்மாவானவன் 'இக்கரை' என்ற விரஜாநதிக்கரையை சூக்ஷ்மசரீரத்துடன் அடைகிறான். அங்கு திவ்ய சரீரம் பெற்று அமானவர்கள் என்ற வைகுந்தத் தமர்கள், ''துடர்ந்து எங்கும் தோத்திரம் சொல்லினர்'' என்றபடிக்கும், ''நிதியும் நற்சுண்ணமும் நிறைகுட விளக்கும் மதி முகமடந்தையர் ஏந்தினர்'' என்றபடிக்கும் கைபிடித்து நடத்திச் செல்லத் திருமாமணி மண்டபம் செல்கிறான் என்று உபநிஷதங்களும், மற்றும் சம்பிரதாய நூல்களும் புகழ்ந்து போற்றுகின்றன. நம்மாழ்வார் திருவாய்மொழியில் பத்தாம் பத்து ஒன்பதாம் திருவாய் மொழியாகிய ''சூழ்விசும் பணி முகில்'' என்ற பதிகத்தில் வைகுந்த வழியைப் பற்றி அருமையாகக் கூறுகிறார். கடைசியில் ''வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே'' என்றும் கூறி முடிக்கிறார். அவ்வைகுந்த ஏகாதசி இந்த ஆண்டு 15–12–64 அன்று வருகிறது.

மாளாத வினைஅனைத்தும் மாளநாம் போய்
வான் ஏறி மலர் மகளார் அன்பு பூணும்
தோளாதமா மணிக்குத் தொண்டு பூண்டு
தொழுதுகந்து தோத்திரங்கள் பாடி ஆடிக்
கேளாத பழமறையின் கீதம் கேட்டுக்
கிடையாத பேரின்பம் பெருக நாளும்
மீளாத பேரடிமைக்கு அன்பு பெற்றேம்
மேதினியில் இருக்கின்றேம் விதியினாலே

பழுவேட்டரையர்

வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார்

(பகுதி—2)

அவனி கந்தர்வ ஈஸ்வர கிருகத்து மகா தேவர் கோயில்

இக்கோயில் இக்காலம் அகத்தீஸ்வரர் கோயில் என்று வழங்கப் பெறுகின்றது. இது மேற்கு நோக்கிய சந்நிதியை உடையது. இக்கோயிலில் மதுரை கொண்ட பரகேசரிவர்மன், இராசகேசரி சுந்தரசோழன், பரகேசரி உத்தம சோழன், முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன் இவர்கள் காலங்களில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

கோயில் அமைப்பு முறை

இக்கோயில் கர்ப்பஇல், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை உடையது. அடிமுதல் கலசம் முடிய, கருங்கல் திருப்பணியைப் பெற்றது. மகா மண்டபத்தில் சிங்கம் சுமந்துள்ள தூண்கள் பதினான்கு, யாளி சுமந்துள்ள தூண்கள் இரண்டு, உருண்டை வடிவத் தூண்கள் நான்கு, ஆக இருபது தூண்கள் இருக்கின்றன. இவைகளில் தென்பக்கமாகவுள்ள ஐந்து தூண்களில், குறிஞ்சிப்பாடி மஞ்சன் முடி கொண்டானான இராஜராஜ வஞ்சி இளங்கோ, கலியுக நிர்மலன். கங்கமாத் தாண்டன், மறவன் மனோதனன், அரையகள் அரையுளி என்னும் பெயர்கள் செதுக்கப்பட்டுள்ளன. இப்பெயர்களின் எழுத்துக்கள் மிகப் பழங்காலத்தனவாய் இருக்கின்றன. இம்மகா மண்டபத்தில் எழுந்தருளுவிக்கப்பட்டிருக்கும் கங்கா விசர்ஜனர் திருமேனியும், இவர்க்கு முன்னிலையில் உள்ள இடபதேவரின் திருமேனியும், கண்கவரும் வனப்புள்ளன. இங்குள்ள இடபதேவரின் திருமேனி சலவைக் கல்லினால் ஆக்கப்பட்டது. தென் இந்தியாவில் இதைப்போன்ற வேலைப்பாடுடைய இடபதேவரின் திருமேனியைக் காண்டலரிது. இம் மகா மண்டபத்து மேற்கு வாசலடியில் உள்ள நந்திதேவரின் திருமேனியும் அழகு ஒழுகச் செதுக்கப்பட்டுள்ளது. இக்கோயில் அர்த்த மண்டபத்துக்கும் மகாமண்டபத்துக்கும் இடையில் தென்புறமாகவும், வடபுறமாகவும் இரண்டு வாயில்கள் இருக்கின்றன. அர்த்த மண்டபத்து வாசலடியிலும் கோபுரத்தின் வாசலடியிலும் உள்ள துவாரபாலகர் ஒவ்வொருவருக்கும் இரண்டே கைகள் இருக்கின்றன.

கோயில் கட்டப்பெற்றுள்ள காலம்

இக்கோயிலைக் கட்டியவர் இன்னார் என்று அறிந்து கொள்வதற்குச் சான்று கிடைத்திலது. இங்குள்ள சிங்கம் சுமந்துள்ள தூண்களைக் கொண்டு இக்கோயில் நரசிங்கவர்மனாகிய பல்லவனால் கட்டப்பட்டது என்று கொள்வதற்கு இல்லை. நரசிங்கவர்மன் காலத்தது எனின் தூண்களிலுள்ள சிங்கங்களின் முன்கால்களுக்கு இடையில் அந்நரசிங்கவர்மனது தலை செதுக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கோளாக, தஞ்சாவூர்ச் சில்லா, கும்பகோணந்தாலூகா திருப்புறம்பயத்து ஸ்ரீ சாட்சிநாதர் கோயிலின் இராச கோபுரத்தில் உள்ள தூணே இதற்குச் சான்றாகும். அவனிகந்தர்வ ஈஸ்வர கிருகத்து மகா தேவர் கோயிலிலுள்ள தூண்கள் *நரசிங்கவர்மன் தூண்களைப் பார்த்துச் செதுக்கப்பட்ட போலித் தூண்களாகும். எனவே இக்கோயில் நரசிங்கவர்மன் காலத்துக்குப் பிற்பட்டது என்பது உறுதி. இக்கோயிலில் முதற் பராந்தக சோழன் கல்வெட்டு இருப்பதால் அவன் காலத்துக்கு முற்பட்டது என்பதும் உறுதி.

கொடிமரத்துத் திருப்பணி

இக்கோயிலில் கொடிமரத்துத் திருப்பணியைச் செய்தவன் அடிகள் பழுவேட்டரையன் கைக்

கோளன் தேவன் இரண முகராமன் ஆவன். இச் செய்தி அங்குள்ள "ஸ்ரீ அடிகள் பழுவேட்டரையன் கைக்கோளன் தேவன் இரண முகராமன் எடுப்பித்த துவஜஸ்தம்பம்." என்னும் கல்வெட்டால் அறியக் கிடக்கின்றது.

அளிக்கப்பட்டுள்ள நிவந்தங்கள்

அவனிகந்தர்வ ஈஸ்வர கிருகத்து மகா தேவர்க்குத் தேவதானமாக, விறைக்கூற்றத்துப் பசுங்குளத்தூரில், **வேட்டப்பெருனப்பன் நிலம்** என்னும் பெயருள்ள இருபத்து நான்கு வேலி நிலங்கள் இருந்தன. அந்நிலங்களுக்கு வேலி ஒன்றுக்கு நூற்று இருபது கலம் வீதம், இருபத்து நான்கு வேலி நிலங்களுக்கு வந்த நெல் இரண்டாயிரத்து எண்ணூற்று எண்பதின் கலத்தைத் திருவையாறனோடு ஒக்கும் மரக்காலால் கார்நெல்லில் பாதியும், சம்பா நெல்லில் பாதியும் ஆகப் பசுங்குளத்தூரிலே அளக்கு மாறு, பொய்கைக் குறுவிடத்து வேட்டக் குடையான் கோவிந்தன் கடம்பனுக்குக் குடிநீக்காத் தேவதானமாகச் சுந்தரசோழனின் 13ஆம் ஆட்சி யாண்டில் **அடிகள் பழுவேட்டரையன் மறவன் கண்டன்** கட்டளைப்படி, அவனி கந்தர்வ ஈஸ்வரத்துத் தேவகன்மிகளும், பதிபாத மூலத்தாரும், பட்டுடையாரும், சமயத்தாரும், இத்தளிப் பங்குடையாரும் கொடுத்துள்ளனர்.

இங்குக் குறித்த விறைக்கூற்றம் என்பது சில கல்வெட்டுக்களில் மிறைக்கூற்றம் என்றும் வழங்கப்பெறும். பொய்கை நாட்டுக்கும், இன்னம்பர் நாட்டுக்கும் இடைப்பட்டது இந்த விறைக்கூற்றம்.

இம்மன்னனது (சுந்தரசோழனது) 17ஆம் ஆட்சியாண்டில், அவனி கந்தர்வ ஈஸ்வர கிருகத்து மகா தேவர்க்கு, இவ்வவனி கந்தர்வபுரத்து வீரசோழ அணுக்கன் குணவன் தரணிவல்லவன், பதின் கழஞ்சுப் பொன்னையும், முதலாம் இராசராசனின் 22-ஆம் ஆட்சியாண்டில், பழுவேட்டரையன் குமரன் மறவன் கட்டளைப்படி, பொய்கைக் குறுவிடத்து வேட்டக் குடான் வடுகன் மாதவன், இந்த அவனி கந்தர்வ ஈஸ்வர கிருகத்து மகாதேவர் தேவதானம் ஊரகன் குடியில் விளைவின்றிக் கிடந்த எட்டுமா நிலத்தைக் கல்வி இரண்டு பூவிலும் விளைய மசக்கி, அதனால் வந்த போகத்தையும், இம்மகா தேவர் கோயிலில் இரவும் பகலும் விளக்கு எரிப்பதற்குக் கொடுத்துள்ளனர்.

பழுவூர்ச் சங்கரப்பாடி, மல்லன் சங்கரன் என்பான், இராசகேசரிவர்மனின் 12ஆம் ஆட்சி யாண்டில் அவனி கந்தர்வபுரத்தில் மல்லன் ஆதித்தன் குளத்தையும் அதற்கு அருகில் இருந்த நிலத்தையும் கல்வி அதன் போகங்கொண்டு ஒரு நுந்தா விளக்கு எரிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தான். இக்குளத்தின் மீனடை கொண்டு பொன்னங் குளத்தைக் கல்வி வந்தனர். மல்லன் ஆதித்தன் குளம் இக்காலம் மல்லத்தான் குளம் என்றுவழங் கப் பெறுகின்றது. இது பழுவூர்க்குத் தெற்கே அரை மைல் தூரத்தில் உள்ளது.

அடிகள் பழுவேட்டரையன் கண்டன் சுந்தர சோழன் இசைவு பெற்று, இக்கோயில் நிர்வாகஞ் செலுத்திய நாவலூருடையான் கண்டன் தேவடி, பீடத்துடன் பிள்ளையார் திருமேனி ஒன்றையும், பொற்பூவையும் அளித்துள்ளான். முதலாம் இராசராச சோழனுடைய தேவியார் பஞ்சவன் மாதேவியாரும் இக்கோயிலுக்கு நிவந்தம் தந்துள்ளனர். மாறபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டியனின் கல்வெட்டு, மேலப்பழுவூரின் கீழ்ப்பகுதியை 'உடையார் அவனி கந்தர்வ ஈஸ்வரமுடைய நாயனர் தேவதானம் கீழ்ப்பற்று' —என்று குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு கீழ்ப் பற்றில் தெருவில் நட்டுவைக்கப்பட்டுள்ளது. இதனால் இக்கீழ்ப்பற்று அவனி கந்தர்வ ஈஸ்வர முடையார்க்கு உரியதாய்த் திகழ்ந்தது என்பது தெளிவு.

அவநி கந்தர்வ ஈஸ்வரத்து வடவாயில் ஸ்ரீ கோயில் :—

அவனி கந்தர்வ ஈஸ்வரத்து வடவாயில் ஸ்ரீ கோயிலும் தென்வாயில் ஸ்ரீ கோயிலும் தேவனூரால் கட்டப்பட்ட கற்றளிகளை யுடையன. இவைகளுள் தென்வாயில் ஸ்ரீ கோயில் அழிந்து போய்விட்டது.

"கோவிராசகேசரி பன்மற்கு யாண்டு 6 குன்றக் கூற்றத்துத் தேவதானம் அவநி கந்தற்ப ஈஸ்வர

கிருகத்து வடவாயில் கோவில் மகாதேவர்க்கு இத்தளி தேவனூர் மகளார், பிள்ளையார் சேர மானூர் தேவியார், அக்கார நங்கையார் சந்தரா தித்தவல் இரவும் பகலும் எரியவைத்த நொந்தா விளக்கு ஒன்றுக்குப் படி உழக்கினல் வைத்த பொன் பன்னிருகழஞ்சு."

என்னும் கல்வெட்டுப் பகுதி இந்தவடவாயில் ஸ்ரீ கோயிலைக் கட்டியவர் தேவனூர் என்று குறிப்பிடுகின்றது. இக்கோயில் அவனி கந்தர்வ ஈஸ்வர முடையார் கோயிலுக்கு வடபால் இருக்கின்றது. மேற்கு நோக்கிய சந்நிதியை யுடையது. அடி முதல் கலசம் முடியக் கருங்கல் திருப்பணி பொருந்தியது. இக்காலம் இக்கோயில் அருணசலேஸ்வரர் கோயில் என்று வழங்கப்படுகின்றது. இது கர்ப்பஇல், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்னும் முப்பிரிவுகளை உடையதாய் உள்ளது. அர்த்தமண்டபத்து வாசலடியில் உள்ள துவார பாலர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டே கைகள் இருக்கின்றன. மகாமண்டபத்தில் அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இந்த வடவாயில் ஸ்ரீ கோயில் மகாதேவர்க்கு, இக்கோயிலைக் கட்டிய தேவனூர் மகளாரும் பிள்ளை சேரமானூர் தேவியாருமாகிய அக்காரநங்கையார், இரவும் பகலும் எரிவதற்கு நிசதம் உழக்கு நெய்க்குப் பன்னிரண்டு கழஞ்சுப் பொன்னை வைத்துள்ளனர். இவ்வம்மையாரே வைத்த தராவிளக்கு ஒன்று நிறை உள்கரு இரும்பு நாராயம் உள்பட செருவிடையால் 190 பலம்.

இவ்வம்மையாரே, தென்வாயில் ஸ்ரீ கோயிலுக்கு நிசதம் உழக்கு நெய் எரிய வைத்த பொன் பன்னிருகழஞ்சு. இவ்விளக்கு எரிய வைத்த தரா விளக்கு ஒன்று நிறை உழ்கரு இரும்பு நாராயம் உள்பட செருவிடையால் 250 பலம்.

செய்திச் சுருக்கங்கள்.

நூற்றாண்டு நிறைவு நினைவு விழா :

சைவ சித்தாந்தப் பேரறிஞரும், சிவஞானபோதம் - சிவஞானசித்தியார் - திருவருட்பயன் முதலிய சைவ சித்தாந்த நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவரும், 'சித்தாந்த தீபிகை' அல்லது 'உண்மை விளக்கம்' (The Light of Truth) என்னும் புகழ் பெற்ற ஆங்கில இதழைத் தொடங்கி நடத்தி வந்தவரும், பேரறிஞர் மாக்ஸ்முல்லர் — டாக்டர் ஜி. யூ. போப் — பேராசிரியர் ஆர். டபிள்யூ, பிரேஸர் — டாக்டர் எல். டி. பார்நெட் போன்ற மேலை நாட்டுப் பெருமக்களாலும் மிக மதித்துப் புகழப்படும் நிலையில் சமயத்திற்குப் பெருந் தொண்டு புரிந்த பெருந்தகையும் ஆகிய திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை, B.A., B.L., அவர்களின் நூற்றாண்டு நிறைவு நினைவு விழா, 15-11 64 ஞாயிறு அன்று, சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜச் சார்பில் மிகவும் சிறப்புறத் தியாகராயநகர்த் தருமையாதின சமயப் பிரசார நிலையத்திற் கொண்டாடப் பெற்றது.

திருவாளர்கள் : இராவ் சாகிப் நல். முருகேச முதலியார், B.A., டாக்டர் டி. எம். பி. மகாதேவன், M.A., Ph.D., கோவை சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், B A., B.L , மு. அருணசலம், M.A., ந. ரா. முருகவேள், M.A., M.O.L., ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, B.A., B.L., சி. என். சிங்காரவேலு முதலியார், M.A., ஜி. முத்துசாமிப்பிள்ளை, I. A. S. (Retd) ஆகிய பெருமக்கள் பலர் விழாவிற் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிச் சிறப்பித்தார்கள்.'

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

[பெரியோர்களுக்கு ஒரு விஞ்ஞாபனம். ஐப்பசி இதழில் வந்த இக்கட்டுரைத் தொடரில் 78 ஆம் பக்கம் 23 ஆம் வரியில் திருவரசு என்பதன் பின் (பள்ளிபடுத்த விடம்) என இருப்பதை எடுத்து விடப் பிரார்த்திக்கிறேன்.]

இது நிகழ்ந்த சிலகாலம் சென்றவாறே உடையவர் ஞான கர்ம ஸமுச்சயமே மோக்ஷஸாதனம் என்ற பிழைநோக்குடையாரையும், 'இலிங்கத்திட்ட புராணத்தீரும், சமணரும், சாக்கியரும், மற்றும் மலிந்து வாது செய்வார்களையும் திருப்பணி கொள்ளத் திருவுள்ளமாகி உபாஸனாத்மகஞ்ஞானம் என்ற பக்திரூபாபன்ன ஞானமே மோக்ஷஸாதனம் எனத்தாபிக்கும் **வேதாந்தஸாரம்** என்ற நூலையருளிச் செய்தார். அவரை ஆச்ரயித்தமுதலிகள் அனைவரும் ஒருமிடறாக 'தேவரீர் திக்விஜயம் பண்ணி பிறசமயங்களைக் கடிந்து இத்தர்சனத்தைப் பரப்பவேணும். அதோடு ஆங்காங்குள்ள திவ்ய தேசங்களையும் ஸேவிக்க ப்ராப்தமாகும்' என்று விண்ணப்பித்தனர். உடையவரும் அவர்களது பிரார்த்தனையை ஏற்று அதனைப் பெருமாள் திருமுன்பே விண்ணப்பித்து அவர் அனுமதி வேண்டிநின்றார். பெருமாளும் திருவுள்ளமுவந்து அப்படியே செய்யும்' என்று விடையீந்து அவருக்குத் தீர்த்த ப்ரஸாதமும் ஸ்ரீ சடகோபனும் ப்ரஸாதித்தருளினார். உடையவரும் உவகை மேற்கொண்டவராய் தம்முடன் கூரத்தாழ்வான் முதலியாண்டான் அருளாளப் பெருமாள் எம்பெருமானார் இவர்களையும் கூட்டிக்கொண்டு திக்விஜயமாகப் புறப்பட்டார்.

பரம்பொருளும் பிராட்டியும் திருமலையுள்ள விடமெல்லாம் கோயில் கொண்டு விளையாடும்படியை எண்ணியவராய் தென்கொள் திசைக்குத் திலதமாய் நின்ற திருமாலிருஞ் சோலையை ஸேவிக்கத் திருவுள்ளமாய் நேரே அத்திவ்ய தேசத்துக் கெழுந்தருளினார். 'ஆயிரமாறுகளும் சுனைகள் பல ஆயிரமும் ஆயிரம் பூம்பொழிலும்' என்றபடி அங்குள்ள பல்வகை யிடங்களையும் நன்கு கடாக்ஷித்து ஸேவித்து 'சந்தொடு காரகிலும் சுமந்து தடங்கள் பொருது திருவிக்கிரமனுடைய துலா கோடியில் உற்பவித்த ஏற்றமுடைத்தாய் வந்திழியும் திருச்சிலம்பாற்றிலே நீராடி த்வாதச நாமங்களையும் தரித்து முதலிகளோடே அங்கே வழியிலுண்டான 'பச்சிலை நீள்கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும், குரவும், கோங்கும், சந்தும் முதலிய மரங்களையும், புன்னை செருந்தி, சண்பகம் முதலிய பூ மரங்களையும், மல்லிகை, முல்லை கருமுகை முதலிய பூங்கொடிகளையும் கண்டுகளித்து மாலிருஞ்சோலை நின்ற சுந்தரனை ஸேவிக்கும் ஆர்வத்தோடு கோயிலேற வந்தார்.

சிலம்பாற்றின் தெள்ளிய நீர்போன்று களங்கமற்ற திருவுள்ளத்தராய ஸ்ரீ வைஷ்ணவர்கள் அவரை எதிர்கொண்டு திருவடிகளிலே ஸேவித்து நிற்க உடையவரும் அவர்களைக் குளிரக் கடாக்ஷித்து அவர்களோடே சென்று திருநாராயணப் பொய்கையிலே தீர்த்தம்கொண்டு, திருமாலையாண்டான் திருமாளிகை சென்று அவரைத் தெண்டன் ஸமர்ப்பித்து அவரை தம் உடன்கொண்டு திருத்தேரரம் வழியாகச் சென்று அடிவாரத்தே தெண்டனிட்டுப் படிகடந்து ஏறி அழகர்தம் கோயில்புக்கார் புக்கவர் அடைவே சடகோபன் முதல் சேனையர்கோன் ஈறாக சேவிக்கவேண்டிய இடங்களை எல்லாம் முறையே சேவித்து அடிமுதல் முடியீறாக அழகே வடிவெடுத்தாற் போன்று சர்வ லிங்க சுந்தரியாய் ஸேவைஸாதிக்கும் சுந்தரவல்லியை முந்துற ஸேவித்து அவள் புருஷகாரமாக 'மந்தரம் நாட்டி அன்று மதுரக் கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத்

தோளுடையானைத் திருவடி தொழுது நின்று அவ்வழகன் அழகை யெல்லாம் படிப் படியாக அனுபவித்தார். "மது வார் தண்ணந்துழாய்" என்றும் "போது வாழ் புனந்துழாய்' என்றும் போற்றப் பெறும் திருத்துழாய் மாலை புனைந்து, அவன் முகச் சோதி மலர்ந்து விளங்குவது போன்ற திருவபி ஷேகத்தையும், அதனைச் சூழ்ந்து "நாராயண பரோ ஜ்யோதி:" என்றும் "பரஞ்சோதி" என்றும் பேசப்படும் நாற்புறமும் மலர்ந்து படர்ந்து வீசும் சோதியையும், 'கட்டுரைக்கில் தாமரை நின்கண் . . . ஒவ்வாது" என்றபடி தாமரை உபமேயமாகவே கொள்ளத் தக்க திருக் கண்களையும், "மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ" எனத் தயங்கச் செய்யும் திரு மூக்கினையும், "வாலியதோர் கனி கொல். கோலந்திரள் பவளக் கொழுந் துண்டங்கொல்" எனத் தக்க திருப் பவளவாயினையும், அதன் பவள இதழ்களிலே நிரை கொண்ட முத்துக்கள் போன்று மந்த நகை காட்டும் திருப் பற்களையும், திரண்டுருண்ட கழுத்தும், அவன் கைப் பாஞ்சஜன்யமும் வெட்கும் திருக் கழுத்தையும், கற்பக மரம் கிளைத் தென்ன பலதிவ்யாயுதங்களுடன் விளங்கும் திருக் கரங்களையும் "பூவின்மேல் மாது வாழ் மார்வினாய்" என்றபடி பிராட்டி உறையப் பெற்றதும் திருமங்கை தன் அகிற் சேறு முத்திரையிடப் பெற்று அதனாலே வீறு கொண்ட திருமார்பையும், அம்மார்பிலே தவழும் பாக்யம் பெற்ற 'பல பலவே ஆபரணம்' என்றபடி பலவகையணிகளையும், "மூழ்த்த நீருல கெல்லாம் படையென்று முதல்" நான் முகனைப் படைத்த திருவுந்தியையும், தன் பச்சை மேனியை நன்கு எடுத்துக் காட்டும் பர பாகம் போன்று பொன்னொளி வீசும் பீதக வாடையையும், "நொய்தலர் தாமரை நோற்ற நோன்பினால் செய்த பேருவமை சால் செம்பொற் சீரடி" என்றும், 'தேனே மலரும் திருப்பாதம்' என்றும் சொல்லுகிற படியே தன் சோதியே கீழே பதுமமாய் விரிந்ததோ என்று ஐயுறும்படி சோதி மயமாய் விளங்கும் திருவடியிணையையும் சேவித்து அத் திருவடிவிலே "வருந்தாத ஞானமாய் வரம்பின்றி முழுதியன்றாய்" என்றும் "மாசூணா ஞானமாய் வரம்பின்றி முழுதியன்றாய்" என்றும் சொல்லுகிறபடியே ஞானச் சுடர் வீசி நிற்கும் "வேதாந்த விழுப் பொருளின் மேலிருந்த விளக்கினைக் கண்டு உள்ள முருகி நின்றார். பின்னர் ஆண்டவன் ஸன்னிதியிலே வணங்கித் தாம் தினமும் அநுஸந்தானம் செய்யும் திருப்பாவையருளிய அவ் வாரணங்கினை உள்ளத்தே நிறுத்தி அவள் பாசுரங்களை ஸேவிக்க "நாறு நறும் பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான் நூறுதடாவில் வெண்ணெய் வாய் நேர்ந்து பராவி வைத்தேன். நூறு தடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன்" என்று அவள் நேர்ந்ததையும் அது அப்படியே நிறை வேறாமையையும் எண்ணி ஆழ்வார் திருமகளார் பிரார்த்தனையைத் தான் தலைக் கட்டுவதாக நிச்சயித்தவர், அப்படியே நூறுதடா வெண்ணெயும், நூறுதடா அக்கார வடிசில் தளிகையும் அழகர் திருமுன்பே ஸமர்ப்பித்து ஆண்டாள் வாக்கை நிறைவேற்றி "ஏறு திருவுடையார் இன்று வந்திவை கொள்ளுங் கொலோ? என்று ப்ரார்த்தித்து நிற்க அழகுக் கரசனும் தாம் அமுது செய்தருளினதாக அருளின அளவிலே அவன் கொண்டதுக்குக் கைக் கூலியாகப் "பின்னும் ஆளும் செய்வன்" என்று ஆண்டாள் அருளிய படியைத் தாமும் விண்ணப்பித்து இவை யெல்லாம் நித்யமாய் நடந்தருள க்ருபை பண்ண வேணும் என்று திருப் பல்லாண்டை அநுஸந்தித்து நின்றார். அழகரும் போர உகந்தருளி அவரை விசேஷ கடாக்ஷம் செய்து தீர்த்த ப்ரஸாதம் ஸ்ரீ சடகோபன் முதலியன அருளினார். உடையவர் மீண்டும் ஆண்டாள் ஸந்நிதிக் கெழுந்தருளி அவள் நேர்ந்ததைத் தலைக் கட்டினமையை விண்ணப்பிக்க, ஆண்டாளும் தன் சோதி வாய் திறந்து உடையவரை 'அண்ணா!' என்று விளித்து 'ஒரு உடன் பிறந்தாள் கேளிக்கையை அவள் தமையன் முடித்து வைக்குமா போலே நீர் செய்தருளினீரே!" என்று மிக உவந்து அருளிச் செய்தாள்.

(தொடரும்)

10 JAN 1966
MADRAS



மஹாவிஷ்ணு

தென்காசி சிற்பம்

10 JAN 1966
MADRAS



ஊர்த்துவ தாண்டவர்

தென்காசிக் கோயிற் சிற்பம்

சிவமூர்த்தங்கள்

(திரு. ம. வெ. மு. நாகராஜக் குருக்கள், சிறுதையூர்—லால்குடி.)

தெளிவும்-ஞானமும்

எப்போதும் இன்ப துன்பங்களில் உழன்று கொண்டிருப்பவர்களுக்கு இவ்வுலகம் சில சமயங்களிற் சலிப்பைத் தருவதுண்டு. அப்போது உலக வாழ்வில் ஊன்றிய மனம் பற்றுக் கோடின்றிக் குழம்பித் தவிக்கின்றது. இந்த நிலையிலிருந்து விடுபட்டு எப்போதும் மனச்சாந்தியுடன் இதமான வாழ்க்கை நடத்துவதற்கு நாம் நாள்தோறும் திருக்கோயிலுக்குச் சென்று சிவமூர்த்தங்களைத் தரிசித்து வர வேண்டும். ஆலயத்தினுள் நுழையும் போதே நம் மனத்திலிருக்கும் உலகக்கவலைகளையெல்லாம் வெளியே விட்டு விட வேண்டும்.

அறிவும் ஆற்றலும் நிரம்பாத சிறு பிள்ளைகள் பெற்றோர்களின் ஆதரவை நாடித் தாய்தந்தையரின் பாதங்களைக் கட்டிப் பிடித்துக் கொள்வது போன்ற சிறந்த அன்பு உணர்ச்சியுடன், சிற்றறிவுடைய நமது மனம், சிவ மூர்த்தங்களைக் கண்டவுடன் **'யான் உனைச் சிக்கெனப் பிடித்தேன்'** என்றது போல, இறுகப் பற்றிக் கொள்ளவேண்டும். நாம் நமது புறக்கண்களால் சிவமூர்த்தங்களைத் தரிசிக்கும் போதே உள்ளமும் உயிரும் அருளுருவங்களுடன் ஒன்றிக் கலந்து நிற்றல் வேண்டும். ஏனைய உலக விஷயங்களில் காலத்தைச் செலவழிப்பது போல, அடிப்படையான தத்துவப் பொருள்களை நன்குணர்ந்து **சிவாலய தரிசனம்** செய்வதற்காகவும், சில மணிநேரங்களைச் செலவு செய்தல் வேண்டும். இச் செயலை வழக்கமாக்கிக் கொள்ள முயன்று பழகி வருதல் வேண்டும்.

இதனால் நம் வாழ்க்கையிலுள்ள குழப்பங்களெல்லாம் மெல்ல மெல்ல நீங்கி, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கேற்ற தெளிவும், ஞானமும், நம்முடைய மனமொழி மெய்களில் பிரகாசிக்கத் தொடங்குகின்றன. சிவமூர்த்தங்களைத் தரிசிப்பதினால் மனக்கவலைகளை மறந்து தூய்மையான ஞானவாழ்க்கை நடத்துவதற்குரிய புதிய ஆற்றல் நமக்கேற்படுகின்றது. துன்பமேயில்லாத பரிசுத்த நிலைக்குத்தான் **சிவம்** என்று பெயர்.

> "ச்வச்ரேயசம் சிவம் பத்ரம்
> கல்யாணம் மங்களம் சுபம்"
>
> —அமரம்.

சிவம்—பத்ரம்—கல்யாணம்—மங்களம்— சுபம் ஆகிய சொற்கள் ஒரே பொருளுடையன. புத்த மதத்தைச் சார்ந்த **அமரசிம்மன்** என்பவரியற்றிய வடமொழி நிகண்டில் கூட, இவ்வாறு கூறப்பட்டுள்ளது. எனவே சிவமூர்த்தம் என்பது மங்களகரமான - இன்ப ரூபியான மூர்த்தங்கள் என்று அறியவேண்டும். சிவமூர்த்தங்களைத் தரிசிப்பதாலும் தியானிப்பதாலும் நன்மக்கட்கு மங்களங்களெல்லாம்-நல்லனவெல்லாம் பெருகும் என்பதைச் **சிவ என்ற** சொல்லே யுணர்த்துகின்றது.

சிவாகமம் காட்டுவன:

திருக்கோயிலில் விதவிதமான தெய்வ வடிவங்களைக் காண்கின்றோம். சிவலிங்கம்-விநாயகர்-முருகப் பெருமான் - நடராஜர் - அம்பிகை - நந்திகேச்வரர் - சண்டிகேச்வரர் போன்ற இன்னும் பல சிவமூர்த்தங்கள் அவரவர்க்குரிய இடங்களில் சைவ சித்தாந்த அடிப்படையில் தாபிக்கப் பெற்றுள்ளன. சிவாலயத்தில் இன்ன மூர்த்தம் இன்ன இடத்தில்தான் இருக்க வேண்டும் என்ற நியதியுண்டு.

சிவமூர்த்தங்களின் திருவுருவபேதங்கள், அவர்களின் நிறம், தன்மை, ஆயுதங்கள்,

வியாப்தி, வியாபகம், பூசிக்க வேண்டிய முறை, சிவமூர்த்தங்களின் வழிபாட்டால் நாம் பெறும் பயன் ஆகிய இவைகளை எல்லாம், சைவசித்தாந்தத் தத்துவப் பொருள்களுக்கு மாறுபடாத வண்ணம் சிவாகமங்கள் கூறிச்செல்கின்றன. மக்கள் தம் மனதில் தோன்றியபடி கற்பனையால் சிவமூர்த்தங்களை அமைத்திருப்பதாக ஆகமம் சொல்லவில்லை. மனம் வாக்குகளால் குறிப்பிட்டுக்கூற இயலாதவர் சிவபெருமான். "காண்டல் கருதல் முதலிய அறிவு அளவைகளினால் இவன் இறைவன், இப்படி இருப்பான், இன்ன தன்மையன், இன்ன நிறம், என்று பிறருக்கு எடுத்துக்காட்ட இயலாத அருவத்திற்கும் மேலான நிலையில் இருப்பதே **சிவம்**" என்று **சுப்பிர பேதம்** என்னும் ஆகமத்தில் சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய பரம் பொருளைப் பகுத்தறிவுள்ள மக்கள் எவ்வாறு தம் கண்களாற் காண்பது இயலும்?

சிவ தத்துவம்

நாம் வாழ்கின்ற உலகமும் உடலும் முப்பத்தாறு தத்துவங்களாலானவை. "ஆகின்றவாறு றாருஞ்சைவர் தத்துவம்" என்பர் **திருமூலர்** பெருமான். இந்த முப்பத்தாறு தத்துவங்களையும், ஆன்ம தத்துவம், வித்யா தத்துவம், சிவ தத்துவம் என்ற முப்பகுதியாகக் கூறுவதுண்டு. ஆன்ம அறிவு உலக போகங்களை நாடிப் போகமனுபவிப்பதற்குச் சாதனங்களாக வுள்ள தத்துவங்கள் இருபத்து நான்கும், **ஆன்ம தத்துவம்** ஆகும். இத் தத்துவங்களால் பாச அறிவு பெருகும். பாச அறிவால் இறைவனைக் காண இயலாது. வித்தியா தத்துவங்கள் ஏழு. இவற்றால் ஆன்ம அறிவு விளக்கம் பெறும். மயக்க அறிவு நீங்கும்.

"அயதா புத்திரர் தேஷு
பகுதாப் ராந்திருச் யதே ||
யதார்த்தா காரசம் வித்திர்
வித்யேதி பரிகீ யதே ||"

இதன் பொருள்:

"பொருள்களிடத்தில் பலவித மாறுபாடான புத்தியே மயக்கம் என்று கூறப்படுகிறது. பொருள்களிடம் இயல்பாக உள்ள உண்மையை அறிவதே **வித்யை** என்று சொல்லப் படுகிறது."

வித்தியாத்துவம் என்பது உலக போகங்களிலேயே அழுந்தி விடாமல் ஆன்ம அறிவு மேனோக்கிச் செல்லுவதற்குரிய தத்துவங்களைக் கொண்டதாம். இதனால் பசு அறிவாகிய ஆத்ம ஞானம் ஏற்படும். இதிலும் சிவ பெருமானைக் காண இயலாது. ஆன்ம அறிவு சிவனிடத்தில் லயிப்பதற் குரிய தத்துவங்களே **சிவ தத்துவம்** என்று கூறப்படுகிறது, (1) நாதம் (2) விந்து (3) சாதாக்கியம் (4) ஈஸ்வரம் (5) சுத்த வித்தை ஆகிய ஐந்து தத்வங்களுமே சிவ பெருமானைக் காண்பதற் குரிய சுத்த தத்துவங்களென்றும், சிவ பெருமான் இத் தத்துவங்களை அதிஷ்டித்து நின்றே தமது சக்தியால் மாயை முழுவதும் வியாபித்து உயிர்களுக்குத் தனுகரண புவன போகங்களைப் படைத்தும் காத்தும் வருவரென்றும் **சுப்பிரபேதாகமம்** சொல்லுகிறது.

சிவ தத்வ மிதம் புரோக்தம்
தத்து வாணுமகி லாத்மநாம்!

எல்லாத் தத்துவங்களுக்கும் உயிர்களுக்கும் காரணமான சிவன் மூர்த்திகரிக்கு மிடம் சிவ தத்துவம் என்று சொல்லப் படுகிறது. இத் தத்துவ மைந்தாலும் ஆன்மாக்களுக்குப் பதி அறிவு என்ற **சிவஞானம்** சித்திக்கும். பாச அறிவாலும் பசு அறிவாலும் சிவனைக் காண முடியாதென்பதும், சிவனறிவாகிய பதி ஞானத்தால் சிவனைக் காண வேண்டுமென்பதும் சாத்திர நூற்றுணிபு. எனவே பாச அறிவும் பசு அறிவும் கடந்த சிவ ஞானத்தால், சிவ பெருமானைக் காண வேண்டும் என்ற இடைவிடாத அன்பும் ஆர்வமும் கொண்ட சாதகர்களுடைய நன்மையையே பொருளாகக் கொண்டு, சிவன் தாமே தம் விருப்பத்தினால் விசுத்த தேகத்தைச் சிவ தத்துவத்திலிருந்து தாங்கியுள்ளார் என்றும் ஆகமம் கூறியுள்ளது. எனவே சிவ மூர்த்தங்கள் சிவ தத்துவத்தி லிருந்து தொடங்குகின்றன என்றும், ஆன்மாக்களிடமுள்ள கருணையினால் சிவ பெரு-

மானே எடுத்துக் கொண்ட சரீரம் **சிவமூர்த்தங்கள்** எனவும் இங்கு எடுத்துக் காட்டப் பெற்றது.

சிவ தத்துவங்களாகிய (1) நாதம் (2) விந்து (3) சாதாக்கியம் (4) ஈஸ்வரம் (5) சுத்த வித்தை என்ற ஐந்து தத்துவங்களையும் இடமாகக் கொண்டு ஆன்ம அறிவுக்குக் காட்சி தரும் சிவத் திருமேனிகள் சகளம் - நிட்களம் - சகள நிஷ்களம் என மூவகைப்படும். (1) சிவம் (2) சக்தி (3) நாதம் (4) விந்து என்னும் நான்கும் **நிஷ்களம்** என்னும் அருவவடிவமாகும். சாதாக்கிய தத்துவத்தை இடமாகக் கொண்டு சதாசிவமூர்த்தி காட்சி தருவர். இவரே அருவுருவ வடிவமான சிவலிங்கமூர்த்தமாகும். ஈச்வரதத்துவத்திலிருந்து மகேஸ்வரரும், சுத்தவித்யா தத்துவத்திலிருந்து உருத்திரரும், வித்யா தத்துவாதிபதியாகிய விஷ்ணுவும், ஆன்ம தத்துவாதிபதியாகிய பிரமாவும் **சகளம்** என்ற உருவத்திருமேனியுடையவர்களாகக் காட்சி தருவார்கள். இங்கு கூறிய நவ வடிவங்களில் சதாசிவர், மகேஸ்வரர், ருத்திரர், விஷ்ணு, பிர்மா ஆகிய ஐந்து சிவமூர்த்தங்களும் **காரணேசுவரர்கள்** என்று சொல்லப்படுவார்கள். உலகம்-உடல் - இன்பதுன்பங்கள் இவைகளைத் தோற்றுவித்தும், காத்தும் - அழித்தும் - மறைத்தும், அருள் புரிந்தும் வருவதால் இவர்களைக் காரணேசுவரர்கள் என்று ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. சிவமூர்த்தங்கள் அனைத்துக்கும் முதன்மையான மூர்த்தங்கள் காரணேசுவரர்களேயாம். சிவாலயத்தில் இங்குக் காட்டிய தத்துவங்களுக்கேற்பச் சிவமூர்த்தங்கள் காட்சி தருவதைத் தரிசிப்போம்.

நாதம் விந்து இவ்விரண்டும் தத்துவங்கள். இத்தத்துவங்களுக்குரியவர்கள் சிவமும் சக்தியும் ஆவர். இவ்வடிவம் அருவமாகும். ஆதலால் இவ்விரு அருவத் திருமேனிகளையும் தியானித்தல் பூஜித்தல் இயலாதாம். இதைக் குறிப்பிடும் சுப்பிரபேதாகமம் வருமாறு:—

**"தியானபூஜாவிஹீநஸ்து
நிஷ்களத்வம் த்விதீயகம்."**

சிவாலயத்தில் கர்ப்பகிரகத்திலுள்ளிருக்கும் சிவலிங்க வடிவமே சதாசிவமூர்த்தம் எனப்படும். சிவமூர்த்தங்கள் அனைத்திற்கும் மூலமான வடிவம் சிவலிங்கமேயாகும். சைவத்தில் **மூலவர்** என்று குறிப்பிடப்படும் சிவலிங்கம் அருவுருவவடிவமாகும். **லிங்கம்** என்ற சொல்லுக்கே, குறி அல்லது அடையாளம் என்று பொருள். அருவமான சிவத்தையும் சக்தியையும் குறிப்பிடும் வடிவமே சிவலிங்க வடிவமாகும். சிவமூர்த்தங்களிலேயே சிவலிங்க மூர்த்தம்தான் முதன்மையானது. இவ்வடிவம் சைவசமயத்தின் உயிர்நிலை போன்றது. **திருமூலரடிகள்** சிவலிங்கங்கள் பற்றிய சிறந்த உண்மைகளைத் திருமந்திரத்தில் பல இடங்களில் தெரிவித்துள்ளார்கள். சிவாலயமே சிவலிங்க மூர்த்தத்தை நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது. உயர்ந்த விமானமும் சுற்றிச் சூழ்ந்த பிராகாரமண்டபங்களும் ஒன்றாக இணைந்து காட்சி நல்கும்போது ஒரு மிகப் பெரிய சிவலிங்கவடிவமே நம் மனக்கண்ணில் தோன்றுகின்றது. சிவாலயதரிசனம் செய்யும்போது விமானத்தைத் தூல லிங்கமாகவும், கர்ப்பகிரகத்திலுள்ள சதாசிவலிங்கத்தைச் சூக்குமலிங்கமாகவும், பலிபீடத்தைப் பத்ரலிங்கமாகவும் பாவித்து வணங்கவேண்டும்.

தூய விமானமுந் தூலம தாகுமால்
ஆய சதாசிவ மாகுநற் சூக்குமம்
ஆய பலிபீடம் பத்ரலிங்க மாகுமால்
ஆய அரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே.

— திருமந்திரம்.

திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்

ஸ்ரீலஸ்ரீ மாணிக்க வாசக ஞான தேசிக சுவாமிகள்
(சிவராஜ யோக மடம், மேலையூர்)

8. நான்முகன்

சிறைவண் டலர்பூங் கமலமலர்ச்
சீரார் தவிசில் வீற்றிருந்து,

மறைவிண் டலந்த நான்முகனை
மாயோன் மகனைப் போற்றிடுவாம்!

துறைவிண் டலர்ந்த சுரிசங்கம்
சுடர் முத்தீனும் கடற் காழிக்

கறைவிண் டலர்ந்த கண்டன் அருட்
கவுணி தனைக்காத் தருள் என்றே.

(குறிப்புரை: சிறை-இறகு, மாயோன் மகன்-பிரமன், கறைவிண்டு அலர்ந்த கண்டன்-திருநீல கண்டம் உடைய சிவபெருமான், கவுணி-கவுணியன், திருஞானசம்பந்தர்)

9. திருமகள்

மன்னுபுகழ் இம்மைநலம் வான்பதவி ஈவாள்
வாலிய அருட்குழவி தன்செவிலி யாவாள்

மாயவன் உளக்கமல மேவி அவன் வாழும்
மாநில வளந்தழைய ஆருயிரை யூட்டிப்

பொன்னலர இன்னறவு மொய்யளியை யூட்டும்
பூங்கமல மாமனை புகுந்துவளர் வாளைப்,

பூமக ளெனும் திருவை, வார்கட லுதித்தே
பூமனை அளித்த கொடியைத் தனிதுதிப்பாம்!

வன்னியொடு கூவிளமு மத்தமதி வைத்த
வார்சடை யிலங்குகுழை வள்ளலிவ னென்ன

மலரனைய மெல்விர லெடுத்துநனி சுட்டி
வளமலி தமிழ்ப்பதிகம் மழலையொடு சிந்தும்

இன்னினிய ஞானனை எனக்கினிய வாழ்வை
எவ்வுலகில் எக்கலையு மேத்தரிய தேவை

ஏழிசையி னைப்பயனை யாழ்முரி இசைத்த
என்னிருகண் மாமணிதனைக் காக்க என்றே.

(குறிப்புரை : வாலிய-சிறந்த, பூங்கமல மா மனை-தாமரைப் பூவாகிய சிறந்த வீடு, பூமனை அளித்த-தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனை நல்கிய, யாழ்முரி-திருஞானசம்பந்தர் பாடிய 'மாதர் மடப்பிடியும்' என்னும் தேவாரத் திருப்பதிகம், 'யாழ்முரிய இசைத்த' எனவும் பொருள் கொள்ளலாம்.)

10. நாமகள்

மலையாள் கொழுநன் திருவ டிக்கே
மாருத் தொழும்பு பூண்ட புகழ்

வளவர் பொன்னித் திருநாட்டின்
வாழ்வை ஊழிக் காலத்தும்

உலையா தோங்கும் புகழ்க் காழி
உதித்த ஞானச் சுடர்க் கொழுந்தை,

உற்ற இடர்தீர்த்து எனைக் காத்த
ஒருவன் தன்னைக் காக்க எனக்,

கலையா ரணங்கை, நான்முகனுர்
காதற் சுவையா யூறமிர்தைக்,

களிவண் டுதேத்தளை யவிழ்பூங்
கமலக் கோயில் மடமானை,

நிலையா உடல்செய் கணவற்தும்
நேராப் பெருமை படைத்தோங்கும்

நிமலை மலர்ச்செஞ் சீறடியை,
நெஞ்சங் குழைந்து போற்றிடுவாம்.

(குறிப்புரை : மலையாள் - பார்வதி தேவி, தொழும்பு - அடிமைப் பணி. வளவர் - சோழர். பொன்னி - காவிரியாறு. உலையாது - அழியாமல், கலையாரணங்கு - கலைமகள், சரசுவதி. நிமலை - மலமற்றவள்.)

"அகிலம் புகழும் அஷ்டபுஜப் பெருமாள்"

திரு. சீ. ஈ. எஸ். பெருமாள், காஞ்சிபுரம்.

இடைவிடாது நடந்து கொண்டிருந்த உலக சிருஷ்டி ஒரு சமயம் நின்று விடுகிறது. அது பிரம தேவனுக்கே சோதனையாகவும் அமைகிறது. வாணியின் ஹம்ஸமாகிய சிருஷ்டி தண்டம் வாணியின் கைக்கு மாறுதலடைகிறது. அதற்குக்காரணம், அவளது சீற்றத்திற்கு பிரமன் ஆளானதே யாகும். இந் நிலையில் சிந்தா குல மடைந்த பிரம தேவன், 'யாங்ஙனம் இனி சிருஷ்டி தொழில் நிகழ்த்துவேன்?' — என்றெல்லாம் எண்ணிக் கலக்க முற்ற நடையினனுய்க் காஞ்சிக்கு வருகின்முன். நீலமேக ச்யாமள வண்ணனுகிய திருமால், கருணகரன் அல்லவோ? அவரை நினைத்து யாகசாலை யமைத்து யாகம் இயற்றுகிருன். பிணக்குற்றுப் பிரிந்து வாழும் வாணி, இதனை யறிந்து அடக்க மாட்டாத சீற்றத்தோடு பிரம யாகத்தைக் கலைக்க முயல்கிருள்.

முதலில் தன் மாயையால் அக்னி ரூபியான மாயா அனலனை உண்டாக்கி அனுப்புகிருள், சரஸ்வதி. அது கண்ட மகாவிஷ்ணு, அந்த அனலனை ஒரு கையில் தீபம் போல் ஏந்திக் கொண்டு, **'தீபப் பிரகாசர்'** ஆகிருர்.

வாணி களைக்கவுமில்லை; மருளவுமில்லை. உடனே அவள் கபாலாஸ்திரம் பிரயோகித்தாள். திருமால் அக்கணமே சிம்ஹ ரூபமாய், அதனைப் பக்ஷித்து **'நரசிம்மர்'** ஆகிருர்.

அடுத்து, அநேக கோடி அசுரர்கள் ஆர்ப்பரித்து வருகிருர்கள், வாணியின் வாக்கை ஏற்று! அவர்கள் அத்தனை பேரையும் கொன்று குவித்து, பெருக்கெடுத் தோடும் உதிரத்தை உறிஞ்சிக் குடித்த நிலையில் உடல் செந் நிறமாகி, **'பவள வண்ணர்'** ஆகிருர், திருமால்!

தான் விடுக்கும் சக்திகள் அனைத்தும் ஒரு நொடியில் பாழ்படக் கண்ட வாணி, மனம் ஓடிகிருள்; பதை பதைக்கிருள். மனத்தால் தியானித்து, எவரும் அஞ்சும் வண்ணம் காளியை ஏவுகிருள். அக்கணமே, அண்ட முழுதும் பேரொலி செய்து பொங்கி எழுகிருள். காளி! பார்க்கிருர், பக்தவத்சலனுகிய எம் பெருமான்! எட்டுக் கரங்களில் எட்டு ஆயுதங்களோடு வீரம் விளங்கத் தோற்றமளிக்கிருர், திருமால்! காளியைத் தனது எண் கரங்களால் பிடித்து இறுக்கிப் பூமியில் தள்ளி, அவள் சிரசின் மீது அட்டகாசமாய் வீற்றிருந்து, **'அஷ்ட புஜர்'** ஆகிருர். அந் நிலையில் அவர், அகிலம் புகழும் வண்ணம் கோயில் கொண்டதாகத் தல வரலாறு கூறும்.

ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை உலகிற்கு அறிவித்த **ஸ்ரீ இராமாநுஜர்,**

ஸ்ரீ தூப்புல் **வேதாந்த தேசிகர்** முதலானோர் தன்னிடம் வாழ்ந்ததனுற் புகழ் படைத்த ஹஸ்திகிரி, சத்திய விரத க்ஷேத்திரம் ஆகிய ஸ்ரீ காஞ்சி, கலைப் பெருக்கையும் அருள் பெருக்கையும் பாய விட்டு அனைவரையும் ஆகர்ஷித்து வருகிறது. அதனுல் தான், " **ஆடவர்கள் எவ்வாறு அகன்ருெழிவார் ?** வெஃகாவும், பாடகமும் ஊரகமும் பஞ்சரமா—நீடியமால் நின்ருன் இருந்தான் கிடந்தான் -இதுவன்ருே, மன்ருர் மதிற்கச்சி மாண்பு"—என்று பழந் தமிழ்ப் பாடல் ஒன்று கூறுகிறது போலும் !

கலைக் கண்களால் மற்றவர்களைக் கவர்ந்து இழுத்து, கருணை மழையால் குளிர வைத்து. விஷ்ணு காஞ்சியின் விளக்கம் போன்று எழில் மிடுக்கோடு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ அஷ்ட புஜப் பெருமாளைக் காணக் கண், கோடி வேண்டும்! இவர் மேற்கே திருமுக மண்டலம். நின்ற திருக் கோலம். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வசீகரத் தோற்றம். ஒருங்கே திரண்ட நல்ல எடுப்பு. சித்திரை மாத ரோகிணியில் பெருமாள் திருவவதாரம். கஜேந்திர ஆழ்வாருக்கும் பிரமாவிற்கும் இவர் பிரத்தியட்சம் என்பர், சக்கர கோடி விமானம். கஜேந்திர புஷ்கரணி, தாயார் புஷ்பவல்லித் தாயாருக்குத் தனி சந்நிதி.

பொதுவாக, நான்கு கைகளோடு காட்சி தரும் திருமால், இங்கே எட்டுக் கரத்தோடு கம்பீரமாக விளங்குகிருர். இவருடைய வலப்புறத்திலுள்ள நான்கு கைகளில் கத்தி, சக்கரம், தாமரை, அம்பு ஆகிய ஆயுதமும், இடப்புறத்தில் கோதண்டம், சங்கம், கேடயம், கதாயுதம் ஆகிய ஆயுதமும் தாங்கிய திருக்கோலத்தோடு காணப்படுகிருர். அதனைக் கண்டு இன்புற்ற **திருமங்கை ஆழ்வார்**, அக்காட்சி நலத்தின்பத்தைப் படம் பிடித்துக் காட்டுவதைப் பாருங்கள்:

"செம்பொனிலங்கு வலங்கை வாளி
திண்சிலை தண்டொடு சங்கமொள்வாள்

உம்பரிரு சுட ராழியோடு கேடக
மொண்மலர் பற்றி யெற்றே

வெம்பு சினத்தடல் வேழம்வீழ வெண்
மருப் பொன்று பறித்து இருண்ட

அம்புஜம் போன்றிவர் ஆர்கொல்? என்ன
அட்ட புயகரத்தே னென்ருரே!"

பேயாழ்வார், திருமங்கை ஆழ்வார், வேதாந்த தேசிகர் ஆகியோர் சாதித்த மங்களா சாசனம் இப்பெருமாளுக்கு உண்டு. ஸ்ரீ வேதாந்த தேசிகர் தமது அஷ்டபுஜாஷ்டகத்தில், இப்பெருமாளின் குணவிசேஷங்களைப் பாராட்டி விட்டு, 'உனை நினைந்துருகும் பக்தர்களை ஆட்கொள்ளப் போதாவென்று மேலும் நான்கு கைகளைப் பெற்றனையோ ?'—என்று சிறிது உரிமையோடு வினவுகிருர். தமது தீஞ்சுவைக் கவிதைகளின் மூலம் உள்ளத்து உணர்வுகளுக்கு ஓர் உருவம் கொடுத்து, 'அழகியராம் இவர் ஆர் கொல்!'—என்று '**நாயக-நாயகி பாவம்**' விளங்கப் பாடுகிருர், திருமங்கை ஆழ்வார் !

அம்மட்டோ? பேயாழ்வாரும், "தொட்டபடை எட்டும் தோலாத வென்றியான், அட்டபுயகரத்தான் அஞ்ஞான்று—குட்டத்துக், கோள் முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான். தாள் முதலே நங்கட்குச் சார்வு"—

என்று எல்லாம் பேய் போல் அலைந்து திரிந்து அவர் அவளுக்காக ஏங்குகிறார்.

இக்கோயிலினுள் **ஸ்ரீ பூவராகப் பெருமாளும்** எருந்தருளி இருக்கிறார். இவர் முகம் வராக ரூபம்; வீற்றிருக்கும் திருக்கோலம். இவருடைய வலது திருப்பாதம் பூமியைத் தொட்டும், இடது திருப் பாதம் இரு சர்ப்பங்களின் மீது பட்டும் காணப் படுகிறது. இவருடைய இடது பாகத்தில் மகாலட்சுமி வீற்றிருக்கும் நிலையில், ஒரு கையால் அணைத்தவாறும் இன்னொரு கையால் அடியைத் தாங்கிய வாறும் விளங்குகிறார். மற்றும் இங்கு, அலர்மேல் மங்கை, ஆஞ்சநேயர், ஆண்டாள், கூரத்தாழ்வார், பேயாழ்வார் சந்நிதிகளைக் காணலாம். இங்குள்ள **'வடக்கு வாசல்'** வெகு விசேஷம், 'செந்தமிழ் பாடுவார் தாம் வணங்கும் தேவரின் வைகுந்த நீள் வாசல்' வைகுண்ட ஏகாதசி யன்றே திறக்கப் படும், காஞ்சியில் வேறெங்கும் 'வடக்கு வாசல்' இல்லை என்கிறார்கள். அதனால் இங்கு, **வைகுண்ட ஏகாதசி** மிக மகோன்னதமாகக் கொண்டாடப் படுகிறது.

இக்கோயிலின் கட்டடக் கலையையும் அமைப்பு முறைகளையும் நோக்குமிடத்து, சோழர்காலத்துப் பாணியை ஒத்திருப்பது தெரியவரும். வெளிச்சுற்றுச் சுவர்களில் தமிழ், கிரந்தக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை ஆராய்ச்சியாளர்க்குப் பெருவிருந்து அளிப்பன. அவைகளுள் பெரும்பாலான கல்வெட்டுகள், அக்கால மன்னர்கள் இக்கோயிலுக்குச் செய்த சீர்திருத்தங்களையும், தேவதானமாக விட்ட நிவந்தங்களையும் பற்றி ஒருவாறு அறிவிப்பன ஆகும். *

கந்தர் சஷ்டி விழா நடைபெற்ற கோயில்கள் சில

ஊர்ப் பெயர்.		கோயிலின் பெயர்.	
சென்னை	—	ஸ்ரீ அருணசலேசுவரர் கோயில்	
குமாரவயலூர்	—	ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி	,,
பெரம்பூர் (மாயூரம் வட்டம்)	—	ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி	,,
பழநி	—	ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி	,
வன்னிய தேனும்பேட்டை	—	ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி	,,
அம்மாப்பேட்டை (சேலம்)		ஸ்ரீ குமரகுருபர சுப்பிரமணிய சுவாமி	,,
திருவொற்றியூர்	—	ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி	,,

14—11—64 அன்று சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீசுவரர் ஆலயத்தில் 1008 சங்காபிஷேகம் சிறப்புற நடைபெற்றது.



காஞ்சிபுரம் - ஏகாம்பரநாதர் கோயில்



திருக்கொடுங்குன்றம் - பிரான்மலை—கோயில் தோற்றம்



ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் - காஞ்சி

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept , Madras 34 Printed at Manorama Press, 39, M. J. B. St, Madras-5.